உ

கணபதி துணை.

# சூடாமணி நிகண்டு.

பதினோராவது மூலமும் உரையும்,
பன்னிரண்டாவது மூலமும்.

ஸ்ரீலஸ்ரீ

## ஆறுமுகநாவலரவர்கள்

பரம்பரை
யாழ்ப்பாணம் மேலைப்புலோலி
மகாவித்வான்

## நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

மாணாக்கர்

### ப. கணேசமுதலியார் அவர்களால்

பன்னிரண்டாவதுதொகுதிக்கு
புதுக்கியும் திருத்தியும் விளக்கியுஞ் சேர்த்துக்
கொடுத்த

### உ ரை யு ம்.

சென்னை:
பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

இதன்விலை] 1919. [அணா-12.

Registered Copy Right.

கணபதிதுணை.

# பதினோராவது

## ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி.

### காப்பு.

முடிவிலின்பத்துமூவாமுதல்வனைப்போற்றிசெய்தே
அடிதொறுமிரண்டுமொன்றுமாதியிற்பொருளடக்கி
நடைபெறுககரமாதினகரவீறெதுகையாகப்
படியிலோர்சொற்பொருட்பல்விதத்தொகைபகரலுற்றாம்.

இ-ள். முடிவில் இன்பத்து மூவா முதல்வனைப் போற்றிசெய்து - அளவில்லாத இன்பத்தையுடைய கெடாத அருகக்கடவுளைத் துதிசெய்து,—அடிதொறும் இரண்டும் ஒன்றும் ஆதியிற் பொருள் அடக்கி - அடிகடோறும் இரண்டு சொல்லினும் ஒரு சொல்லினும் முதலிற் பொருள்களை அமைத்து,—நடைபெறு ககரம் ஆதி னகர ஈறு எதுகை ஆக - நடைபெற்றுவரும் ககரவெதுகை முதல் னகரவெதுகையிறுதியாக,—படியில் - இவ்வுலகின்கண்,—ஓர்சொற் பல்விதப் பொருள்தொகை பகரல் உற்றாம் - ஒருசொற் பல்வகைப் பொருட்டொகுதியை (யாம்) சொல்லலுற்றாம் எ-று.

இந்நூல் ஆசிரியர், அருக மதத்தவராகலின் "முடிவிலின் பத்து மூவா முதல்வனை" என்றதற்கு அருகக்கடவுள் எனப் பொருள் கொள்ளப்பட்டது. இது தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளும் உரைத்ததனால், **தற்சிறப்புப் பாயிரம்** எனப்படும். என்னை? "தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு - மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" என்பது சூத்திரமாகலின். "மூவா முதலா வுலகம் மொரு மூன்று மேத்தத் - தாவாத வின்பந் தலையாயது தன்னினெய்தி" என்று **சிந்தாமணியாரும்** அருகக்கடவுளை முதலிற்கூறியது காண்க. முடிவி லின்பங் கூறவே ஏனைய குணங்களும் போதரலுணர்க.

# ககரவெதுகை.

பகவனேயீசன்மாயோன்பங்கயன்சினனேபுத்தன்
பகலேநாளொருமுகூர்த்தம்பகலவனடுவேதேசு
மகரமேசுறாப்பூந்தாதாம்வசிகூர்மைவசியம்வாளே
அகமனமனையேபாவமகலிடமுள்ளுமாமே. (௧)

சிகரிகோபுரமேவெற்புச்சீறெலிகருநாரைப்பேர்
சிகழிகைமயிர்முடிப்பேர்சிறந்தவாசிகைதேமாலை
சிகரமேமலையினுச்சிதிரைசென்னிதிவலைவெற்பாம்
மகம்யாகமோர்நாளென்பமாய்வென்பமறைவுஞ்சாவும். (௨)

இகல்பகைவலிபோர்முப்பேரிகுளையேதோழிநட்பாம்
புகரென்பமழைக்கோள்குற்றம்புற்கெனுநிறமுமுப்பேர்
நகமலையுகிர்மரப்பேர்நகைமகிழ்வொளிசிரிப்பாம்
ககனம்விண்படைகாடென்பகடவுடேமுனிநன்மைப்பேர். (௩)

சாகஞ்சாகினிவெள்ளாடுதேக்கெனுந்தருவுமாமே
பாகலேகாரவல்லிபலாவென்றும்பகரலாமே
யூகமேகருங்குரங்கோடுட்பொருளுணர்தறர்க்கம்
நாகம்விண்குரங்குபுன்னைநற்றூசுமலைபாம்பியானை. (௪)

திகிரியேமூங்கில்வட்டந்தேருருளாழிவெற்பாம்
சிகியென்பமஞ்ஞைதீயாந்தீதுறுகேதுவும்பேர்
ஞெகிழியேசிலம்பினுமநெருப்புறுகொள்ளிக்கும்பேர்
எகினமேபுளிமாஞாளிகவரிமாநீர்நாயன்னம். (௫)

ஆகுவேயெலியினுமமாம்பெருச்சாளிக்கும்பேர்
யோகமேதியானங்கூட்டமுபாயமாமுயர்ச்சிக்கும்பேர்
போகியிந்திரன்பாம்பென்பபோகில்புட்பொதுப்பூமொட்டாம்
கோகிலங்குயில்பல்லிப்பேர்குடங்கரேகுடிசைகும்பம். (௬)

பொகுட்டுதாமரைப்பூங்கொட்டைபொருப்புச்சேற்றெழுந்தகொப்பு
இகுத்தலேசெகுத்தல்வீழ்த்தலிரித்தலோடழைத்தலீதல் [ள்
புகைக்கிநாமந்தூமம்போற்றும்யோசனைக்கும்பேரே
அகைத்தல்வேதனையொடித்தலறுத்திடலுயர்த்தலாமே. (௭)

சிக்கமேகுடுமிநாமஞ்சீப்புடனுறியுமேற்கும்
கொக்குமாமரமேசெந்நாய்குரண்டமேகுதிரைமூலம்
வக்கிரங்கொடுமைமீளன்மடங்குதலுடனேவட்டம்
சக்கிரிகுயவன்செக்கான்றராபதிநெடுமால்பாம்பு. (௮)

# ககரவெதுகை.

பகவனென்பது—சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தன். ௫.

பகல்—நாள், ஒருமுகூர்த்தகாலம், சூரியன், நடு, பிரகாசம். ௫.

மகரம்—சுறாமீன், பூந்தாது. ௨. வசி—கூர்மை, வசியம், வாள். ௩.

அகம்—மனம், வீடு, பாவம், பூமி, உள். ௫.

சிகரி—கோபுரம், மலை, எலி, கருநாரை. ௪.

சிகழிகை—மயிர்முடி, சிகைமாலை, பூமாலை. ௩.

சிகரம்—மலையினுச்சி, அலை, தலை, துளி, மலை. ௫.

மகம்—யாகம், ஒருநட்சத்திரம். ௨. மாய்வு—மறைவு, சாவு. ௨.

இகல்—பகை, வலிமை, யுத்தம். ௩. இகுளை—தோழி, சுற்றம். ௨.

புகர்—சுக்கிரன், குற்றம், கபிலநிறம். ௩.

நகம்—மலை, நகம், மரம். ௩. நகை—மகிழ்ச்சி, பிரகாசம், சிரிப்பு. ௩.

ககனம்—ஆகாயம், சேனை, காடு. ௩.

கடவுள்—தெய்வம், முனிவன், நன்மை. ௩.

சாகம்—சிறுகீரை, வெள்ளாடு, தேக்கமரம். ௩.

பாகல்—பாகற்கொடி, பலாமரம். ௨.

யூகம்—கருங்குரங்கு, உட்பொருளறிதல், தருக்கம். ௩.

நாகம்—ஆகாயம், குரங்கு, புன்னைமரம், நல்லாடை, மலை, பாம்பு, யானை. ௭.

திகிரி-மூங்கில், வட்டவடிவு, தேர், தேருருளை, சக்கராயுதம், மலை. ௬.

சிகி—மயில், நெருப்பு, கேது. ௩.

ஞெகிழி—சிலம்பு, நெருப்புறுவிறகு. ௨.

எகினம்—புளிமா, நாய், கவரிமா, நீர்நாய், அன்னப்புள். ௫.

ஆகு—எலி, பெருச்சாளி. ௨. யோகம்—தியானம், கூட்டம், உபாயம், உயர்ச்சி. ௪.

போகி—இந்திரன், பாம்பு. ௨.. போகில்-பறவைப்பொது, பூவரும்பு.

கோகிலம்—குயில், பல்லி. ௨. குடங்கர்—குடிசை, குடம். ௨.

பொகுட்டு—தாமரைக்கொட்டை, மலை, சேற்றிலெழுங்குமிழி. ௩.

இகுத்தல்—கொல்லுதல், வீழ்த்துதல், சாய்த்தல், அழைத்தல், கொடுத்தல். ௫. புகை—புகை, யோசனைதூரம். ௨.

அகைத்தல்—வருத்தம், முறித்தல், அறுத்தல், உயர்த்தல். ௪.

சிக்கம்—குடுமி, சீப்பு, உறி. ௩.

கொக்கு—மாமரம், செந்நாய், கொக்கு, குதிரை, மூலநட்சத்திரம். ௫.

வக்கிரம்—கொடுமை, மீளுதல், மடங்குதல், வட்டம். ௪.

சக்கிரி—குயவன், செக்கான், அரசன், திருமால், பாம்பு. ௫.

தூக்கென்பபாட்டின்கூத்துந்துலாமுமாராய்தலும்பேர்
பாக்கென்பதெதிர்காலத்தைப்பகரிடைச்சொற்றுவர்க்காய்
மேக்குமேற்றிசைமேலும்பேர்மெய்யுண்மையுடலுமாமே
ஊக்கமேவலியுற்சாகமுள்ளத்திண்மிகுதிக்கும்பேர். (கூ)

பகடிபம்பெருமையேறுபஃறியாண்மேதியைம்பேர்
தகடிலையைம்மையென்பதபனனேயிரவிதீயாம்
அகடென்பநடுவேகுக்கியருளென்பகருணைசத்தி
மகரந்தங்கள்ளுந்தேனுமலர்த்தாதும்வழங்குமுப்பேர். (கo)

சகுந்தம்புட்பொதுவேகங்கஞ்சடையென்பவேணிவேராம்
சிகண்டியேபாலையாழின்றிறத்திசைமயிலலிப்பேர்
சகுனிபுண்ணிமித்தம்பார்ப்போன்சமமென்பதமரொப்பாகும்
சகுனமேகிழங்குபுள்ளின்சாதியுநிமித்தமும்பேர். (கக)

சக்கரம்பெருமையோர்புட்டரணியேபிறப்புவட்டம்
மிக்கதேருருளேயாழிவரையெனவிளம்புமெண்பேர்
பக்கம்புட்சிறகுநட்புப்பகர்திதியருகுமாகும்
நக்கனேயருகன்சம்புநிருவாணிநாட்டுமுப்பேர். (கஉ)

பூகமேதிரளேபூகம்புண்கமென்பதுநோய்துன்பம்
வாகுவேயழகுதோளாமாசியேமகமோர்மாதம்
பாகமேபிச்சைபங்காம்பயோதரம்புயலேகொங்கை
வாகைபண்பொழுக்கம்வெற்றிதவந்தொழில்வழங்கன்மிக்காம். (கங)

நோக்கென்பதழகுபார்வைநுதலென்பபுருவநெற்றி
சேக்கையேமிருகந்துஞ்சுமிடமுலைசிறந்தபாயல்
பூக்கமேகமுகூரென்பபுலிங்கந்தீப்பொறியூர்ப்புள்ளாம்
ஆக்கம்பூமகள்செல்வப்பேரறல்கருமணனீராமே. (கச)

சீகரங்கரகம்வீசுங்கவரியுந்திவலையும்பேர்
சாகரந்துயிலொழித்தல்சமுத்திரமிருபேர்சாற்றும்
காகுளிதவிசுகண்டத்தெழுமொலியிசையுங்காட்டும்
ஈகைபொன்குடை * யிங்கைப்பேரிரவியேமலையாதித்தன். (கரு)

தகையென்பதழகுபண்புதயையொடுபெருமைநாற்பேர்
அகியென்பதரவிரும்பாமரிட்டமேகள்ளுக்காக்கை
ககமென்பதம்புபுள்ளாங்கடித்தலொப்பையம்வேகம்
அகவல்பாமயிற்குரல்கூத்தந்தமேயழகீறென்ப. (கசா)

* இண்டைப்பேர் என்றும்பாடம். இண்டை-புலிதொடக்கி.

தூக்கென்பது—செய்யுள், கூத்து, நூறுபலம், ஆராய்தல். ௪.
பாக்கு—ஓர்எதிர்காலவினையெச்சவிகுதி, பாக்கு. ௨.
மேக்கு—மேற்றிசை, மேல். ௨. மெய்—உண்மை, சரீரம். ௨.
ஊக்கம்—வலிமை, உற்சாகம், உள்ளக்கிளர்ச்சி. ௩.

பகடு—யானை, பெருமை, பேரெருது, ஓடம், எருமைக்கடா. ௫.
தகடு—இலை, தகட்டுவடிவு. ௨. தபனன்—சூரியன், நெருப்பு. ௨.
அகடு—நடு, வயிறு. ௨. அருள்—கிருபை, சிவசத்தி. ௨.
மகரந்தம்—கள், தேன், பூந்தாது. ௩.

சகுந்தம்—பறவைப்பொது, கழுகு. ௨. சடை—சடை, வேர். ௨.
சிகண்டி—பாலையாழ்த்திறத்தோரிசை, மயில், பேடி. ௩.
சகுனி—பறவை, சகுனம்பார்ப்பவன். ௨. சமம்-யுத்தம், உவமை. ௨.
சகுனம்—கிழங்கு, பறவைச்சாதி, சகுனம். ௩.

சக்கரம்—பெருமை, ஓர்பறவை, பூமி, பிறப்பு, வட்டவடிவு, தேருருளை, கடல், மலை. ௮.
பக்கம்—பறவையினிறகு, சிநேகம், பிரதமைமுதலியதிதி, அருகு.
நக்கன்—அருகன், சிவன், நிருவாணி. ௩.

பூகம்—திரட்சி, கமுகு. ௨. புன்கண்—நோய், துன்பம். ௨.
வாகு—அழகு, புயம். ௨. மாசி—மகநட்சத்திரம், ஓர்மாதம். ௨.
பாகம்—பிச்சை, பங்கு. ௨. பயோதரம்—மேகம், முலை. ௨.
வாகை—குணம், ஒழுக்கம், வெற்றி, தவம், தொழில், கொடுத்தல், மிகுதி. ௭.

நோக்கு—அழகு, கண். ௨. நுதல்—புருவம், நெற்றி. ௨.
சேக்கை—விலங்கின்படுக்கை, முலை, மனிதர்படுக்கை. ௩.
பூக்கம்—கமுகு, ஊர். ௨. புலிங்கம்-நெருப்புப்பொறி, ஊர்க்குருவி.
ஆக்கம்—இலக்குமி, செல்வம். ௨. அறல்—கருமணல், நீர். ௨.

சீகரம்—கரகம், சாமரம், துளி. ௩. சாகரம்-துயிலொழித்தல், கடல்.
காகுளி—ஆசனம், மிடற்றெழுமோசை, இசை. ௩.
ஈகை—பொன், கொடுத்தல், ஈங்கை. ௩.
இரவி—மலை, சூரியன். ௨.

தகை—அழகு, குணம், அன்பு, பெருமை. ௪.
அகி—பாம்பு, இரும்பு. ௨. அரிட்டம்—கள், காக்கை. ௨.
ககம்—அம்பு, பறவை. ௨. கடுத்தல்-உவமை, சந்தேகம், சீக்கிரம். ௩.
அகவல்—ஆசிரியப்பா, மயிற்குரல், ஆடல். ௩. அந்தம்-அழகு, முடிவு.

அக்கென்புவிடைமுரிப்புமணிசங்குமணியுமாகும்
நக்கலேநகையுண்டற்பேர்ஞாட்பமர்பாரங்கூட்டம்
இக்கென்பகரும்புகள்ளாமீரமேகுளிர்ச்சியன்பு
மக்கண்மானுடர்சிறார்பேர்வரைதலைகொள்ளனீக்கல். (சஎ)

கேசயமஞ்ஞையோர்பண்ணசுணமாக்கிளத்துமுப்பேர்
தோகையேமயில்வான்மஞ்ஞைவிலங்கின்வால்சொல்லுமுப்பேர்
போகமேபாம்பின்மெய்யும்போகத்தின்விகற்புமாகும்
போகுதநெடுமைநேர்மைபோகுதலெனுமுப்பேரே. (சஅ)

கைக்கிளையிசைவிகற்பமொருதலைக்காமமும்பேர்
சுக்கைதாரகைமாலைப்பேர்சூத்திரம்பொறிநூனூற்பா
எக்கரேசொரிதலோடுகுவிதலுமிருபேரென்ப
மொக்குளேகுமிழிபூவின்முகிழெனமொழியலாமே. (சகூ)

ககரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் — உ0.

---

# ஙகரவெதுகை.

---

புங்கமேயுயர்ச்சியம்புபொருமம்பின்குதைமுப்பேரே
திங்களம்புலிமாதப்பேர்சித்திரனேவன்றச்சன்
கங்கென்பவரம்பின்பக்கங்கருந்தினைபருந்துமாமே
தொங்கலேபீலிக்குஞ்சந்தூக்கொடுதொடுத்தமாலை. (க)

சங்கமேகணைக்காலோரெண்சபைசங்குபுலவர்நெற்றி
பங்கென்பமுடமேயாகும்பாதியுஞ்சனியுமேற்கும்
வங்கமேவெள்ளிநாவாய்வழுதலையீயமாமே
அங்கணஞ்சேறுமுற்றமாஞ்சலதாரைக்கும்பேர். (உ)

ஞாங்கர்வேல்பக்கமுன்புமேலெனநான்குமாகும்
தூங்கலேசிருத்தம்யானைதுயில்சோம்புதராசுதாழ்தல்
வாங்கலேவளைத்தல்கொள்ளல்வையென்பகூர்மைவைக்கோல்
வேங்கைபொன்புலிமரப்பேர்வீநீக்கம்பூப்புட்சாவாம். (ங)

மங்குல்காரிருள்விண்முப்பேர்மருந்தமுதொடுமருந்தாம்
பங்கியேபிறமயிர்க்கும்பகருமாண்மயிர்க்கும்பேராம்
அங்கதம்பன்னகந்தோளணியுடன்வசைச்சொல்லாகும்
பங்கமேசேறுதூசுபழுதொடுபின்னமாமே. (ச)

அக்கென்பது—எலும்பு, இடபத்தின்முரிப்பு, சங்குமணி. ந.
நக்கல்—சிரிப்பு, புசித்தல். உ. ஞாட்பு—யுத்தம், கனம், கூட்டம். ந.
இக்கு—கரும்பு, கள். உ. ஈரம்—குளிர்ச்சி, அன்பு. உ.
மக்கள்—மனிதர், பிள்ளைகள். உ. வரைதல்—கொள்ளுதல், நீக்கல்.
கேகயம்—மயில், ஒருபண், அசுணமா. ந.
தோகை—மயிற்பீலி, மயில், விலங்கின்வால். ந.
போகம்—பாம்பினுடல், போகத்தின்வேறுபாடு. உ.
போகுதல்—நீளம், நேர்மை, போதல். ந.
கைக்கிளை—இராகத்தின்வேறுபாடு, ஒருதலைக்காமம். உ.
சுக்கை—நட்சத்திரம், பூமாலை. உ.
சூத்திரம்—யந்திரம், பஞ்சிநூல், நூற்பா. ந. எக்கர்—சொரிதல், குவிதல். உ.
மொக்குள்—நீர்க்குமிழி, பூவரும்பு. உ.

# ஙகரவெதுகை.

புங்கமென்பது—உயர்ச்சி, அம்பு, அம்புக்குதை. ந.
திங்கள்—சந்திரன், மாதம். உ. சித்திரன்—சித்திரகாரன், தச்சன்.
கங்கு—வரம்பின்பக்கம், கருந்தினை, பருந்து. ந.
தொங்கல்—பீலிக்குஞ்சம், ஆபரணத்தொங்கல், தொடுத்தமாலை ந.
சங்கம்—கணைக்கால், * ஓரெண், கூட்டம், சங்கு, புலவர், நெற்றி.
பங்கு—முடம், பாதி, சனி. ந.
வங்கம்—வெள்ளி, மரக்கலம், வழுதலை, ஈயம். ச.
அங்கணம்—சேறு, முற்றம், சலதாரை. ந.
ஞாங்கர்—வேலாயுதம், பக்கம், முன்பு, மேல். ச.
தூங்கல்—கூத்து, யானை, நித்திரை, சோம்பல், தராசு, தாழ்தல். சு.
வாங்கல்—வளைத்தல், கொள்ளுதல். உ. வை—கூர்மை, வைக்கோல்.
வேங்கை—பொன், புலி, ஓர்மரம். ந. வீ—நீக்கம், மலர், பறவை, சா. ச.
மங்குல்—மேகம், இருள், ஆகாயம். ந. மருந்து—அமுதம், மருந்து.
பங்கி—பிறமயிர், ஆண்மயிர். உ.
அங்கதம்—பாம்பு, வாகுவலயம், வசைச்சொல். ந.
பங்கம்—சேறு, வஸ்திரம், குற்றம், பின்னம். ச.

* நூறுயிரகோடி.

அங்கமேயுடலுறுப்பென்பாறங்கங்கட்டிலைம்பேர்
பிங்கலம்பொன்னும்பொன்னிறத்தையும்பேசலாகும்
பொங்கரேமரத்தின்கோடுபொருப்புயரிலவுமுப்பேர்
பொங்கலேகொதித்தன்மிக்காம்பொச்சாப்புமறவிதீதாம். (௫)

ஙகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் — ௨௫.

# சகரவெதுகை.

பாசனமென்பசுற்றம்பாண்டமுண்கலமும்பன்னும்
வாசமேயிருப்பிடம்பூமணம்புள்ளின்சிறகுதூசாம்
கோசமேமதிலுறுப்பாண்குறிமுட்டைமுறைபண்டாரம்
தேசிகன்வணிகன்றேசாந்தரியொடுகுருவுமாமே. (௧)

மூசன்மொய்த்திடல்சாவென்பமுடலையேதிரட்சியுண்டை
கீசகங்குரங்குவேயாங்கேழ்நிறமொளியொப்பாகும்
வீசலேயெறிதலீவாம்வெம்மையுட்டணம்விருப்பம்
கேசரமகிழ்பூந்தாதாங்கிருட்டியோரீற்றுப்பன்றி. (௨)

ஆசிபடைக்கலமேவாளேயவமதிச்சிரிப்புமுப்பேர்
நிசியிராமஞ்சள்பொன்னும்நீர்புனல்குணம்பூராடம்
பிசியென்பபொய்யுஞ்சோறும்பேசரும்பொருளுமுப்பேர்
சுசிகோடைசுத்தந்தீயாஞ்சுடர்விளக்கிரவியங்கி. (௩)

ஆசென்பவிரைவுகுற்றமற்பமெய்க்கவசநாற்பேர்
காசென்பகோழைகுற்றங்கதிர்விமெணிமுப்பேரே
ஆசினிபலாவிசேடமரவுரிமரக்காழ்விண்ணும்
தேசிகமழகுகாந்திதிசைச்சொல்லோர்கூத்துச்செம்பொன். (௪)

பச்சையேமரகதந்தோல்பரிமளப்புதன்மால்புந்தி
கச்சையென்பதுதழும்புகயிறொடுகவசமுப்பேர்
செச்சைமைவெட்சிதேய்வைதிகையென்பதிசைசுணங்காம்
மிச்சையேபொய்த்தலாகுமிடித்தலஞ்ஞானமுப்பேர். (௫)

பிச்சமாண்மயிரும்பீலிக்குடையும்வெண்குடையுமாகும்
கச்சம்யானைக்கழுத்திற்கயிறளவொடுமரக்கால்
எச்சமேகுறைசேயாகமிபமென்பமரக்கோடியானை
அச்சமேயகத்தியைம்மையஞ்சலிம்முப்பேராமே. (௬)

அங்கமென்பது—உடல், அவயவம், எலும்பு, வேதாங்கம், கட்டில்.
பிங்கலம்—பொன், பொன்னிறம். உ.
பொங்கர்—மரக்கொம்பு, மலை, இலவமரம். ந.
பொங்கல்—பொங்குதல், மிகுதி. உ. பொச்சாப்பு—மறவி, பொல்லாங்கு. உ.

# சகரவெதுகை.

பாசமென்பது—உறவு, பாத்திரம், உண்கலம். ந.
வாசம்—இருப்பிடம், பூமணம், பறவையினிறகு, வஸ்திரம். ச.
கோசம்—மதிலுறுப்பு, ஆண்குறி, முட்டை, புத்தகம், பொக்கிஷம்.
தேசிகன்—செட்டி, தேசாந்தரி, குரு. ந.
மூசல்—மொய்த்தல், சா. உ. முடலை—திரண்டவடிவு, உருண்டவடிவு. உ.
கீசகம்—குரங்கு, மூங்கில். உ. கேழ்—நிறம், பிரகாசம், ஒப்பு. ந.
வீசல்—எறிதல், கொடுத்தல். உ. வெம்மை—வெப்பம், ஆசை. உ.
கேசரம்—மகிழமரம், பூந்தாது. உ. கிருட்டி—தலையீற்றுப்பசு, பன்றி. உ.
அசி—ஆயுதம், வாள், அவமதிச்சிரிப்பு. ந. நிசி—இரவு, மஞ்சள், பொன். ந.
நீர்—சலம், குணம், பூராடநட்சத்திரம். ந.
பிசி—பொய், சோறு, அரும்பொருள். ந. சுசி—கோடைக்காலம், சுத்தம், நெருப்பு. ந. சுடர்—விளக்கு, சூரியன், நெருப்பு. ந.
ஆசு—சீக்கிரம், குற்றம், அற்பம், கவசம். ச.
காசு—கோழை, குற்றம், இரத்தினம். ந.
ஆசினி—ஈரப்பலா, மரவுரி, மரவயிரம், ஆகாயம். ச.
தேசிகம்—அழகு, ஒளி, திசைச்சொல், ஒருகூத்து, பொன். ரு.
பச்சை—மரகதம், தோல், ஒருவாசனைப்புதல், திருமால், புதன். ரு.
கச்சை—தழும்பு, கயிறு, கவசம். ந.
செச்சை—ஆடு, வெட்சி, சாந்தின்குழம்பு. ந. திகை—திசை, தேமல்.
மிச்சை—பொய், தரித்திரம், அறிவில்லாமை. ந.
பிச்சம்—ஆண்மயிர், பீலிக்குடை, வெள்ளைக்குடை. ந.
கச்சம்—யானைக்கழுத்திடுகயிறு, அளத்தல், மரக்கால். ந.
எச்சம்—குறைவு, புத்திரன், யாகம். ந.
இபம்—மரக்கொம்பு, யானை. உ. அச்சம்—அகத்திமரம், தகட்டுவடிவு, பயம். ந.

ஆசையேதிசைபொன்னன்பாமாகுலம்வருத்தமோசை
காசையேகாயாநாணல்காமர்தானழகுகாதல்
பாசமேகயிறுகூளிபகரூசித்துளையன்பாகும்
தூசென்பதாடையானைப்புரசைதூசிப்படைப்பேர். (௭)

தாசியேபரணிசூளை தளியென்பதுளியேகோயில்
வேசரிகழுதையேகோவேறுவேசரியுமாகும்
ஆசுகம்பகழிகாற்றுமந்தரியுமையேதுர்க்கை
கோசிகஞ்சாமவேதங்கூறுபட்டாடைக்கும்பேர். (௮)

பசுவேறுசீவனுவாம்பாரதிவாணிதோணி
வசுவேயான்கன்றும்பொன்னும்வசுக்களுந்தீயுநாற்பேர்
அசமூவாண்டுறுநெல்லாடாமணையென்பகரையேமெத்தை
சசியென்பகர்ப்பூரஞ்சந்திரனயிராணிமுப்பேர். (௯)

விசும்புபொன்னுலகுமேகம்விண்ணொடுதிசையுநாற்பேர்
தசும்புநற்குடமிடாவாஞ்சாத்தனேயருகனையன்
இசைபுகழ்கிளவிபாட்டாமேங்கலேயொலியிரங்கல்
பிசுனனேகோளன்பொய்யனுலோபனும்பேசுமுப்பேர். (௧௦)

வச்சிரஞ்சதுரக்கள்ளிவைரமேகுலிசமுப்பேர்
நொச்சியேசிந்துவாரமதில்சிற்றூர்நுவலலாமே
தச்சனேசித்திரைப்பேர்தபதியன்றூனுமாகும்
உச்சிநண்பகலுச்சிப்பேருறுப்பவயவமுடம்பாம். (௧௧)

பாசென்பபசுமைமூங்கில்பப்பென்பபரப்போடொப்பாம்
மாசென்பசிறுமைகுற்றமழையழுக்கொடுநாற்பேரே
கேசம்பெண்மயிர்க்குமாண்பான்மயிருக்குங்கிளத்தலாகும்
வாசியேகுழன்முன்றுண்மாவாசியென்னேவனாற்பேர். (௧௨)

மிசையென்பதுணவுமேடுமீமிசைச்சொல்லுமுப்பேர்
விசயமேவென்றிவெல்லம்வெங்கதிர்மண்டலப்பேர்
முசலியேயுடும்புதாழைமுந்தியவிராமனோந்தி
வசதிநல்லிடமூர்வீடாம்வரனயன்பரமன்காந்தன். (௧௩)

சகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் — ௩௮.

ஆசையென்பது—திக்கு, பொன், விருப்பம். ௩.
ஆகுலம்—வருத்தம், ஒலி. ௨. காசை—காயாஞ்செடி, நாணற்புல். ௨.
காமர்—அழகு; ஆசை. ௨. பாசம்-கயிறு,பேய்,ஊசித்தொளை.அன்பு.
தூசு—புடைவை, யானைப்புரசை, தூசிப்படை. ௩.

தாசி—பரணிநட்சத்திரம், அடியாள். ௨. தளி—துளி, கோயில். ௨.
வேசரி—கழுதை, கோவேறுகழுதை. ௨. ஆசுகம்—அம்பு,காற்று.௨.
அந்தரி—பார்வதி, தூர்க்கை. ௨.
கோசிகம்—சாமவேதம், பட்டுவத்திரம், புடைவை ௩.

பசு—இடபம், உயிர், பசு. ௩. பாரதி—சரசுவதி, தோணி. ௨.
வசு—பசுவின்கன்று, பொன், அட்டவசுக்கள், நெருப்பு. ௪.
அசம்—மூன்றுவருடத்துநெல், ஆடு. ௨. அணை—கரை,மெத்தை. ௨.
சசி—கர்ப்பூரம், சந்திரன், இந்திராணி. ௩.

விசும்பு—தேவலோகம், மேகம், ஆகாயம், திசை. ௪.
தசும்பு—குடம், மிடா. ௨. சாத்தன்—அருகன், அரிகரபுத்திரன் ௨.
இசை—புகழ், சொல், பாட்டு. ௩. ஏங்கல்—சத்தம், அழுதல். ௨.
பிசுனன்—கோளன், பொய்யன், உலோபன். ௩.

வச்சிரம்—சதுரக்கள்ளி,|வைரம், வச்சிராயுதம். ௩.
நொச்சி—நொச்சிச்செடி, மதில், சிற்றூர். ௩.
தச்சன்—சித்திரைநட்சத்திரம், தச்சன். ௨.
உச்சி—நடுப்பகல், உச்சந்தலை. ௨. உறுப்பு—அவயவம், சரீரம். ௨.

பாசு—பசுமை, மூங்கில். ௨. பப்பு—பரப்பு, ஒப்பு. ௩.
மாசு—அற்பம், குற்றம், மேகம், அழுக்கு. ௪.
கேசம்—கூந்தல், குடுமி. ௨.
வாசி—இசைக்குழல், அச்சுவினிநட்சத்திரம், குதிரை, வாசியென்
னேவல். ௪.

மிசை—உணவு, மேடு, மீமிசைச்சொல். ௩.
விசயம்—வெற்றி,|வெல்லம், சூரியமண்டலம். ௩.
முசலி—உடும்பு, தாழை, பலதேவன், ஓந்தி. ௪.
வசதி—நல்லிடம், ஊர், வீடு. ௩. விரன்—பிரமன், சிவன், கணவன்.

# ஞகரவெதுகை.

துஞ்சலேகிலேபேருகுந்துயில்சோம்புசாவுமாகும்
பஞ்சரஞ்செருந்திகூடாம்பரதரேகழியர்நாய்கர்
கஞ்சமேதாளங்குல்லைகமலம்வெண்கலம்வட்டப்பம்
குஞ்சமீயோட்டிநாழிகுறள்குன்றிகுறளைச்சொல்லே. (௧)

நெஞ்சென்பமனமார்பின்பேர்நிழல்செல்வங்குளிர்ச்சிசாயை
மஞ்சுபூண்வலிவனப்புமழையானைமுதுகிவ்வைந்தே
வஞ்சிமேற்செலவோரூர்பாவல்லிமென்மருங்குற்பெண்ணும்
தஞ்சமேயெளிமையென்பசருபற்றுக்கோடுமாமே. (௨)

அஞ்சனங்கறுப்புமைதிக்கானையிலொன்றுமுப்பேர்
மஞ்சரியேபூங்கொத்துமாலைசெந்தளிருமாகும்
அஞ்சலிவணங்கல்வாவற்பறவையுமாகுமென்ப
இஞ்சியேபுரிசையிஞ்சியெறுழெனபவலிதண்டாமே. (௩)

கிஞ்சுகமுருக்குச்செம்மைகிருட்டிணன்முன்மால்பார்த்தன்
கஞ்சனமேகண்ணடிகரிக்குருவிக்கும்பேரே
பஞ்சமேசிறுமையைந்தாம்பகழியம்பிதன்குதைப்பேர்
வஞ்சனைமாயைபொய்யாமாயன்மால்கருநிறத்தோன். (௪)

குஞ்சியாண்மயிர்புட்பார்ப்புக்குன்றியின்புதன்முப்பேரே
வஞ்சமேகபடம்வாளாமாயம்வஞ்சனைபொய்யென்ப
கஞ்சனேகுறளன்வேதன்களங்கந்தானழுக்குக்குற்றம்
கஞ்சிகைசிவிகையாடைகட்டிடுதிரையுமாமே. (௫)

ஞகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் — ௪௩.

# டகரவெதுகை.

நடலைவஞ்சனைபொய்யென்பநடுங்கியநடுக்கமுப்பேர்
மடல்பனையேடுபோல்வமலரிதழோர்நூற்கும்பேர்
படர்நடைநினைப்புநோவாம்பகர்ந்திடில்வீரர்க்கும்பேர்
குடநகர்பசுவோர்கூத்துக்கும்பமேகரும்பின்கட்டி. (௧)

மாடமேயுழுந்தோடில்லாமமழையென்பகுளிர்ச்சிமேகம்
கூடமின்மறைவுகொல்லன்சம்மட்டிகுவட்டினுச்சி
சேடனோர்சாதிபாங்கன்செகந்தாங்குமனந்தனென்ப
கேடகம்பரிசைவேறோர்கேடிலூர்பலகைமுப்பேர். (௨)

# ஞகரவெதுகை.

துஞ்சலென்பது—நிலைபெறுதல், நித்திரை, சோம்பல், சா. ௪.
பஞ்சரம்—செருந்திமரம், கூடு. ௨. பரதர்—நெய்தநிலமாக்கள், செட்டிகள். ௨.
கஞ்சம்—தாளம், கஞ்சா, தாமரை, வெண்கலம், அப்பம். ௫.
குஞ்சம்—ஈயோட்டி, நாழி, குறள், குன்றிக்கொடி, குறளைச்சொல். ௫.
நெஞ்சு—மனம், மார்பு. ௨. நிழல்—செல்வம், குளிர்ச்சி, சாயை. ௩.
மஞ்சு—ஆபரணம், வலிமை, அழகு, மேகம், யானைமுதுகு. ௫.
வஞ்சி—பகைவர்மேற்செல்லுதல், ஓரூர், ஒருபா, ஒருகொடி, பெண்.
தஞ்சம்—எளிமை, பற்றுக்கோடு. ௨.
அஞ்சனம்—கறுப்பு, மை, மேற்றிசையானை. ௩.
மஞ்சரி—பூங்கொத்து, பூமாலை, தளிர். ௩.
அஞ்சலி—கும்பிடல், வாவற்பறவை. ௨.
இஞ்சி—மதில், இஞ்சி. ௨. எறுழ்—வலிமை, தண்டாயுதம். ௨.
கிஞ்சுகம்—முருக்கமரம், சிவப்பு. ௨. கிருட்டிணன்—கண்ணன், அருச்சுனன். ௨.
கஞ்சனம்—கண்ணாடி, கரிக்குருவி. ௨. பஞ்சம்—சிறுவிலைக்காலம், ஐந்து. ௨. பகழி—அம்பு, அம்புக்குதை. ௨. வஞ்சனை—மாயை, பொய். ௨. மாயன்—திருமால், கருநிறத்தோன். ௨.
குஞ்சி—ஆண்மயிர், பறவைக்குஞ்சு, குன்றிப்புதல். ௩.
வஞ்சம்—கபடம், வாள். ௨. மாயம்—வஞ்சனை, பொய். ௨.
கஞ்சன்—குறளன், பிரமன். ௨. களங்கம்—அழுக்கு, குற்றம். ௨.
கஞ்சிகை—தண்டிகை, வத்திரம், இடுதிரை. ௩.

---

# டகரவெதுகை.

நடலையென்பது—வஞ்சனை, பொய், அசைவு. ௩.
மடல்—பனையேடுபோல்வன, பூவிதழ், ஒருபிரபந்தம். ௩.
படர்—வழி, நினைப்பு, துன்பம், படைவீரர். ௪.
குடம்—பட்டினம், பசு, ஒருகூத்து, குடம், வெல்லக்கட்டி. ௫.
மாடம்—உழுந்து, வீடு. ௨. மழை—குளிர்ச்சி, மேகம். ௨.
கூடம்—வீடு, மறைவு, கொல்லன்சம்மட்டி, மலையினுச்சி. ௪.
சேடன்—ஒருசாதியான், தோழன், அனந்தன். ௩.
கேடகம்—பரிசை, ஊர், பலகை. ௩.

இடங்கரேமுதலைதூர்த்தர்குடங்கரிம்முப்பேரென்ப
முடங்கலேமடங்கல்கைதைமூங்கிஞேயோலையம்பேர்
படங்குமேற்கட்டியென்பபகர்பெருங்கொடியுமாகும்
விடங்கமேர்கொடிகொடுங்கைமிதவையேதெப்பஞ்சோறும். (ங)

குடிஞைபுட்பொதுவும்யாறுங்கூகையுமாகுமென்ப
தடிவயலுலக்கைவில்லுத்தண்டுமின்றசையுடும்பாம்
தொடிவளையொருபலப்பேர்சூழ்ந்தகங்கணமுமாகும்
மடியடங்குதலேசோம்புவயிறுநோய்புடைவைதாழை. (ச)

படிவமேவடிவநோன்பாம்பந்தமேகிளையுங்கட்டும்
வெடியச்சம்பரிமளிக்குமென்புகைவெளியிம்முப்பேர்
துடியேலம்பறைகாலப்பேர்தூத்தூய்தூன்பற்றுக்கோடாம்
கொடிறுபூசங்கதுப்பாங்குரலையேகடலோர்கூத்து. (ரு)

கடிகைநாழிகையேதுண்டங்கதவிடுதாழேமுப்பேர்
படிறுபொய்களவிரண்டாம்பகர்தலேவிற்றல்பேசல்
சுடிகையேமகுடமுச்சிசுட்டியுமிட்டபேரே
இடியிடிப்பேரேநென்மாவேற்றிடுமுறுதிச்சொல்லே. (சா)

நாடிநாழிகைநரம்பாநத்தல்கேடேனேயாக்கம்
பாடியேநகரநாடுபாசறையாயரூர்ப்பேர்
கோடிகந்துகில்பூந்தட்டாங்குடம்பையேமுட்டைகூடு
கோடியெண்புதுமைதூசாங்குடுமியேவெற்றியுச்சி. (எ)

உடுவிண்மீன்கிடங்குநாவாயோட்டுங்கோலம்பிலீர்க்காம்
கடுவிடமுள்ளுத்தானேயரிதகிகசப்புநாற்பேர்
படுமரக்குலையேகள்ளுப்பரவுநீர்நிலைநன்மைப்பேர்
படுதலேயொலியின்றுதல்பகரிலுண்டாதல்பூத்தல். (அ)

மாடுபொன்பக்கஞ்செல்வம்வைகல்வைகறைநாடங்கல்
சேடென்பபெருமைநன்மைதிரட்சியேயழகுநாற்பேர்
பாடிடம்பெருமையோசைபட்டேபட்டாடைசிற்றூர்
ஈடென்பகுழைவேயொப்பேவலியொடுபெருமையும்பேர். (கூ)

மடையென்பமதகுசோறுமணிப்பணிக்கடைப்பூட்டும்பேர்
படைபடைக்கலங்கலப்பைபடுக்கைபல்லணமேதானை
இடைநடுவென்பமற்றுமிடப்பெயர்நுசுப்புமாமே
மடமறியாமைசத்திரமன்னியமுனிவாசப்பேர். (க0)

இடங்கரென்பது—முதலை, தூர்த்தர், குடம். ௩.
முடங்கல்—மடங்குதல், தாழை, மூங்கில், நோய், ஓலை. ரு.
படங்கு—மேற்கட்டி, பெருங்கொடி. ௨.
விடங்கம்—அழகு, வீதியிற்கட்டியகொடி, கொடுங்கை. ௩.
மிதவை—தெப்பம், சோறு. ௨.
குடிஞை—பறவைப்பொது, நதி, கோட்டான். ௩.
தடி—வயல், உலக்கை, வில், தண்டாயுதம், மின்னல், தசை, உடும்பு. எ.
தொடி—கைவளை, ஒருபலம், கங்கணம். ௩.
மடி—அடங்குதல், சோம்பல், வயிறு, நோய், புடைவை, தாழை. சு.
படிவம்—உருவம், நோன்பு. ௨. பந்தம்—உறவு, கட்டு. ௨.
வெடி—பயம், நறும்புகை, வெளி. ௩. * துடி—ஏலம், பறை, காலநுட்பம். ௩. தூ—சுத்தம், தசை, பற்றுக்கோடு. ௩.
கொடிறு—பூசநட்சத்திரம், கதுப்பு. ௨. குரவை—கடல், கைகோத்தாடல். ௨.
கடிகை—நாழிகை, துண்டம், கதவிடுதாழ். ௩.
படிறு—பொய், களவு. ௨. பகர்தல்—விற்றல், பேசுதல். ௨.
சுடிகை—முடி, உச்சி, சுட்டி. ௩.
† இடி—இடி, நென்மா, உறுதிச்சொல். ௩.
நாடி—நாழிகை, நரம்பு. ௨. நந்தல்—கேடு, ஆக்கம். ௨.
பாடி—நகரம், நாடு, பகைமேற்சென்றோருறை, விடம்முல்லைநிலத்தூர்.
கோடிகம்—வத்திரம், பூந்தட்டு. ௨. குடம்பை—முட்டை, கூடு. ௨.
கோடி—ஓரெண், புதுமை, வத்திரம். ௩. குடுமி—வெற்றி, உச்சி. ௨.
உடு—நட்சத்திரம், அகழி, மரக்கலமோட்டுங்கோல், அம்புச்சிறகு. ௪.
கடு—நஞ்சு, முள், கடுமரம், கசப்பு. ௪.
படு—மரக்குலை, கள், நீர்நிலை, நன்மை. ௪.
படுதல்—ஒலித்தல், அழிதல், உண்டாதல், பூத்தல். ௩.
மாடு—பொன், பக்கம், செல்வம். ௩.
வைகல்—விடியற்காலம், நாள், தங்குதல். ௩. சேடு—பெருமை, நன்மை, திரட்சி, அழகு. ௪. பாடு—இடம், பெருமை, ஓசை. ௩.
பட்டு—பட்டுவத்திரம், சிற்றூர். ௨.
ஈடு—குழைவு, ஒப்பு, வலிமை, பெருமை. ௪.
மடை—மதகு, சோறு, அணிகளின் கடைப்புணர்வு. ௩.
படை—ஆயுதம், கலப்பை, நித்திரை, குதிரைக்கலனை, சேனை. ரு.
இடை—நடு, இடம், இடை. ௩.
மடம்—அறிவின்மை, சத்திரம், முனிவரிருப்பிடம். ௩.

---

* துடி - இடைசுருங்குபறை, குறிஞ்சிப்பறை, பாலைப்பறை.
† இடி - மாப்பொதுவின் பெயருமாம்.

வாடையென்பதூதான்வீதிவடகாற்றுத்தானுமாமே
ஆடுமேழகம்வெற்றிப்பேரல்கனாள்சுருங்கல்வைகல்
கோடைமேல்காற்றினோடுகுதிரைவெண்காந்தளென்ப
ஓடைநீர்நிலைகிடங்கேயொருமரம்வல்லிபட்டம். (கக)

அடுப்பென்பபரணிநாளேயச்சமேசுல்லிமுப்பேர்
வடுச்செப்புதபூம்புவண்டாமத்தகநெற்றிசென்னி
இடக்கரேமறைத்தவார்த்தைகும்பமுமென்பநூலோர்
கடைப்பிடிமறப்பிலாமைகருதியதேற்றமாமே. (கஉ)

பட்டமேயோடைதூசுபதவிவாள்கவரிமாவாம்
புட்டமேகாசமாகும்புடைவையுநிறைவுமுப்பேர்
குட்டமேதொழுநோயாழங்குளமெனப்பெயர்முப்பாற்றே
வட்டமேபரிசைநீர்ச்சால்வலயங்கைம்மணிதூசூர்கோள். (கங)

திட்டையேயுரலுமேடுந்திண்ணையுநண்ணுமுப்பேர்
தட்டைவேய்தினைத்தாள்கிள்ளைதனைக்கடிகோலேமுண்டம்
கிட்டியேதலையிற்றூவாங்கிருட்டியாந்தாளமுப்பேர்
கட்டளைநிறைகல்லொப்பேயிட்டிகையியற்றலாணி. (கச)

நாட்டங்கண்ணோர்பண்வாளாநாகுசங்கிளமைநத்தை
ஒட்டமேலுதடேதோல்வியுயிரென்பகாற்றேசீவன்
கோட்டங்கோண்படப்பைநாடுகோயிலவ்வியமான்கொட்டில்
தோட்டியங்குசங்கபாடந்துணையென்பதளவுமொப்பும். (கரு)

தடமலைபெருமைகோணஞ்சரிகரையகலம்வாவி
அடல்கொலைவலிபோராகுமருத்தமேபொருள்பொன்பாதி
உடல்பொருளாகமென்பவோங்கல்வெற்புயரமூங்கில்
விடபமேயிடபராசிவிடைமரக்கொம்புமுப்பேர். (கசு)

கடகமேசேனைவட்டங்கைவளைமதினாற்பேரே
வடகந்தோலத்தவாளம்வலமென்பதிடமேவெற்றி
படுவிகள்விற்பாள்குண்டம்பரமென்பகவசமெய்யாம்
நொடிபிதிர்கிளவியாகுநூனிச்சயமேகுன்றல். (கஎ)

கடங்கயிறுவாக்கதுப்புக்கான்சுரமுடம்புநீதி
குடங்கடாமீமம்யானைக்குழாங்கடன்முழவைந்தேழாம்
மடங்கலேயசனிசீயமறலிநோயுகமூழித்தீ
படங்கரிமுகபடாநற்றுகில்பாம்பின்பணமுப்பேரே. (கஅ)

வாடையென்பது—தெரு, வடகாற்று. உ. ஆடு—ஆடு, வெற்றி. உ.
அல்கல்—நாள், குறைதல், தங்குதல். ௩.
கோடை—மேல்காற்று, குதிரை, வெண்காந்தள். ௩.
ஓடை—நீர்நிலை, அகழ், ஒருவகைமரம், ஒருவகைக்கொடி, நெற்றிப்பட்டம். ரு.
அடுப்பு—பரணிநட்சத்திரம், அச்சம், அடுப்பு. ௩.
வடு—செம்பு, தழும்பு, வண்டு. ௩. மத்தகம்—நெற்றி, தலை. உ.
இடக்கர்—மறைத்தசொல், * குடம். உ.
கடைப்பிடி—மறவாமை, தேற்றம். உ.
பட்டம்—குளம், வத்திரம், பதவி, வாள், கவரிமா. ரு.
புட்டம்—காக்கை, சீலை, நிறைவு. ௩.
குட்டம்—குட்டரோகம், ஆழம், குளம். ௩.
வட்டம்—பரிசை, நீர்ச்சால், வட்டம், கைம்மணி, சீலை, பரிவேடம். ரு.
திட்டை—உரல், மேடு, திண்ணை. ௩.
தட்டை—மூங்கில், தினைத்தாள், கிளிகடிகோல், மொட்டை. ச.
கிட்டி—தலையீற்றுப்பசு, பன்றி, தாளம். ௩.
கட்டளை—நிறையறிகருவி, உவமை, செங்கலியற்றுங்கருவி, உரையறிகருவி. ச.
நாட்டம்—கண், ஒருபண், வாள். ௩. நாகு—சங்கு, இளமை, நத்தை.
ஓட்டம்—மேலுதடு, தோல்வி. உ. உயிர்—காற்று, சீவன். உ.
கோட்டம்—வளைவு, மருதநிலத்தூர், நாடு, கோயில், அழுக்காறு, பசுச்சாலை. சு.
† தோட்டி—யானைத்தோட்டி, கதவு. உ. துணை—அளவு, ஒப்பு. உ.
தடம்—மலை, பெருமை, வளைவு, வழி, நீர்க்கரை, அகலம், குளம். எ.
அடல்—கொல்லுதல், வலி, போர். ௩. அருத்தம்—சொற்பொருள், பொன், பாதி. ௩.
உடல்—பொன், உடம்பு. உ. ஓங்கல்—மலை, உயர்ச்சி, மூங்கில். ௩.
விடபம்—இடபராசி, இடபம், மரக்கொம்பு. ௩.
கடகம்—சேனை, வட்டம், கைவளை, மதில். ச.
வடகம்—தோல், அத்தவாளம். உ. வலம்—இடம், வெற்றி. உ.
படுவி—கள்விற்பவள், தொழுத்தை. உ. பரம்—கவசம், சரீரம். உ.
நொடி—விடுகதை, சொல். உ. நூனம்—நிச்சயம், குறைதல். உ.
கடம்—கயிறு, யானைக்கவுள், காடு, அருநெறி, உடம்பு, நீதி, குடம், யானைமதம், சுடலை, யானைக்கூட்டம், கடன், குடமுழா. கஉ.
மடங்கல்—இடி, சிங்கம், யமன், நோய், யுகம், ஊழித்தீ. சு.
படம்—யானைமுகபடாம், சீலை, பாம்பின்படம். ௩.

---

* இடங்கர் - குடம். † தோட்டி - புலையனுமாம்.

ஆடலேபெண்ணுண்கூடல்வார்த்தைகூத்தாடல்வென்றி
பாடலஞ்சிவப்பினோடுபோதிரிகுதிரைமுப்பேர்
கோடரங்குரங்குசோலைகொம்பொடுகுதிரையாகும்
ஆடவர்புருடர்நாமமாமிளையவர்க்கும்பேரே. (க௯)

கடிமணம்விரைவுகூர்மைகாலம்பேய்விளக்கங்காப்பு
வடிவச்சம்வாசமையம்வரைவுவிம்மிதமேழாறும்
வடுகேயிந்தளராகப்பேர்மருதயாழ்த்திறனுமாமே
வடவையேகுதிரைப்பெட்டையுவாப்பிடிவடவைத்தீயாம். (உ0)

கோடுசெங்கூதுகொம்புமரக்கொம்புவிலங்கின்கொம்பு
நீடுசெய்வரம்புகுன்றின்முகடுநீர்க்கரையேழ்பேராம்
மோடுமேடுதரமாகுமுறுவலேநகைத்தல்பல்லாம்
ஆடியேயோர்மாதங்கண்ணாடியுத்தராடமாமே. (உக)

தட்டுத்தேர்நடுவுகுற்றந்தட்டொடுபரிசைமுட்டாம்
செட்டிவாணிகன்செவ்வேளாஞ்செப்புரைகரண்டகப்பேர்
மட்டென்பதெல்லைகள்ளாமார்க்கமேசமயம்வீதி
பட்டிகையென்பகச்சுப்பகடெனிரதமாமே. (உஉ)

கடைமுடிவிடம்வாயிற்பேர்களேவரம்பிணமுடம்பாம்
உடைதுகில்செல்வமென்பவுடுக்கைதண்ணுமைதுகிற்பேர்
அடையிலைகனமேயப்பமடுத்தல்செல்வழியைம்பேராம்
நடைவழியொழுக்கஞ்செல்வநாரென்பகயிறன்பாமே. (உங)

விடையெதிர்மொழியுமேறும்விடுத்தலும்விளம்புமுப்பேர்
இடைசடையுவமைநெட்டிகீதமேயிசையும்வண்டும்
படியங்கவடிசோபானம்பகைகுணமுவமைபாராம்
குடிகுலம்புருவமூராங்கொடிவல்லிதுவசங்காக்கை. (உச)

நட்டமேநடனங்கேடாநகரென்பமனையுமூரும்
தொட்டலென்பதுவேயுண்டறோண்டல்கைதீண்டன்முப்பேர்
தட்டலேதடைகிட்டற்பேர்தையொருமாதம்பூசம்
கட்டலென்பதுதடுத்தல்களைதல்பந்தித்தல்கள்ளல். (உரு)

புட்கரநிறைவுபாண்டமுகந்தீர்த்தம்புனல்வான்சேனம்
கட்கம்பங்கயமேயானைக்கைந்நுனிகுருகீரைந்தாம்
வெட்சியென்பதுவேசெச்சைமிகுநிரைகவர்தலென்ப
பெட்பென்பபெருமையன்பாம்பிரசந்தேன்மதுவண்டாமே. (உசு)

ஆடலென்பது—பெண்ணுண்கூடல், சொல்லல், கூத்தாடல், வெற்றி.
பாடலம்—சிவப்பு, பாதிரிமரம், குதிரை. ந.
கோடரம்—குரங்கு, சோலை, மரக்கொம்பு, குதிரை. ச.
ஆடவர்—ஆண்மக்கள், இளைஞர். உ.

கடி—விவாகம், விரைவு, கூர்மை, காலம், பேய், விளக்கம், காவல், அல்குல், அச்சம், மணம், சந்தேகம், நீக்கல், அதிசயம். கந.
வடுகு—இந்தளராகம், மருதயாழ்த்திறம். உ.
வடவை—பெண்குதிரை, பெண்யானை, ஊழித்தீ. ந.

கோடு—சங்கு, ஊதுகொம்பு, மரக்கொம்பு, விலங்கின்கொம்பு, வரம்பு, மலையினுச்சி, நீர்க்கரை. எ.
மோடு—மேடு, வயிறு. உ. முறுவல்—சிரித்தல், பல். உ.
ஆடி—ஒருமாதம், கண்ணாடி, உத்தராடநட்சத்திரம். ந.

தட்டு—தேர்நடு, குற்றம், முறம், தோற்பலகை, விக்கினம். ரு.
செட்டி—வாணிகன், கந்தன். உ. செப்பு—சொல், கரண்டகம். ந.
மட்டு—எல்லை, கள். உ. மார்க்கம்—சமயம், தெரு. உ.
பட்டிகை—கச்சு, தெப்பம், அரைஞாண். ந.

கடை—முடிவு, இடம், வாயில். ந. களேவரம்—பிணம், உடம்பு. உ.
உடை—வத்திரம், செல்வம். உ. உடுக்கை—தண்ணுமை, வத்திரம்.
அடை—இலை, கனம், அப்பவர்க்கம், அடுத்தல், வழி. ரு.
நடை—வழி, ஒழுக்கம், செல்வம். ந. நார்—கயிறு, அன்பு. உ.

விடை—எதிர்மொழி, இடபம், விடுத்தல். ந. இடை—சடை, உவமை, நெட்டி. ந. கீதம்—இராகம், வண்டு. உ. படி—குதிரையங்கவடி, கற்படி, பகை, குணம், ஒப்பு, பூமி. சு.
குடி—குலம், புருவம், ஊர். ந. கொடி—படர்கொடி, துகிற்கொடி, காக்கை. ந.

நட்டம்—கூத்து, கேடு. உ. நகர்—வீடு, ஊர். உ.
தொட்டல்—உண்டல், தோண்டுதல், கையாற்றொடுதல். ந.
தட்டல்—தடுத்தல், கிட்டுதல். உ. தை—ஒருமாதம், பூசநாள். உ.
கட்டல்—தடுத்தல், பறித்தல், கட்டுதல், களவு. ச.

புட்கரம்—நிறைவு, பாண்டமுகம், தீர்த்தம், நீர், ஆகாயம், பருந்து, வாள், தாமரை, யானைத்துதிக்கைநுதி, குருகு. க௦.
வெட்சி—வெட்சிச்செடி, பகைஞர் பசுக்கூட்டத்தைக்கவர்தல். உ.
பெட்பு—பெருமை, அன்பு. உ. பிரசம்—தேன், கள், வண்டு. ந.

அடுதலையட்டலென்பவடர்தலுங்கொலையுமுப்பேர்
சடிலமேநெருங்கலோடுசடைகுதிரையுமுப்பேரே
படலையேபடர்தன்மாலைபதலையேவாசிக்கோவை
இடுகுதேர்மரச்சுற்றின்பேர்பரிசைக்குங்கிளத்தலாமே. (௨௭)

படலிகைநீர்க்குவட்டம்பரந்தகைம்மணிபூந்தட்டாம்
கொடியனேகொடியன்கேதாங்குண்டாழந்தாழ்வாண்மாவே
தொடுவென்பமருதப்பூமிதோட்டங்கைதவமுப்பேரே
முடிமயிர்முடியேசென்னிமகுடமுமொழியலாமே. (௨௮)

ஆடகந்துவரைபொன்னுமஞரறிவிலரேதுக்கம்
கோடகமுடியுறுப்புங்குதிரையும்புதுமையும்பேர்
பீடிகையாவணம்பூந்தட்டொடுபீடமுப்பேர்
தோடுபூவிதழேபெண்ணைமடல்போல்வதொகுதிக்கும்பேர். (௨௯)

அடரென்பநெருங்குதற்பேரைம்மையின்வடிவுமாகும்
விடர்முனியிருப்புத்தூர்த்தர்கமர்வெற்பின்முழைகாடைம்பேர்
விடலையேதலைவன்பேரும்விறலோன்றன்பேருமாகும்
அடிசெண்டுவெளிதாளாதிசவிதையின்பாதமாமே. (௩0)

டகரவெதுகை முற்றிற்று.

ஆக விருத்தம் — ௭௩.

---

# ணகரவெதுகை.

புணர்வுதோய்ந்திடலிசைப்பாம்பொழில்புவிபெருமைசோலை
உணர்வென்பதெளிவேயூடலொழிதலையறிவுமாகும்
குணமென்பகயிறுபண்புகும்பம்வின்னுணிநாற்பேர்
கணமுடுநோய்திரட்சிகாலநுட்பம்பேய்வட்டம். (௧)

ஆணமேகுழம்போடன்பாமலநாஞ்சிலமைவுமாமே
ஓணமாயோனுளாருமூதியமிலாபங்கல்வி
காணமேபரியூண்செக்கோர்கண்ணல்பொற்காசுநாற்பேர்
கோணலேமாறுபாடுங்கூனுமாம்வளைவுமாமே. (௨)

குணில்குறுந்தடிகடிப்பாங்குல்லையேதுளவுவெட்சி
மணிநவமணியேகண்டைவனப்பொடுகருமைநன்மை
துணிசோதிநாளேதுண்டந்துளிமழைத்துளிபெண்ணுமை
பிணிமுகமயில்புட்பேராம்பிசிதநீரிறைச்சிவேம்பு. (௩)

அடுதலென்பது—சமைத்தல், நெருங்கல், கொல்லுதல். ௩.
சடிலம்—நெருங்குதல், சடை, குதிரை. ௩.
படலை—பரந்தவடிவு, பூமாலை, வாயகன்றபறை, குதிரைக்கிங்கிணி, மாலை. ௫.
இடுகு—தேர்மரச்சுற்று, பரிசை. ௨.
படலிகை—பீர்க்கு, வட்டவடிவு, கைம்மணி, பூந்தட்டு. ௪.
கொடியன்—தீயன், கேது. ௨. குண்டம்—ஆழம், தாழ்வு, ஆண்குதிரை.
தொடு—மருதநிலம், தோட்டம், வஞ்சகம். ௩.
முடி—மயிர்முடி, தலை, கிரீடம். ௩.
ஆடகம்—துவரை, பொன். ௨. அஞர்—அறிவிலார், துக்கம். ௨.
கோடகம்—முடியுறுப்பு, குதிரை, புதுமை. ௩.
பீடிகை—கடைவீதி, பூந்தட்டு, பீடம். ௩.
தோடு—பூவிதழ், பனைமடல்போல்வன, கூட்டம். ௩.
அடர்—நெருங்கல், தகட்டுவடிவு. ௨.
விடர்—முனிவரிருப்பிடம், தூர்த்தர், நிலப்பிளப்பு, மலைப்பிளப்பு, காடு. ௫.
விடலை—பாலைநிலத்தலைவன், வெற்றியாளன். ௨.
அடி—குதிரைவையாளிவீதி, கால், முதல், பாட்டினடி. ௪.

---

# ணகரவெதுகை.

புணர்வென்பது—கலவி, இசைப்பு. ௨. பொழில்—பூமி, பெருமை, சோலை. ௩.
உணர்வு—தெளிவு, ஊடலொழுதல், அறிவு. ௩.
குணம்—கயிறு, குணம், குடம், நாணி. ௪.
கணம்—விண்மீன், ஓர்நோய், கூட்டம், காலநுட்பம், பேய், வட்டம். ௬.
ஆணம்—குழம்பு, அன்பு. ௨. அலம்—கலப்பை, அமையுமென்றல். ௨.
ஓணம்—திருவோணம், ஆறு. ௨. ஊதியம்—இலாபம், கல்வி. ௨.
காணம்—கொள்ளு, செக்கு, ஒருகட்பிராணி, பொற்காசு. ௪.
கோணல்—மாறுபாடு, கூன், வளைவு. ௩.
குணில்—குறுந்தடி, பறையடிக்குங்குறுந்தடி. ௨. குல்லை—துளசி, வெட்சி. ௨. மணி—நவமணி, யானைமணி, அழகு, கறுப்பு, நன்மை.
துணி—சோதிநட்சத்திரம், துண்டம். ௨. துளி—மழைத்துளி, பெண்ணுமை. ௨. பிணிமுகம்—மயில், பறவைப்பொது. ௨.
பிசிதம்—நீர், இறைச்சி, வேம்பு. ௩.

நாணிலச்சைப்பேர்தானேசயிறென்றுநாட்டலாகும்
தோணியேகடைநாள்வங்கந்தொடுகணைதெப்பஞ்சேறு
வாணியேயோர்கூத்தின்பேர்வாக்குநாமகளுமாமே
ஏணியேயுலகோடெல்லையிறைவைமாணென்றுஞ்சொல்லும். (ச)

திணைநிலங்குலமொழுக்கஞ்செவியென்பகாதுகேள்வி
பிணையாசைவிலங்கின்பெண்பேர்பிலவங்கங்குரங்குதேரை
கணையம்புதிரட்சியும்பேர்கட்சியேகாடுங்கூடும்
பணைவயல்பரியின்பந்திபருத்தல்வேயரசுபீடாம். (ரு)

யாணரேபுதுமைதச்சரெய்தியவனப்புநன்மை
பாணந்தான்மேகவண்ணக்குறிஞ்சியெய்கணைபூம்பட்டாம்
சேணென்பதகலநீளஞ்செப்பிடிலுயரமுப்பேர்
ஆணைமெய்யுடனேவென்றிகூளேவலாகநாற்பேர். (சா)

அண்டமாகாயமுட்டையயிலென்பவேலேகூர்மை
துண்டமேசாரைப்பாம்புதுணியொடுவதனமூக்காம்
கண்டமேகவசம்வெல்லங்கழுத்திடுதிரைவாடுண்டம்
முண்டகந்தாழைகள்ளுமுளரிமத்தகமுண்மூலம். (எ)

அண்டரேபகைவர்வானோராயரென்றுரைக்குமுப்பேர்
சுண்டனேசதயநாளுஞ்சூறனும்வேறுகாட்டும்
கண்டல்கேதகைமுள்ளிப்பேர்கரைதலேவிளித்தலோசை
பண்டம்பொன்பணிகாரப்பேர்பாகுபால்குழம்புபாக்காம். (அ)

விண்டென்பமாயோன்வெற்புமேகமேமூங்கில்காற்றும்
தொண்டென்பபழமையொன்பானொடுமும்பொடுவழிபாடாமே
தண்டென்பகுழாயேவீணைதடிபடைமிதுனமோந்தி
வண்டென்பசங்குகுற்றம்வளையளிவாளியைம்பேர். (கூ)

உண்டையேதிரளையாகுமுறுபடைவகுப்புமென்ப
தொண்டையாதொண்டைகொவ்வைதூங்கும்யானைத்துதிக்கை
கொண்டையேமயிர்முடிக்குமிலந்தையின்கனிக்குங்கூற்றும்
கண்டிகைபதக்கம்வாகுவலயமேகலன்பெய்செப்பு. (கo)

தண்ணமேமோர்கட்பறைப்பேர்தறித்திடுமெழுவுமாகும்
வண்ணமேமேர்சந்தம்பண்பாமறையிராசியமேவேதம்
பண்ணென்புபாட்டும்பண்ணும்பரிமாவின்கலணையும்பேர்
மண்ணனுவொப்பனைப்பேர்முழவின்மார்ச்சனையுமாமே. (கக)

நாணென்பது—வெட்கம், கயிறு. உ.
தோணி—இரேவதிநட்சத்திரம், மரக்கலம், அம்பு, தெப்பம், சேறு.
வாணி—ஒருகூத்து, சொல், சரசுவதி. ௩.
ஏணி—உலகம், எல்லை, ஏணி, மான். ௪.
திணை—நிலம், சாதி, ஒழுக்கம். ௩. செவி—காது, கேள்வி. உ.
பிணை—ஆசை, விலங்கின்பெண். உ. பிலவங்கம்—குரங்கு, தேரை.
கணை—அம்பு, திரட்சி. உ. கட்சி—காடு, பறவைக்கூடு. உ.
பணை—வயல், குதிரைப்பந்தி, பருமை, மூங்கில், அரசமரம், பெருமை. ௬.
பாணர்—புதுமை, தச்சர், அழகு, நன்மை. ௪.
பாணம்—மழைவண்ணக்குறிஞ்சி, அம்பு, பட்டுவஸ்திரம் ௩.
சேண்—அகலம், நீளம், உயரம். ௩.
ஆணை—உண்மை, வெற்றி, சபதம், ஏவல். ௪
அண்டம்—ஆகாயம், முட்டை. உ. அயில்—வேலாயுதம், கூர்மை. உ.
துண்டம்—சாரைப்பாம்பு, துணி, முகம், மூக்கு. ௪.
கண்டம்—கவசம், வெல்லம், கழுத்து, இடுதிரை, வாள், துண்டம்.
முண்டகம்—தாழை, கள், தாமரை, நெற்றி, முட்செடி. ௫.
அண்டர்—பகைவர், தேவர், இடையர். ௩.
சுண்டன்—சதயநட்சத்திரம், மூஞ்சூறு. உ. கண்டல்—தாழை, முள்ளிச்செடி. உ.
கரைதல்—அழைத்தல், ஒலித்தல். உ. பண்டம்—பொன், பலபண்டம்.
பாகு—பங்கு, குழம்பு, பாக்கு. ௩.
விண்டு—விட்டுணு, மலை, மேகம், மூங்கில், காற்று. ௫.
தொண்டு—பழமை, ஒன்பது, அடிமை, வழிபாடு. ௪.
தண்டு—குழாய், வீணை, தடி, சேனை, மிதுனராசி, ஓந்தி. ௬
வண்டு—சங்கு, குற்றம், கைவளை, வண்டு, அம்பு. ௫.
உண்டை—திரட்சி, படைவகுப்பு. உ.
தொண்டை—ஆதொண்டைச்செடி, கொவ்வை, யானைத்துதிக்கை. ௩.
கொண்டை—மயிர்முடி, * இலந்தைக்கனி. உ.
கண்டிகை—பதக்கம், வாகுவலயம், ஆபரணச்செப்பு. ௩.
தண்ணம்—ஒருகட்பறை, மழு. உ.
வண்ணம்—அழகு, நிறம், குணம். ௩. மறை—இரகசியம், வேதம். உ.
பண்—இசைப்பாட்டு, பண், குதிரைக்கலனை. ௩.
மண்—அணு, ஒப்பனை, மார்ச்சனை. ௩.

---

* சொண்டை - இலந்தைக்கனி.

அணங்குநோயழகுதெய்வமாசைபெண்கொலைவருத்தம்
துணங்கையேவிழாப்பேய்கூத்தாமாதிரைநாளுஞ்சொல்லும்
குணுங்கர்தோற்கருவிமாக்கள்குயிலுவரிழிஞர்முப்பேர்
துணங்கறலிருள்விழாவாந்தோன்றலேசுதனுதன்பேர். (கஉ)

புணரியேவாரிநீரிற்பொருதிரைகரைமுப்பேராம்
பணிலமேசலஞ்சலஞ்சங்கிருபெயர்பகரலாமே
கணிவேங்கைமரமதாகுங்கழனிசூழ்மருதமும்பேர்
பணியேதோற்கருவிவார்த்தைபாம்புசெய்தொழிலுமாமே. (கங)

பாணியூர்நீர்கையோசைபற்றுக்கான்போதுநாடு
சேணுறுசோலைபண்டஞ்சிறந்தபல்லியம்பன்னொன்றும்
தாணுவேசைலங்குற்றிசங்கரனிலைதூணம்பேர்
வேணியேசடைவிசும்பாம்வியாளமேபுலியும்பாம்பும். (கச)

குண்டலங்குழைவிசும்பாங்குபேரனேதனதன்சோமன்
மண்டலம்பரியூர்வட்டமந்தியேயூகம்வண்டு
கொண்டலேமுகில்கீழ்காற்றுங்கோட்டியேவாயில்கூட்டம்
மண்டலிபூனைபாம்புமண்ணொடுநோயுமாமே. (கரு)

புண்டரீகந்திக்கானைபுலிவண்டுகழுகுஞ்சம்
தண்டமேயானைசெல்லும்வழிதண்டாயுதங்குடைக்கால்
பிண்டிநென்மாவசோகாம்பிதாச்சிவன்பிரமனுரை
கண்டகஞ்சுரிகைமுள்வாள்களவென்பகளாச்சோரப்பேர். (கசா)

பண்ணவன்முனிவன்றேவன்பகர்குருவருகனற்பேர்
தண்ணடைமருதஞ்சாரூர்நாடெனவிருபேர்சாற்றும்
வண்மையேவழங்கல்வாய்மைவளம்புகழ்வலியாமென்ப
ஒண்மையேமிகுதிநன்மையொழுங்கறிவழகைம்பேரே. (கஎ)

எண்வலியெள்ளிலக்கமெளிமைசோதிடம்விசாரம்
கண்ணிடங்கணுவேய்கண்ணுங்காஞ்சிமேகலையோர்பண்ணும்
விண்முகில்சுவர்க்கம்வானும்விபுலம்பார்விரிவுபீடு
பண்ணையேவயனீர்த்தாழ்வுமருதமாத்துயிலும்பாழி. (கஅ)

காண்டமேதிரைகாடம்புகமண்டலங்கலன்பெய்செப்பு
நீண்டகோன்முடிவுதூசுநீர்படைக்கலமீரைந்தாம்
பாண்டிலேறூர்திவட்டம்பணைகட்டில்விளக்குத்தாளம்
ஈண்டென்பதிவ்விடத்தோடிப்படிசடிதியும்பேர். (ககூ)

அணங்கென்பது—நோய், அழகு, தெய்வம், ஆசை, பெண், கொலே, வருத்தம். எ.
துணங்கை—திருவிழா, பேய், கூத்து, திருவாதிரைநட்சத்திரம். ச.
குணுங்கர்—தோற்கருவியாளர், நரப்புக்கருவியாளர், சண்டாளர். ங.
துணங்கறல்—இருள், உற்சவம். உ. தோன்றல்—மகன், அரசன். உ.
புணரி—கடல், கடற்றிரை, கரை. ங.
பணிலம்—சலஞ்சலம், சங்கு. உ.
கணி—வேங்கைமரம், மருதநிலம். உ.
பணி—தோற்கருவி, சொல், பாம்பு, செய்தொழில். ச.
பாணி—ஊர், நீர், கை, ஓசை, பற்று, காடு, காலம், நாடு, சோலே, பல பண்டம், வாச்சியப்பொது. கக.
தாணு—மலே, குற்றி, சிவன், நிலேபெறுதல், தூண். ரு.
வேணி—சடை, ஆகாயம். உ. வியாளம்—புலி, பாம்பு. உ.
குண்டலம்—குண்டலம், ஆகாயம். உ. குபேரன்—குபேரன், சந்திரன்.
மண்டலம்—குதிரை, ஊர், வட்டம். ங. மந்தி-பெண்குரங்கு, வண்டு.
கொண்டல்-மேகம், கீழ்காற்று. உ. கோட்டி-கோபுரவாயில், கூட்டம்.
மண்டலி—பூனே, பாம்பு, பூமி, நாய். ச.
புண்டரீகம்—தென்கீழ்த்திசையானே, புலி, வண்டு, கழுகு, தாமரை.
தண்டம்—யானேசெல்லும்வழி, தண்டாயுதம், குடைக்காம்பு. ங.
பிண்டி—நென்மா *, அசோகமரம். உ. பிதா—சிவன், பிரமன், பெரு நாரை. ங.
கண்டகம்—உடைவாள், முள், வாள். ங. களவு-களாச்செடி, திருட்டு.
பண்ணவன்—முனிவன், தேவன், குரு, அருகன். ச.
தண்ணடை—மருதநிலத்தூர், நாடு. உ.
வண்மை—கொடை, உண்மை, வளமை, புகழ், வலிமை. ரு.
ஒண்மை—மிகுதி, நன்மை, ஒழுங்கு, அறிவு, அழகு. ரு.
எண்—வலி, எள், இலக்கம், எளிமை, சோதிடநூல், ஆலோசனே. சு.
கண்—இடம், மரக்கணு, மூங்கில், கண். ச. காஞ்சி—மேகலே, ஒரு பண் உ.
விண்—மேகம், தேவலோகம், ஆகாயம். ங.
விபுலம்—பூமி, விசாலம், பெருமை. ங.
பண்ணே—வயல், குளம், மருதநிலம், விலங்கின்படுக்கை. ங.
காண்டம்—இடுதிரை, காடு, அம்பு, கமண்டலம், பூண்கொள்கலம், கோல், முடிவு, வஸ்திரம், நீர், ஆயுதம். க0.
பாண்டில்—எருது, பரிகள்பூண்டேர்க்குமூர்தி, வட்டம், மூங்கில், கட்டில், விளக்கின்றகழி, தாளம். எ.
ஈண்டு—இவ்விடம், இவ்வண்ணம், விரைவு. ங.

---

* பிண்டி - மரப்பொதுவின் பெயருமாம்.

அண்டசமுதலையோந்தியரணைபுள்ளும்பல்லி
நண்டுமீன்றவளையாமைநாகமிப்பியுமீராறும்
சண்டன்கூற்றவிவெய்யோனுந்தாள்கதவுறுதாள்பாதம்
சுண்டையேசுண்டைகள்ளாஞ்சொர்க்கமேசுவர்க்கங்கொங்கை. (உ0)

பணமென்பதரவின்பையும்பாம்பும்பொற்காசுமுப்பேர்
மணமென்பவாசங்கூட்டம்வதுவையுமாகுமென்ப
பணவையேபரணும்பேயும்பையுளேசிறுமைநோயாம்
நுணவையெண்ணேலைபிண்டிநுனியென்பநுதிநுண்மைப்பேர். (உக)

ணகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம்-கூச.

---

# தகரவெதுகை.

மதலையேகொன்றைபிள்ளைமரக்கலங்கொடுங்கைதூணும்
சிதலைநோய்துணிசெல்லென்பசீதநீர்குளிரேமேகம்
பதலையோர்கட்பறைப்பேர்பருவரைதாழிக்கும்பேர்
கதலியேவாழைதேற்றுக்காற்றுடிதூவசநாற்பேர். (க)

இதழ்பனையேடுபூவினிதழுதடெனவிம்முப்பேர்
கதழ்வுவேகஞ்சிறப்பாங்களிசெருக்கொடுகுழம்பு
மதுகமேயிருப்பையெட்டிமதுரமாந்தராவுமாமே
சிதடனந்தகன்மூடன்பேர்திதிபக்கநிலைபேறும்பேர். (உ)

ஆதனுருயிரோர்வில்லானங்கியென்பதுநீச்சட்டை
போதகம்யானைக்கன்றுபோற்றியவிளமைக்கும்பேர்
ஏதந்துன்பங்குற்றப்பேரீமமேமயானங்காட்டம்
சூதன்றேர்ப்பாகன்சூதன்சுவேதமேவெயர்வுவெண்மை. (ங)

சூதமாமரமேவண்டுசூதுடனிரதந்தோன்றல்
சூதகமேயாசௌசந்தோகைமார்தோயாப்பூப்பாம்
பூதமாலிறந்தகாலம்புனிதமைம்பூதஞ்சீவன்
மாதவந்தவம்வசந்தம்வாதமேதருக்கங்காற்றும். (ச)

மதன்வலிவேள்வனப்பாம்வலித்தலேவளைத்தல்பேசல்
பதங்கம்புட்பொதுவிட்டிற்பேர்பலிபூசைபிச்சைநீறும்
சிதம்விண்மீன்ஞானம்வெள்ளைசெயமுறப்பட்டதாமே
நிதம்பமேயல்குலென்பநெடுமலைப்பக்கமும்பேர். (ரு)

அண்டசமென்பது—முதலை, ஓந்தி, அரணை, பறவை, உடும்பு, பல்லி, நண்டு, மீன், தவளை, ஆமை, பாம்பு, இப்பி. க௨.
சண்டன்—இயமன், பேடி, சூரியன். ௩. தாள்—கதவுறுதாள், பாதம்.
சுண்டை—சுண்டைச்செடி, கள். ௨.
சொர்க்கம்—தேவலோகம், மூலை. ௨.
பணம்—பாம்பின்படம், பாம்பு, பொற்காசு. ௩.
மணம்—வாசனை, கூட்டம், விவாகம். ௩.
பணவை—பரண், பேய். ௨. பையுள்—அற்பம், நோய். ௨.
நுணவை—எண்ணெய்லை, மா. ௨. நுனி—நுதி, நுட்பம். ௨.

# தகரவெதுகை.

மதலையென்பது—கொன்றைமரம், மகன், மரக்கலம், கொடுங்கை, தூண். ரு. சிதலை—நோய், சீலைத்துணி, கறையான். ௩.
சீதம்—நீர், குளிர்ச்சி, மேகம். ௩. பதலை—ஒருகட்பகுவாய்ப்பறை, மலை, சாடி. ௩. கதலி—வாழை, தேற்றுமரம், காற்றாடி, விருதுக் கொடி. ௪.
இதழ்—பனையேடு, பூவிதழ், உதடு. ௩. சதழ்வு—விரைவு, சிறப்பு. களி—களிப்பு, குழம்பு. ௨. மதுகம்—இருப்பைமரம், எட்டிமரம், அதி மதுரம், தரா. * ௪. சிதடன்—குருடன், மூடன். ௨.
திதி—பிரதமைமுதலியதிதி, நிலைபெறுதல். ௨.
ஆதன்—உயிர், அறிவிலான். ௨. அங்கி—நெருப்பு, சட்டை. ௨.
போதகம்—யானைக்கன்று, இளமை. ௨.
ஏதம்—துன்பம், குற்றம். ௨. ஈமம்—சுடுகாடு, விறகு. ௨.
சூதன்—தேர்ப்பாகன், சூதாடுவோன். ௨. சுவேதம்—வேர்வு, வெண் மை. ௨.
சூதம்—மாமரம், வண்டு, சூது, இரசம், பிறப்பு. ரு.
சூதகம்—ஆசௌசம், பூப்பு. ௨.
பூதம்—ஆலமரம், இறந்தகாலம், சுத்தம், ஐம்பூதம், உயிர். ரு.
மாதவம்—தவம், வசந்தகாலம். ௨. வாதம்—தருக்கம், காற்று. ௨.
மதன்—வலிமை, மன்மதன், அழகு. ௩. வலித்தல்—வளைத்தல், பேசல். ௨. பதங்கம்—பறவைப்பொது, விட்டிற்பறவை. ௨. பலி—பூசை, பிச்சை, நீறு. ௩. சிதம்—நட்சத்திரம், ஞானம், வெண்மை, வெற்றிகொள்ளப்பட்டது. ௪. நிதம்பம்—அல்குல், மலைப்பக்கம்.

* தரா - பொன்முதலிய எழுலோகங்களு ளொன்று.

சதியுரோகிணிகற்பாட்டிவஞ்சனைதாளவொற்று
விதியென்பவினையயன்பேர்வேட்டுவன்மகநாள்வேடன்
பதியிறைகேள்வனூராம்பதுக்கையேபாறைதூறு
பிதிர்கதைநொடிதூவற்பேர்பிண்டமேதிரளைபிச்சை. (சு)

ஆதியேமுதனேரோடலருகன்மாலீசன்வேதன்
பூதியம்புவியுடற்பேர்பொம்மலேபொலிவுஞ்சோறும்
பாதிரிபாடலப்பேர்பணைத்தெழுமூங்கிற்கும்பேர்
ஏதியாயுதம்வாளென்பவிழைநூலாபரணமாமே. (எ)

சாதியேபிரம்புகள்ளோர்தருசிறுசண்பகப்பேர்
போதஞானந்தோணிப்பேர்புகல்குதிருடல்சொல்வெற்றி
ஓதிபெண்மயிரேபூனையோந்திமெய்ஞ்ஞானம்வெற்பாம்
ஓதிமமன்னம்வெற்பாமுருத்தலேதோற்றல்கோபம். (அ)

சுதைமகள்கறவாத்தேனுசுண்ணச்சாந்தமுதுநாற்பேர்
புதையென்பகணையின்கட்டும்புதுமையுமறைவுமுப்பேர்
மதுவென்பநறவுந்தேனும்வசந்தகாலமுமாமென்ப
கதைதண்டாயுதமேவார்த்தைகாரணமிம்முப்பேரே. (கூ)

சீதையேபொன்னுங்காணிபடைச்சால்சீராமன்றேவி
மேதைதோல்புதனிறைச்சிமிக்கபேரறிவுகள்ளாம்
கோதைமுன்கைத்தோற்கட்டிகுழலூர்காற்றொழுங்குசேரன்
ஓதைபேரொலிமதிற்பேருக்கந்தீயிடையானேறு. (க௦)

அத்தம்பொன்பாதிகைகண்ணடிசொற்பொருள்காடோர்நாள்
புத்தகங்கோசமென்பசித்திரப்படாமுமாமே
நத்தமேயிருளூமூருநந்துடனிரவுநாற்பேர்
துத்தமோரிசைநாய்பாலேவயிறுகண்மருந்துஞ்சொல்லும். (கக)

அத்தென்பவரைஞாண்செம்மையசைச்சொலோடிசைப்புநாற்பேர்
தொத்துப்பூங்கொத்துத்தொண்டாந்தும்புவேய்துளைமரக்கால்
தத்தைமூத்தாள்கிளிக்காந்தழல்கிளிகடிகோல்செந்தீ
உத்தாமூழித்தீமேலோடுமேறுமொழிவடக்காம். (க௨)

கூத்தனேயுயிர்நடன்பேர்குலங்குடிகோயில்கூட்டம்
ஊழ்த்தலேகினைத்தல்செவ்வியுறுபதனழிவுமுப்பேர்
பாத்தென்பகஞ்சிசோறுபகுத்திடல்வகுத்தமுப்பேர்
தீர்த்தமேவிழாவுநீருந்தீர்த்தனேயருகனுசான். (கஙு)

சதியென்பது—உரோகிணிநட்சத்திரம், கற்புடையாள், வஞ்சனை, தாளவொற்று. ச.

விதி-செய்தொழில்.பிரமன் உ. வேட்டுவன்-மகநட்சத்திரம்.வேடன்.
பதி—அரசன், நாயகன், ஊர். ங. பதுக்கை—பாறை, சிறுதூறு உ.
பிதிர்—கதை, கைநொடி, தூவல். ங. பிண்டம்—திரட்சி, பிச்சை.

ஆதி—முதல், நேரோடல், அருகன், திருமால், சிவன், பிரமன்.
பூதியம்—பூமி, சரீரம். உ. பொம்மல்—பொலிவு, சோறு. உ.
பாதிரி—பாதிரிமரம், மூங்கில். உ. எதி—ஆயுதம், வாள். உ.
இழை—நூல், ஆபரணம். உ.

சாதி—பிரம்பு, கள், தேக்கமரம், சிறுசண்பகம். ச.
போதம்—ஞானம். மரக்கலம். உ. புகல்—குதிர், சரீரம், சொல்வெற்றி. ஙு. ஓதி—பெண்மயிர், பூனை, ஓந்தி, ஞானம், மலை. ரு.
ஓதிமம்—அன்னப்புள், மலை. உ. உருத்தல்—தோன்றுதல், கோபம்.

சுதை—மகள், உதைகாற்பசு, சுண்ணச்சாந்து, அமிர்தம். ச.
புதை—அம்புக்கட்டு, புதுமை, மறைவு. ங.
மது—கள், தேன், வசந்தகாலம். ங.
கதை—தண்டாயுதம், சொல், காரணம். ங.

சீதை—பொன்னாங்காணி, உழுபடைச்சால், சீதை. ங.
மேதை—தோல், புதன், இறைச்சி, பேரறிவு, கள். ரு.
கோதை—கைக்கட்டி, கூந்தல், பூமாலை, காற்று, ஒழுங்கு, சேரன்.
ஓதை-பேரொலி, மதில். உ. உக்கம்—நெருப்பு, இடை, பசு, எருது.

அத்தம்—பொன், பாதி, கை, கண்ணாடி, சொற்பொருள், காடு, ஒரு நட்சத்திரம். எ. புத்தகம்—புத்தகம், சித்திரப்படாம். உ.
நத்தம்—இருள், ஊர், சங்கு, இராத்திரி. ச.
துத்தம்—எழிசையுளொன்று, நாய், பால், வயிறு, கண்மருந்து. ரு.

அத்து—அரைஞாண், சிவப்பு, அசைச்சொல், கூடிநிற்றல். ச.
தொத்து—பூங்கொத்து, அடிமை. உ. தூம்பு—மூங்கில், உட்டுளை, மரக்கால். ங.
தத்தை—முன்பிறந்தாள், கிளி. உ. தழல்—கிளிகடிகோல்,நெருப்பு.
உத்தரம்—வடவாமுகாக்கினி, மேல், மறுமொழி, வடக்கு. ச.

கூத்தன்—உயிர், நாடகன். உ. குலம்—சாதி, அரசரில், கூட்டம். ங.
ஊழ்த்தல்—நினைத்தல், பருவம், பதனழிவு. ங.
பாத்து—கஞ்சி, சோறு, பகுத்திடல். ங.
தீர்த்தம்—திருவிழா, நீர். உ. தீர்த்தன்—அருகன், குரு. உ.

குத்திமண்ணடக்கமென்பகோணம்வாள்குதிரைமூக்காம்
பத்தியேமுறையொழுக்கம்பகர்வழிபாடுமுப்பேர்
அத்தியார்கலியேயானையதவெலும்பாகநாற்பேர்
சத்தியஞ்சபதமெய்யாந்தபுதலேசாவுங்கேடும். (கச)

பித்திகைகருமுகைக்குப்பெயர்சுவர்த்தலமுமாகும்
கத்திகைதொடைவிகற்பந்துவசமேகமழ்வாசந்தி
உத்திசெந்திருவுறுப்புச்சுணங்குரையாடன்முப்பேர்
துத்தியேசுணங்குபாம்பின்சுடர்ப்பொறிபுதலொன்றுமே. (கரு)

சித்திரபானுசெந்தீதிவாகரனுண்டொன்றின்பேர்
பத்திரமிலைவனப்புப்படைநன்மைசிறகேபாணம்
சித்திரமழகோர்பாடல்சிறந்தவிம்மிதமேரண்டம்
சத்திரங்குடையேயன்னசாலைகைவிடாவேல்வேள்வி. (கசா)

காத்திரங்கனமெய்சீற்றங்களிற்றின்முன்காலேகிரி
நேத்திரங்கண்பட்டாடைநீலியேசருமைதுர்க்கை
கோத்திரம்புடவிதானேகுலமொடுமலையுமாமே
பாத்தியேசிறுசெய்யில்லம்பகுத்தலும்வகுத்தநாமம். (கஎ)

சதமிலையிறகுநூறுசத்தமேயோசையேழாம்
கதவமேகதவுகாப்பாங்கழங்குபேய்நடங்கழற்சி
பதமுரவின்பஞ்செவ்விபதவிதாள்வரிசைவார்த்தை
மதியோர்முன்னிலையசைச்சொன்மாதமம்புலிபுத்திப்பேர். (கஅ)

பீதகஞ்சாந்துபொன்மைபெருந்தனமிருவேலிப்பேர்
சாதகம்வானம்பாடிசனனம்பாரிடமுப்பேரே
சேதகஞ்சேறுசெம்மைதேயந்தானுடம்புநாடாம்
மாதரோரிடைச்சொல்காதல்வனப்பொடுமகளிராமே. (ககூ)

சோதிமாலருகன்பானுசுடர்விளக்கீசனோர்நாள்
பூதியேநரகஞ்செல்வந்தூர்க்கந்தம்புழுதிநீறும்
வீதியேதெருநேரோடன்மேலென்பதிடம்விண்மேற்காம்
மாதிரந்திசையாகாயமலையானைநிலமைம்பேரே. (உ0)

தாதுபொன்முதலாமேழுஞ்சடமுறுதாதோரேழும்
பூதமோரைந்துங்காவிக்கல்லுடன்புகலுநாற்பேர்
வேதிகைபலகைதிண்ணைவெதிரென்பசெவிடுவேணு
கேதுவேசிகிபதாகைகிள்ளைதான்குதிரைதத்தை. (உக)

குத்தியென்பது-மண், அடக்கம். உ. கோணம் வாள். குதிரை.மூக்கு.
பத்தி—முறைமை, ஒழுக்கம், வழிபாடு. ௩.
அத்தி—சமுத்திரம், யானை. அத்திமரம், எலும்பு. ௪.
சத்தியம்—சபதம், உண்மை. உ. தபுதல்—சாதல், கெடுதல். உ.

பித்திகை—கருமுகை. சுவர்த்தலம். உ.
கத்திகை—மாலைவிகற்பம், துகிற்கொடி, குருக்கத்தி. ௩.
உத்தி—சீதேவியென்னுந் தலைக்கோலம். தேமல். சொல்லுதல். ௩.
துத்தி—தேமல். பாம்பின்படப்பொறி. ஓர்செடி. ௩.

சித்திரபானு—நெருப்பு, சூரியன், ஓர்வருடம். ௩.
பத்திரம்—இலை, அழகு. ஆயுதம், நன்மை, இறகு, அம்பு. ௬.
சித்திரம்—அழகு. ஒருகவி. அதிசயம். ஆமணக்கு. ௪.
சத்திரம்—குடை. அன்னசாலை, கைவிடாப்படை, யாகம். ௪.

காத்திரம்—கனம், உடம்பு, கோபம். யானைமுன்கால், கீரி. ௫.
நேத்திரம்—கண், பட்டுவத்திரம். உ. நீலி—கறுப்பு, துர்க்கை. உ.
கோத்திரம்—பூமி, குலம், மலை. ௩.
பாத்தி—சிறுசெய், வீடு, பகுத்தல். ௩.

சதம்—இலை. இறகு. நூறு. ௩. சத்தம்—ஒலி. ஏழு. உ.
கதவம்—கதவு, காவல். உ. கழங்கு—வெறியாட்டு, கழற்காய். உ.
பதம்—சோறு, இன்பம், காலம். பதவி, கால், வரிசை, சொல். ௭.
மதி—ஒருமுன்னிலையசைச்சொல். மாதம், சந்திரன், புத்தி. ௪.

பீதகம்—நால்வகைச்சாந்திலொன்று, பொன்னிறம். பொன். இருவேலி. ௪.
சாதகம்—வானம்பாடி, பிறப்பு, பூதம். ௩.
சேதகம்—சேறு, சிவப்பு. உ. தேயம்—சரீரம், நாடு. உ.
மாதர்—ஓரிடைச்சொல். ஆசை. அழகு. பெண்கள். ௪.

சோதி—திருமால், அருகன், சூரியன், ஒளி, தீபம், சிவன், ஒரு நட்சத்திரம். ௭.
பூதி—நரகம், செல்வம், துர்க்கந்தம், புழுதி, விபூதி. ௫.
வீதி—தெரு, நேரோடல். உ. மேல்—இடம், ஆகாயம், மேற்கு. ௩.
மாதிரம்—திக்கு, ஆகாயம், மலை, யானை. பூமி. ௫.

தாது—பொன்முதலிய வெழுவகைலோகம். இரதமுதலிய வெழுவகைத்தாது, மண்முதலிய வைவகைப்பூதம், காவிக்கல். ௪.
வேதிகை—கேடகம். திண்ணை. உ. வெதிர்—செவிடு, மூங்கில். உ.
கேது-நவக்கிரகத்திலொன்று.துகிற்கொடி. உ. கிள்ளை-குதிரை.கிளி.

கதுப்பேயாண்மயிர்நம்பென்பான்மயிரொடுகவுளுமப்பேர்
விதப்பேகம்பிதமிக்காகும்வித்தம்பொன்பழிப்புஞானம்
அதிர்ப்பொலிநெக்குமென்பவகப்பாவேபுரிசைமேடை
ஒதுக்கமேநடைமறைப்பாமொருத்தலாண்விலங்குவேழம். (உஉ)

பத்திரிபறவைகாளிபரியிலைபாணமைம்பேர்
அத்திரிகழுதைவிண்ணொட்டகம்பரியசலமம்பாம்
சத்தியேயுமைவேல்கான்றல்குடைவலிதுவசந்தானும்
சுத்தியேயகல்வெண்சங்குஞ்சுத்தமோர்கருவிக்கும்பேர். (உ௩)

புத்தன்மாலருகன்சாத்தன்பூழிமுனைகில்பூமிப்பேர்
புத்தேளேபுதுமைதேவாம்பூட்கைதோன்மேற்கோள்யாளி
தைத்தறன்னங்கைத்தற்பேர்சாறுகள்விழவுதாரும்
முத்தமேபிரியமோட்டமருதநன்னிலமுத்தாமே. (உச)

அத்தனேமூத்தோன்றந்தையரனொடுகுருவுநாற்பேர்
சித்தமேதிடமுள்ளப்பேர்சேகரந்தலைமாவேராம்
கைத்தலேசினங்கைப்பாகுங்கஞறலேபொலிவுகன்றல்
சித்தென்பசயமேஞானஞ்செய்யென்பநிலமேவற்பேர். (உரு)

உத்திரஞ்சித்திரஞ்சேர்தொளிறுமில்லுறுப்போடோர்நாள்
பைத்தலேமுனிவினொடுபசுத்தலும்பகரலாகும்
மத்திகையேசம்மட்டிசுடர்சிலைத்தண்டுமாலை
மத்தென்பதயிர்மத்தோடுமத்தமுமிருபேராமே. (உசு)

மதர்வுமேவுதல்வனப்புவலியிடமிருதியைம்பேர்
புதவென்பகதவோர்புல்லாம்புணர்ச்சியேகலவிகூடல்
சிதருறிதிவலைவண்டுசீலையின்றுணிநாற்பேரே
அதர்வழிபுழுதியாட்டினதருநுண்மணலுமாமே. (உஎ)

முதலைசெங்கிடையிடங்கர்முருந்தெனமொழியலாகும்
அதமிறங்குதல்பாதாளங்கீழ்மென்றறையுமப்பேர்
கதிநடைவிரைவேநான்குகதியொடுகதியுங்காட்டும்
மதிமமதஞ்செருக்காமாயையேமாயஞ்சத்தி. (உஅ)

பீதமேசாந்துமஞ்சள்பிங்கலத்தொடுபொன்மைப்பேர்
பேதையோர்பருவமூடன்பெண்டரித்திரனேநாற்பேர்
வாதுவர்யானைப்பாகர்வயப்பரிமாவடிப்போர்
மூதிரையாதிரைப்பேர்முக்கணன்பேருமாமே. (உகூ)

கதுப்பென்பது—ஆண்மயிர், பெண்மயிர், கபோலம். ௩. விதப்பு—நடுக்கம், மிகுதி. ௨.
வித்தம்—பொன், பழிப்பு, ஞானம். ௩. அதிர்ப்பு—ஒலி, நடுக்கம். ௨.
அசுப்பா—மதில், மதிலுண்மேடை ௨. ஒதுக்கம்—நடை, மறைப்பு.
ஒருத்தல்—ஆண் விலங்கு, யானை. ௨.
பத்திரி—பறவை, காளி, குதிரை, இலை, அம்பு. ௫.
அத்திரி—கழுதை, ஆகாயம், ஒட்டகம், குதிரை, மலை, பாணம். ௬.
சத்தி—உமை, வேலாயுதம், * வாந்தி, குடை, வலிமை, துகிற்கொடி.
சுத்தி—அகல், சங்கு, சுத்தம், ஒருகருவி. ௪.
புத்தன்—திருமால், அருகன், புத்தன். ௩. பூழில்—அகில், பூமி. ௨.
புத்தேள்—புதுமை, தெய்வம். ௨. பூட்கை—யானை, மேற்கோள், யானையாளி. ௩.
தைத்தல்-தைத்தல், அலங்கரித்தல். ௨. சாறு—கள், உற்சவம், குலை.
முத்தம்—பிரீதி, உதடு, மருதநிலம், முத்து. ௪.
அத்தன்-மூத்தோன், பிதா, சிவன், குரு. ௪. சித்தம்-நிச்சயம், மனம்.
சேகரம்—தலை, மாமரம், அழகு. ௩.
கைத்தல்—கோபம், கசப்பு. ௨. கஞறல்—பொலிவு, சினக்குறிப்பு. ௨
சித்து—வெற்றி, ஞானம். ௨. செய்—விளைநிலம், செய்யெனேவல்.
உத்திரம்—வீட்டினுறுப்பாகியவுத்திரம், ஒருநட்சத்திரம். ௨.
பைத்தல்—கோபம், பசுமை. ௨.
மத்திகை—குதிரைச்சம்மட்டி, விளக்குத்தண்டு, மாலை. ௩.
மத்து—தயிர்முதலியகடையுமத்து, ஊமத்தை. ௨.
மதர்வு—உள்ளக்களிப்பு, அழகு, வலிமை, இடம், மிகுதி. ௫.
புதவு—கதவு, ஒருவகைப்புல். ௨. புணர்ச்சி—கலவி, இயைபு. ௨.
சிதர்—உறி, துளி, வண்டு, சீலைத்துணி. ௪.
அதர்—வழி, புழுதி, ஆட்டினதர், நுண்மணல். ௪.
முதலை—செங்கிடை, முதலை, இறகினடிக்குருத்து. ௩.
அதம்—இறங்குதல், பாதலம், கீழ். ௩.
கதி—நடை, வேகம், தேவகதிமுதலியநாற்கதி, முத்தீ. ௪.
மதம்—யானைமதம், செருக்கு. ௨. மாயை—வஞ்சனை, சத்தி. ௨.
பீதம்—நால்வகைச்சாந்திலொன்று, மஞ்சள், பொன், பொன்னிறம்.
பேதை—பேதைப்பருவம், அறிவிலான், பெண், வறியவன். ௪.
வாதுவர்—யானைப்பாகர், குதிரைப்பாகர். ௨.
மூதிரை—திருவாதிரைநட்சத்திரம், சிவன். ௨.

---

* சர்த்தி - வாந்தி.

தாதியேபரணிநாளுமடிமையுமிருபேர்சாற்றும்
போதுதான்காலம்பூவாம்போர்வைதோல்கவசமீக்கோள்
சாதமேதிடம்பதப்பேர்தகைமையேரியல்பீடாம்
வீதலேகெடுதல்சாவேயிலம்பாடும்விளம்புமுப்பேர். (௩௦)

தகரவெதுகை முற்றிற்று.

ஆ. விருத்தம் - ௧௨௪.

# நகரவெதுகை.

இந்தனமிசையேகாட்டமெரியிடுகெனலுமாகும்
சந்தமேநிறம்வனப்புச்சாற்றியகவிதைசாந்தம்
கந்தமிந்தியம்பகுத்தல்கழுத்தடிகிழங்குநாற்றம்
மந்திரம்விசாரங்கோயில்வாசியின்குழாம்வீடேகள். (௧)

அந்திலாங்கசையிடப்பேரணவலேயணுகல்புல்லல்
சந்தியேயந்திமூங்கில்சதுக்கமுமிசைப்புமப்பேர்
நந்தியேசிவனுமேறுநந்தியீச்சுரனுமுப்பேர்
உந்திதேருருளையாறேயுவரிநீர்ச்சுழியேகொப்பூழ். (௨)

கந்துபண்டியுளிரும்புங்கம்பமும்யாக்கைமூட்டும்
கந்துகங்குதிரைபந்தாங்கனமென்பபுயல்பாரப்பேர்
பந்துகந்துகமுமட்டுப்படர்நீர்தாந்துருத்தியும்பேர்
குந்தளமாதரோதிகுழற்கொத்துக்குருளைமுப்பேர். (௩)

வேந்தனேயரசன்றிங்கள்வியாழனிந்திரனாதித்தன்
காந்தாரமிசைகாடென்பகாழகங்கருமைதாசாம்
ஏந்தலேபெருமைமேடாமெஃகுருக்கொடுவேல்கூர்மை
கூந்தல்பெண்மயிர்பீலிப்பேர்குவலயங்குவளைபூமி. (௪)

அந்தரமுடிவுபேதமண்டமோடிடைநாற்பேரே
கந்தரமென்பமேகங்கழுத்தொடுமலைமுழைப்பேர்
மந்தாரந்தருமரஞ்செவ்வரத்தமுமாகுமென்ப
சிந்துரம்புளியேயானைசெங்குடைதிலகஞ்செம்மை. (௫)

கந்தருவம்பண்வாசிகவந்தமென்பதுநீர்மட்டை
குந்தமேயொருவியாதிகுருந்தொடுகுதிரைகைவேல்
செந்துவோர்நரகமோருசீவனோடணுவுநாற்பேர்
சிந்துநீர்முச்சீராறுகடல்குறளொருதேசப்பேர். (௬)

தாதியென்பது—பரணிநட்சத்திரம், அடிமை. உ. போது—காலம், பூ. உ.
போர்வை—தோல், மெய்க்கவசம், மேற்போர்வை. ந.
சாதம்-உண்மை, சோறு. உ. தகைமை-அழகு, குணம், பெருமை.
வீதல்—கெடுதல், சாதல், வறுமையெய்தல். ந.

# நகரவெதுகை.

இந்தனமென்பது—மேல், விறகு, அக்கினிச்சுவாலை. ந.
சந்தம்—நிறம், அழகு, கவிதை, சந்தனம். ச.
கந்தம்—இந்திரியம், பங்கிடல், கழுத்தடி, கிழங்கு, மணம். ரு.
மந்திரம்-ஆலோசனை, தேவர்கோயில், குதிரைக்கூட்டம், வீடு, கள்.
அந்தில் என்பதும் ஆங்கு என்பதும்-அசைச்சொல், அவ்விடம். உ.
அணவல்—கிட்டல், புணர்தல். உ.
சந்தி—மாலைக்காலம், மூங்கில், நாற்சந்தி, இசைப்பு. ச.
நந்தி—சிவன், இடபம், நந்திதேவன். ந. உந்தி—தேருருள், ஆறு, கடல், நீர்ச்சுழி, கொப்பூழ். ரு.
கந்து—பண்டியுள்ளிரும்பு, தூண், சந்து. ந. கந்துகம், குதிரை, பந்து.
கனம்-மேகம், பாரம். உ. பந்து-எறியும்பந்து, மட்டத்துருத்தி. உ.
குந்தளம்—பெண்மயிர், மயிர்க்குழற்சி, நரி நாய் பன்றி புலி மான் முசு முயல் யாளி இவற்றின்குட்டி. ந.
வேந்தன்—அரசன், சந்திரன், வியாழன், இந்திரன், சூரியன். ரு.
காந்தாரம்—ஓரிசை, காடு. உ. காழகம்—கறுப்பு, சீலை. உ.
ஏந்தல்-பெருமை, மேடு. உ. எஃகு-உருக்கு, வேலாயுதம், கூர்மை.
கூந்தல்—பெண்மயிர், மயிற்பீலி. உ. குவலயம்—குவளை, பூமி. உ.
அந்தரம்—முடிவு, பேதம், ஆகாயம், இடை. ச.
கந்தரம்—மேகம், கழுத்து, மலைமுழை. ந.
மந்தாரம்—ஐந்தருவிலொன்று, செவ்வரத்தம். உ.
சிந்துரம்—புளிமா, யானை, சிவப்புக்குடை, பொட்டு, சிவப்பு. ரு.
கந்தருவம்—இசை, குதிரை. உ. கவந்தம்—நீர், உடற்குறை. உ.
குந்தம்—ஓர்நோய், குருந்தமரம், குதிரை, கைவேல். ச.
செந்து—ஒருநரகம், கிழநரி, உயிர், அணு. ச.
சிந்து—நீர், முச்சீரடி, ஆறு, கடல், குறள், ஓர்தேசம். சு.

அந்திமுச்சந்திபாலையாழிசையிரவுமாலை
நந்தெனபந்தைசங்காநாறுதன்மணமுண்டாதல்
மைந்தனேதிறலோன்சேயாம்வசந்தமேவேனில்வாசம்
வந்தியர்புகழ்வோர்பேருமலடிகள்பேருமாமே. (௭)

விந்தமோரெண்ணும்வெற்பும்விருந்தமேவட்டமூப்பாம்
அந்தணரறவோர்பார்ப்பாரணிபடைவகுப்பணிப்பேர்
அந்தகன்குருடன்கூற்றுமங்காரகன்றீச்செவ்வாய்
மந்தனேசனிகூர்ப்பில்லாமனுடனுமிருபேராமே. (அ)

நகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் – ௪௩௨.

# பகரவெதுகை.

உப்புமெல்லியலாராடலுவர்கடலினிமைநாற்பேர்
செப்பமேநடுநிலைப்பேர்செருவொடுநெஞ்சுமாகும்
துப்பரக்கூற்றந்தூய்மைதுகிர்பகையனுபவப்பேர்
கப்பணமிரும்பிற்செய்தநெரிஞ்சின்முட்கைவேலாமே. (௧)

தாபரமலைபோணிற்றல்சடமொடுதெருவுமுப்பேர்
நீபமுத்தரட்டாதிப்பேர்நிமித்தநீர்க்கடம்புமாகும்
யூபமேகவந்தம்வேள்விக்குறுதம்பம்படைவகுப்பாம்
சாபமேசபித்தல்வில்லாந்தளிமமேயழகுமெத்தை. (௨)

சேப்பென்பகதவிற்றுழுஞ்சிவுகங்கமுமாமென்ப
நாப்பணென்பதுதேர்த்தட்டுநடுவும்யாழுறுப்புமுப்பேர்
காப்பென்பகாவலோடுகதவும்வெண்ணீறுமாகும்
யாப்பென்பகவிதைகட்டாமிருநேரன்கூடெருதுமீனே. (௩)

பகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் – ௪௩௫.

அந்தியென்பது—முச்சந்தி, பாலையாழிசை, இரா, மாலைக்காலம். ௪.
நந்து—நத்தை, சங்கு. ௨. நாறுதல்-மணத்தல், உண்டாதல். ௨.
மைந்தன்—திண்ணியன், மகன். ௨. வசந்தம்—இளவேனில், வாசனை. ௨.
வந்தியர்-புகழ்வோர், மலடிகள். ௨.
விந்தம்—ஒரெண், மலை. ௨. விருத்தம்—வட்டம், மூப்பு. ௨.
அந்தணர்—முனிவர், பார்ப்பார். ௨. அணி—படைவகுப்பு, ஆபரணம். ௨.
அந்தகன்—குருடன், யமன். ௨ அங்காரசன்-நெருப்பு, செவ்வாய்.
மந்தன்—சனி, கூர்மையில்லான். ௨.

---

# பகரவெதுகை.

---

உப்பென்பது—மகளிர்விளையாட்டு, உவர், கடல், தித்திப்பு. ௪.
செப்பம்—நடுநிலை, வீதி, மார்பு. ௩.
துப்பு—அரக்கு, வலி, சுத்தம், பவளம், பகை, அனுபவம். ௬.
கப்பணம்—இரும்பினியற்றியநெரிஞ்சின்முள், கைவேல். ௨.
தாபரம்—மலைபோனிற்றல், உடம்பு, மரப்பொது. ௩.
நீபம்—உத்தரட்டாதி, காரணம், * நீர்க்கடம்பு. ௩.
யூபம்—உடற்குறை, வேள்வித்தூண், படைவகுப்பு. ௩.
சாபம்—சபித்தல், வில். ௨. சிமம்—அழகு, மெத்தை. ௨.
சீப்பு—கதவிடுதாழ், சீப்பு. ௨. கப்பண்—தேர்த்தட்டு, நடு, யாழுறுப்பு. ௩.
காப்பு—காவல், கதவு, திருநீறு. ௩.
யாப்பு—பாட்டு, கட்டு. ௨.
இறால்—தேன்கூடு, எருது, ஓர்மீன். ௩.

---

* நிபம்-காரணம்.

# மகரவெதுகை.

சமன்யமனடுவுமாகுஞ்சலமென்பவயிரநீர்போய்
கமலநீர்வனசமும்பேர்கலாஞ்சினங்கொடுமையாகும்
குமரிகற்றாழைகன்னிகொற்றவைகாளிக்கும்பேர்
ஞமலிநாய்மயில்கள்ளென்பநனைகள்ளுமலர்மொட்டும்பேர். (௧)

சாமமோர்வேதம்பச்சைசாமமேகருமைநாற்பேர்
வாமமேகுறளிடப்பால்வனப்பொடுதொடையுமாமே
பூமலர்வனப்புக்கூர்மைபொலிவொடுபிறப்புப்பூமி
ஏமமேசேமங்காவலின்பம்பொன்னிரவேமையல். (௨)

உம்பரேதேவராகுமுயர்நிலமுடன்மேலும்பேர்
வம்பென்பபுதுமைகச்சுமணநிலையின்மைநாற்பேர்
கும்பமேகுடமிராசிகும்பிமத்தகமுமாகும்
தும்பென்பசிம்புதோடாஞ்சுகமென்பகிளியேயின்பம். (௩)

ஆம்பல்வேய்கள்ளுக்கவ்வையல்லிவங்கியமேயானை
சாம்பல்கூம்புதல்பழம்பூத்தமிழென்பதிளிமைநீர்மை
தாம்பென்பகயிறுதானேதாமணிதனக்கும்பேராம்
காம்புவேய்மலர்த்தாள்பட்டேகடிமலர்க்கொம்புநாற்பேர். (௪)

அம்மையேவருபிறப்புமழகுமாந்தாயுமாகும்
சும்மையென்பதுவேநெற்போர்நாடொலிசுமையுஞ்சொல்லும்
செம்மைசெவ்வையுஞ்சிவப்புந்திரிதலையுலாவல்கேடாம்
கொம்மையேயிளமைவட்டங்கொங்கைகைகுவித்துக்கொட்டல். (௫)

அம்மழகசைச்சொனீராமழனந்தீபிணமுமாகும்
கம்மென்பதலையாகாயங்கனங்காணீர்விதிவெளுப்புச்
செம்மலேபழம்பூவீசன்சினேந்திரன்சிறந்தோன்மைந்தன்
கம்மியர்கைவினைப்பேர்கண்ணாளர்தாமுமாமே. (௬)

வாமனங்குறள்புராணமாதிரக்கயத்திலொன்றாம்
காமரமத்தகாளோடடுப்பிசைப்பொதுவுங்காட்டும்
நேமிசக்கரம்பார்வட்டநேமிப்புட்கடலைம்பேரே
தேமென்பதிடந்தித்திப்புத்தேனுற்றந்திசைதேசப்பேர். (௭)

தாமம்வெற்பொழுங்குகொன்றைசாந்தொளிநகரந்தாம்பு
பூமணிக்கோவைமாலைபொருகளங்கரியீராறும்
சோமனேர்வள்ளலிந்துசுரும்பென்பமலையும்வண்டும்
சாமியேமுதல்வன்செவ்வேடலைவியாசான்வெறுக்கை. (௮)

# மகரவெதுகை.

சமனென்பது—யமன், நடு. ௨. சலம்—நெடுங்காலமாக நிகழுங் கோபம், நீர், பொய். ௩.

கமலம்—நீர், தாமரை. ௨. சலாம்—கோபம், கொடுமை. ௨.

குமரி—கற்றாழை, கன்னி, துர்க்கை, காளி. ௪.

ஞமலி—நாய், மயில், கள். ௩. நனை—கள், பூவரும்பு. ௨.

சாமம்—ஓர்வேதம், பச்சை, யாமம், கருமை. ௪.

வாமம்—குறுமை, இடப்பக்கம், அழகு, தொடை. ௪.

பூ—மலர், அழகு, கூர்மை, பொலிவு, பிறப்பு, பூமி. ௬.

ஏமம்—புதையல், காவல், இன்பம், பொன், இரா, மயக்கம். ௬.

உம்பர்—தேவர், தேவலோகம், மேல். ௩.

வம்பு—புதுமை, முலைக்கச்சு, மணம், நிலையின்மை. ௪.

கும்பம்—குடம், ஓரிராசி, யானைமத்தகம் ௩.

தும்பு-ஓர்கயிறு, பனைமுதலியவற்றினேடு. ௨. சுகம்-கிளி, இன்பம்.

ஆம்பல்-**மூங்கில்**, கள், துன்பம், அல்லி, இன்னிசைக்குழல், யானை.

சாம்பல்—ஒடுங்குதல், பழம்பூ. ௨. தமிழ்—இனிமை, குணம். ௨.

தாம்பு—கயிறு, பசுக்கட்டுங்கயிறு. ௨.

காம்பு—மூங்கில், பூவின்காம்பு, பட்டுவிகற்பம், மரக்கொம்பு. ௪.

அம்மை—வருபிறப்பு, அழகு, தாய். ௩.

சும்மை—நெற்போர், நாடு, ஒலி, சுமை. ௪.

செம்மை—செவ்வை, சிவப்பு. ௨. திரிதல்—உலாவல், கேடு. ௨.

கொம்மை—இளமை, வட்டம், முலை, குடங்கையைக் குவித்துக் கொட்டல். ௪.

அம்—அழகு, அசைச்சொல், நீர். ௩. அழனம்—நெருப்பு, பிணம்.

கம்-தலை, ஆகாயம், மேகம், காற்று, நீர், பிரமன், வெண்மை. ௭.

செம்மல்-பழம்பூ, சிவன், அருகன், பெருமையிற்சிறந்தோன், மகன்.

கம்மியர்—தொழில்செய்வோர், கம்மாளர். ௨.

வாமனம்-குறள், சிவபுராணத்துளொன்று, தென்றிசையானை.

காமரம்—அத்தநட்சத்திரம், அடுப்பு, இசைப்பொது. ௩.

நேமி-சக்கராயுதம், பூமி, வட்டம், சக்கரவாகப்புள், சமுத்திரம். ௫.

தேம்—இடம், தித்திப்பு, தேன், வாசனை, திக்கு, தேசம். ௬.

தாமம்—மலை, ஒழுங்கு, கொன்றைமரம், சாந்து, ஒளி, ஊர், கயிறு, பூ, மணிவடம், பூமாலை, போர்க்களம், யானை. ௧௨.

சோமன்—ஓர்வள்ளல், சந்திரன். ௨. சுரும்பு—மலை, வண்டு. ௨.

சாமி—தலைவன், முருகக்கடவுள், தலைவி, குரு, பொன். ௫.

குமுதமேயடுப்போர் திக்கின் குஞ்சரமோலிவெண்ணெய்தல்
சிமயமேமலைவெற்புச்சிதீத்தீயேநரகுதீங்காம்
அமறலேபொலிவுதுன்னலரிறாறுபிணக்கமாசு
சிமிலியேகுடுமிசிக்கஞ்சிள்வீடுதானுமாமே. (௯)

சம்புவேயிரவிநாவல்சங்கரனயன்மாலோரி
தும்பியேகளிறுவண்டாந்துன்னலேசெறிதல்சேர்தல்
சம்புளசங்குசம்பங்கோழியென்றிருபேர்காட்டும்
அம்பரங்கடல்விண்சோமண்ணலேதலைவன்வீடு. (௧0)

இம்புரிமுடிதந்தப்பூண்கேட்டைதான்மூகடியோர்நாள்
கும்பிசேறுனேபூதிகுலைதான்செய்கரைகாய்க்கொத்தாம்
உம்பலாண்விலங்குவேழமுயர்குலமெழுச்சிக்கும்பேர்
அம்பலேபழிச்சொல்சில்லோரறிந்தலர்தூற்றலாமே. (௧௧)

கம்பலையச்சமோசைகம்பிதந்துன்பநாற்பேர்
செம்புலம்பாலைசேருந்திணைசெருக்களமிரண்டாம்
தம்பமேகவசந்தூணுஞ்சமழ்த்தலேவருத்தநாணம்
கம்பமேநடுக்கந்தம்பங்தனையருகன்செவ்வேள். (௧௨)

அமரரேவிபுதர்தெவ்வரவந்திதான்கிளியோரூராம்
அமுதுபாறேவருண்டியாகுமின்சுவையுமப்பேர்
அமலையேயாரவாரமயினியோடுமையுமுப்பேர்
தம்மிருளிராகுவின்பேர்சார்ங்கம்விற்பொதுமால்வில்லாம். (௧௩)

ஆம்பிரம்புளிமாதேமாவாம்புளிப்பினுக்குமப்பேர்
சாம்புபொன்பறையாமென்பதாண்டவங்கூத்தேதாவல்
பாம்பென்பகரைமராளம்பையராப்படமேபச்சை
ஆம்பியேயொலிகாளானுமயிராணியுமையிந்திராணி. (௧௪)

காமனேவாசவன்வேள்கழுதுந்திப்பலியுமாகும்
காமமேவிரகமாசைகணிச்சிதான்மழுவேதோட்டி
பூமனேபிரமன்செவ்வாய்புரையோரேகீழோர்மேலோர்
சேமமேகாவலின்பந்தெக்கிணம்வலந்தெற்காகும். (௧௫)

காமுகன்விடன்வேண்மாலாங்காதென்பகொலையுங்காதும்
கோமளம்பசுவனப்புக்கூறியவிளமைக்கும்பேர்
நாமமாங்கலித்தன்மிக்குநற்பொலிவெழுச்சியோசை
மாமையேநிறம்வனப்பாமலயசஞ்சந்தந்தென்றல். (௧௬)

மகரவெதுகை முற்றிற்று.
ஆ விருத்தம் — கநுக.

குமுதமென்பது-அடுப்பு, மேற்றிசையானை, ஒலி, வெண்ணெய்தல்.
சிமயம்—மலை, மலையினுச்சி. உ. தீ-நெருப்பு, நரகம், தீமை. ௩.
அமறல்-பொலிவு,நெருங்கல். உ. அரில்-சிறுதூறு, பிணக்கு,குற்றம்.
சிமிலி—குடுமி, உறி, சில்வண்டு. ௩.
சம்பு—சூரியன், நாவல், சிவன், பிரமன், திருமால், நரி. ௬.
தும்பி—யானை, வண்டு. உ. துன்னல்—நெருங்கல், கிட்டல். உ.
கம்புள்-சங்கு, சம்பங்கோழி. உ. அம்பரம்-கடல்,ஆகாயம்,வத்திரம்.
அண்ணல்—பெருமையிற்சிறந்தோன், பெருமை. உ.
கிம்புரி—முடி, யானைக்கொம்பிற்பூண். உ. கேட்டை—மூதேவி.
ஒருநட்சத்திரம். உ. கும்பி—சேறு, யானை, நரகம். ௩. குலை—
செய்கரை, கமுகு வாழைமுதலியவற்றின் காய்க்குலை. உ.
உம்பல்—ஆண்விலங்கு, யானை, குலம், எழுச்சி. ௪.
அம்பல்—பழிச்சொல், சிலரறிந்துபுறங்கூறல். உ.
சம்பலை—படம், ஒலி, நடுக்கம், துன்பம். ௪.
செம்புலம்—பாலைநிலம், போர்க்களம். உ. தம்பம்—கவசம், தூண். உ.
சமழ்த்தல்—வருத்தம், வெட்கம். உ. கம்பம்—நடுக்கம், தூண். உ.
கந்தன்—அருகன், முருகக்கடவுள். உ.
அமரர்—தேவர், பகைவர். * உ. அவந்தி—கிளி, ஒரூர். உ.
அமுது—பால், தேவருணவு, அமிர்தம். ௩.
அமலை—ஒலி, சோறு, பார்ப்பதி. ௩.
தமம்—இருள், இராகு. உ. சார்ங்கம்—விற்பொது, திருமால்வில்.
ஆம்பிரம்—புளிமா, தேமா, புளிப்பு. ௩.
சாம்பு—பொன், பறை. உ. தாண்டவம்—கூத்து, தாண்டுதல். உ.
பாம்பு—கரை, பாம்பு. உ. பை—பாம்பின்படம், பச்சை. உ.
ஆம்பி—ஒலி, காளான். உ. அயிராணி—பார்ப்பதி, இந்திராணி. உ.
காமன்—இந்திரன், மன்மதன், வண்டு, திப்பிலி. ௪.
காமம்—காமநோய், ஆசை. உ. கணிச்சி—மழு, தோட்டி. உ.
பூமன்—பிரமன், செவ்வாய். உ. புரையோர்-கீழ்மக்கள்,மேன்மக்கள்.
சேமம்—காவல், இன்பம். உ. தெக்கிணம்—வலப்பக்கம், தெற்கு. உ.
காமுகன்—தூர்த்தன், மன்மதன், திருமால். ௩.
காது—கொலை, செவி. உ. கோமளம்—பசு, அழகு, இளமை. ௩.
கலித்தல்—மிகுதி, பொலிவு, எழுச்சி, ஒலி. ௪.
மாமை—நிறம், அழகு, உ. மலயசம்—சந்தனமரம், தென்றல். உ.

---

* அமரார் - பகைவர்.

# யகரவெதுகை.

காயமெய்விண்வெண்காயம்பெருங்காயங்கறிகரித்தல்
நேயநெய்யெண்ணெயன்பாநிறமென்பமருமங்காந்தி
ஆயமேகவற்றிற்றாயமாதாயமாதர்கூட்டம்
சாயலென்பதுமேம்பாடுதருமழகுடனேமென்மை. (க)

வயநீர்புட்பொதுவலிப்பேர்வயல்வெளிபழனமும்பேர்
சயம்வெற்றிசருக்கரைப்பேர்சடமுடல்வஞ்சம்பொய்யாம்
நியமமேநியதிவிதிநிச்சயநகரங்கோயில்
இயமென்பவொலியேவார்த்தைவாச்சியமிம்முப்பேரே. (உ)

அயமென்பநீர்தடாகமாடுவெம்பரியிரும்பாம்
கயமென்மைகுளமேயாழங்களிறுகீழ்பெருமைதேய்வாம்
பயமென்பசுதைநீரச்சம்பாலொடுபெயன்பேரைந்தே
அயனமேவழியினுமமாண்டினிற்பாதிக்கும்பேர். (ங)

பயிரொலிபயிலேபைங்கூழ்பறக்கும்புட்குரலிந்நாற்பேர்
கயினியேயத்தநாளுங்கைம்மையுமிருபேர்காட்டும்
வயிரமேசெற்றங்கூர்மைவச்சிரமோர்மணியேசேகு
கயில்பிடர்த்தலையேபூணின்கடைப்புணர்விருபேர்தானே. (ச)

ஐயமேபிச்சையேற்குமோடனுமானம்பிச்சை
ஐயனேமூத்தோன்சாத்தனப்பனீச்சுரனாற்பேரே
தொய்யலேயுழவுஞ்சேறுந்துயரமுமகிழ்ச்சியும்பேர்
மொய்செருக்களம்போர்யானைமூசல்வண்டொடுதிரட்பேர். (ரு)

வயவனேவீரனோடுவலியான்காதலனுமாகும்
குயிறலேசெறிதல்கூவல்குடைதல்பண்ணுதனாற்பேரே
வயினிடமுதரம்வீடாம்வயாக்கருவருத்தங்காதல்
மயல்செத்தைமயக்கம்பேயாமறவரேவயவர்வேடர். (சு)

குயிலேகோகிலமுஞ்சொல்லுங்கொண்மூவுந்துளையுநாற்பேர்
வயமாவேகுதிரைசிங்கமதகரிபுலியுமாகும்
வியலென்பவிசாலம்பீடாம்வேய்துளையொற்றுமூங்கில்
மயிலையேமீனராசிமீனிருவாட்சிமுப்பேர். (எ)

சயிந்தவங்குதிரையோடுதலையுமிந்துப்புமாகும்
குயந்தனமிளமையோடுகூரரிவாளுமுப்பேர்
நயந்தோனேநண்பன்கொண்கனலம்விருச்சிகமேநன்மை
பயம்பென்பதானைவீழும்படுகுழிபள்ளமாமே. (அ)

# யகரவெதுகை.

காயமென்பது—உடல், ஆகாயம், வெண்காயம், பெருங்காயம்.மிளகு, காரப்பு. கூ.
நேயம்—நெய். எண்ணெய், அன்பு. ந. நிறம்—மார்பு. ஒளி. உ.
ஆயம்—கவற்றிற்றாயம், இலாபம். பெண்கள்கூட்டம். ந.
சாயல்—மேம்பாடு. அழகு, மென்மை. ந.
வயம்—நீர், பறவைப்பொது, வலிமை. ந. வயல்—வெளி, வயல். உ.
சயம்—வெற்றி, சருக்கரை. உ. சடம்—சரீரம், வஞ்சனை, பொய். ந.
நியமம்—செய்கடன், தெரு, நிச்சயம், நகரம், கோயில். ரு.
இயம்—ஒலி. சொல், வாச்சியப்பொது. ந.
அயம்—நீர், குளம், ஆடு, குதிரை, இரும்பு. ரு.
கயம்—மென்மை, குளம், ஆழம், யானை. கீழ், பெருமை, தேய்வு.
பயம்—அமிர்தம். நீர், பயம், பால், பயன். ரு.
அயனம்—வழி, ஆண்டிற்பாதி. உ.
பயிர்—ஒலி, பயில், பயிர், பறவைக்குரல். ச.
கயினி—அத்தநட்சத்திரம், விதவை. உ.
வயிரம்—நெடுங்காலநிகழுங்கோபம், கூர்மை, வச்சிராயுதம். வைரமணி, மரவயிரம், ரு. கயில்—பிடர், ஆபரணக்கடைப்புணர்வு. உ.
ஐயம்—பிச்சையேற்குமட்கலம், சந்தேகம், பிச்சை. ந.
ஐயன்—மூத்தோன், ஐயனார், பிதா, கடவுள். ச.
தொய்யல்—*உழவு, * சேறு, துன்பம், களிப்பு. ச.
மொய்—போர்க்களம், போர், யானை, மொய்த்தல். வண்டு, கூட்டம்.
வயவன்—வீரன், வலியானென்னும்புள், தலைவன். ந.
குயிறல்—நெருங்கல், அழைத்தல், துளைத்தல். செய்தல். ச.
வயின்—இடம், வயிறு, வீடு. ந. வயா—கருப்பம், வருத்தம். ஆசை.
மயல்—செத்தை. மயக்கம், பேய். ந. மறவர்—படைவீரர், வேடர்.
குயில்—ஓர்பட்சி. வார்த்தை. § மேகம். துளை. ச.
வயமா—குதிரை, சிங்கம், யானை, புலி. ச.
வியல்—அகலம், பெருமை. உ. வேய்-உட்டுளை. ஒற்று, மூங்கில், ந.
மயிலை—மீனராசி. மீன், இருவாட்சி. ந.
சயிந்தவம்—குதிரை, தலை, இந்துப்பு. ந.
குயம்—முலை, இளமை, அரிவாள். ந.
நயந்தோன்—தோழன், கணவன். உ. நலம்—தேள், நன்மை. உ.
பயம்பு—யானைப்படுகுழி, பள்ளம். உ.

---

* தொய்பல் - உழவு, சேறு. § குயின் - மேகம்.

இயனடைதமிழ்சாயற்பேரேல்லையேபொழுதுவாவி
குய்யென்பகறிகரித்தல்குளிர்நறும்புகையிரண்டாம்
செயிரென்பசினங்குற்றப்பேர்சேடிவிஞ்சையரூர்பாங்கி
உயவைகாக்கணமேமுல்லையுற்றகான்யாறுமாமே. (௯)

செய்யலேயொழுக்கங்காவல்சேறுசெய்வினைநாற்பேரே
நெய்தலேகடற்சார்பூமிநெய்தற்பூச்சாபறைப்பேர்
வெய்யோனாதவனேதீயோன்விருப்பினன்றனக்குமப்பேர்
ஐயையேயுமையாடுர்க்கைமகளருந்தவப்பெண்ணாசாள். (௧௦)

ஐயழகிடைச்சொல்கோழையரசனோடிருமல்சாமி
மையென்பதஞ்சனங்கார்மலடிருளாடுமொசாம்
கையிடம்படையுறுப்பொப்பனைசெங்கைசிறுமைசீலம்
வையந்தேரேறுரோணிவசுந்தரைசிவிகையூர்தி. (௧௧)

சேய்குகனிளமைதூரஞ்செம்மைசேண்சிறுவன்செவ்வாய்
வாய்குழலிடம்வாய்மைப்பேர்மாருதியனுமன்வீமன்
ஆய்தலேநுணுக்கந்தேர்தலாறென்பவழிநதிப்பேர்
வேய்தல்சூடுதென்மூடற்பேர்விநாயகனருகன்முன்னோன். (௧௨)

அயிர்கரும்பின்றேங்கட்டியான்றநுண்மணலேநுண்மை
செயருழிலொழுக்கமென்பதெய்வமேகடவுளூழாம்
நயமென்பமகிழ்ச்சியின்பநன்மைநற்பயனாற்பேரே
பெயரென்பபெருமைகீர்த்திபேசுநாமப்பேராமே. (௧௩)

யகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - ௧௩௪.

## ரகரவெதுகை.

சிரகமேகரகமாகுஞ்சென்னியிற்சோடுமெப்பேர்
கரகமேயாலங்கட்டிகமண்டலந்துளிநீர்கங்கை
மரபுதான்முறைமைதொன்மைமறலென்பபிணக்குங்கூற்றும்
சரபமெண்காற்புள்ளென்பவரையாடுதானுமாமே. (௧)

இரதமேபுணர்ச்சிசூதமின்சுவையரைஞாண்பொற்றேர்
அரணமேகவசங்காடேயணிமதில்வேலிநாற்பேர்
கரணமெண்மனாதிகூத்துக்கலவிகாரணமைம்பேரே
சரணந்தாண்மறைபுகற்பேர்தன்னமான்கன்றேயற்பம். (௨)

இயலென்பது—ஒழுக்கம், இயற்றமிழ், சாயல். ந. எல்லை - காலம், தடாகம். உ.

குய்—தாளித்தல், நறும்புகை. உ. செயிர்—கோபம், குற்றம். உ.

சேடி—வித்தியாதரருலகு, தோழி. உ.

உயவை—காக்கணங்கொடி, முல்லைக்கொடி, கான்யாறு. ந.

செய்யல்—ஒழுக்கம், காவல், சேறு, செய்தொழில். ச.

நெய்தல்—கடல்சார்ந்தநிலம், நெய்தற்பூ, சாபறை. ந.

வெய்யோன்—சூரியன், கொடியோன், விருப்புற்றோன். ந.

ஐயை—பார்ப்பதி, துர்க்கை, மகள், தவப்பெண், தலைவி. ரு.

ஐ—அழகு, இடைச்சொல், கோழை, அரசன், இருமல், தலைவன். சு.

மை—அஞ்சனம், மேகம், மலடு, இருள், ஆடு, குற்றம். சு.

கை—இடம், படையுறுப்பு, அலங்காரம், கைத்தலம், சிறுமை, ஒழுக்கம். சு.

வையம்—தேர், எருது, உரோகிணிநட்சத்திரம், பூமி, சிவிகைவாகனம்.

சேய்—முருகக்கடவுள், இளமை, தூரம், சிவப்பு, நீளம், மகன், செவ்வாய்.

வாய்—ஊதுகுழல், இடம், உண்மை. ந. மாருதி—அனுமன், வீமன்.

ஆய்தல்—நுண்மை, ஆராய்தல். உ. ஆறு—வழி, நதி. உ. வேய்தல்—சூடுதல், மூடுதல். உ. விநாயகன்—அருகன், விநாயகக்கடவுள். உ.

அயிர்—கண்டசர்க்கரை, நுண்மணல், நுண்மை. ந.

செயல்—தொழில், ஒழுக்கம் உ. தெய்வம்—கடவுள், ஊழ். உ.

நயம்—மகிழ்ச்சி, இன்பம், நன்மை, நற்பயன். ச.

பெயர்—பெருமை, புகழ், பேர். ந.

---

# ரகரவெதுகை.

---

சிரகமென்பது—கரகம், தலைச்சீரா. உ.

கரகம்—ஆலங்கட்டி, கமண்டலம், நீர்த்துளி, நீர், கங்கை. ரு.

மரபு—முறைமை, பழமை. உ. மறல்—பிணக்கு, யமன். உ.

சரபம்—எண்காற்புள், வரையாடு. உ.

இரதம்—புணர்ச்சி, பாதரசம், இனிமை, அரைஞாண், தேர். ரு.

அரணம்—கவசம், காடு, மதில், வேலி. ச.

கரணம்—எண், மனமுதலியகரணம், கூத்தின்விகற்பம், காதலோர் கூட்டம், காரணம். ரு. சரணம்—கால், அடைக்கலம்புகுதல். உ.

தன்னம்—பசுவின்கன்று, அற்பம். உ.

உரமென்பவலியேஞானமூக்கமேமார்புநாற்பேர்
சிரமென்பநெடுங்காலப்பேர்சென்னியுமன்னதேயாம்
புரமென்பபுரிமுன்மெய்ப்பேர்புரவலன்வள்ளல்வேந்தன்
கரமென்பகிரணஞ்செங்கைகழுதைநஞ்சிறுத்தலும்பேர். (ந)

அரவநூபுரம்பாம்போசையாய்வென்பவருத்தமாய்தல்
பரவைவாரிதிபரப்புப்பங்கயமாதின்கூத்தே
இரலையேகலையூதுங்கொம்பிரண்டுடன்முதஞென்ப
அரசுமன்னிராச்சியப்பேரம்பிநாவாயேதெப்பம். (ச)

அரம்பைதெய்வப்பெண்வாழையாஞுவேயிரதநன்மை
சரந்தனிமணிவடம்போர்சாயகநாணற்புற்பேர்
நரந்தமென்பதுநாரத்தைநாறுங்கத்தூரிக்கும்பேர்
சுருங்கையேகரந்துபண்ணுங்கற்படைநுழைவாயிற்பேர். (ரு)

ஆரமேபதக்கமுத்தமாத்திசந்தனமேமாலை
வாரநீர்க்கரையேயன்புமலேச்சாரல்கிழமைபங்காம்
தாரம்வல்லிசைநாவெள்ளிதலைவியோரிசைகண்ணென்ப
கோரஞ்சேரழன்மாவட்டில்கொடுமைபூமொட்டுவாசி. (சு)

இராசியமறைவேயோனியிறப்பென்பமிகுதிபோக்காம்
பராகமேயிரேணுவாகும்பரிமளமலர்த்தூளும்பேர்
துரோணமேசிம்புள்காக்கைதும்பைவில்லொடுபதக்காம்
இராகமேகீதஞ்செம்மையிச்சையேநிறமுமேற்கும். (எ)

பரிபரிசுமத்தல்வேகம்பாதுகாத்திடல்வருத்தம்
புரிவளைவிரும்பல்செய்தல்புரத்தொடுகயிறுகட்டாம்
பரிதலேயறுத்தலன்புபகர்ந்திடிலிரங்கலும்பேர்
வரிசுணங்கெழுத்துப்பாட்டுவாரிதியிறையேநெல்லு. (அ)

சரிகரவளைவழிப்பேர்சராவமேயகல்சலாகை
கரியவன்சனியின்பேராங்கண்ணனிந்திரனுமாமே
பரிகமேகிடங்குமேடைபகர்மதில்கணையநாற்பேர்
கரில்குற்றங்காழ்த்தலும்பேர்காதைசொற்கதையுமாமே. (கூ)

மூரியேநெருமையாற்றன்முறைநீடுநெரிவுமாமே
வாரிநீர்கதவுவெள்ளமதில்கடல்வருவாய்வட்டை
நாரிபன்னடைபெண்ணேநறவுவின்ஞணிநாற்பேர்
பாரியோர்வள்ளல்கட்டில்பாரிகட்டேசுமுந்நீர். (கo)

உரமென்பது—வலிமை, ஞானம், உள்ளக்கிளர்ச்சி, மார்பு. சு.
சிரம்—நெடுங்காலம், தலை. உ.
புரம்—மருதநிலத்தூர், முன், உடம்பு. ௩. புரவலன்—கொடையுளோன், அரசன். உ.
கரம்—சூரியகிரணம், கை, கழுதை, நஞ்சு, குடியிறை. ரு.
அரவம்—சிலம்பு, பாம்பு, ஒலி. ௩. ஆய்வு-வருத்தம், ஆராய்தல். உ.
பரவை—கடல், பரப்பு, திருமகளாடல். ௩.
இரலை—கலைமான், ஊதுகொம்பு, அச்சுவினிநட்சத்திரம். ௩.
அரசு—அரசன், இராச்சியம். உ. அம்பி—மரக்கலம், தெப்பம். உ.
அரம்பை—தெய்வப்பெண், வாழை. உ. ஆணு-இனிமை, நன்மை. உ.
சரம்—மணிவடம், யுத்தம், அன்பு, நாணற்புல். ச.
நரந்தம்—நாரத்தை, கத்தூரி. உ. சுருங்கை-கோட்டையிற்கள்ளவழி, நுழைவாயில். உ.
ஆரம்—பதக்கம், முத்து, ஆத்திமரம், சந்தனமரம், பூமாலை. ரு.
வாரம்—நீர்க்கரை, அன்பு, மலைச்சாரல், கிழமை, பங்கு. ரு.
தாரம்—வல்லிசை, நா, வெள்ளி, மனைவி, ஏழிசையுளொன்று, கண்.
கோரம்—சோழன்குதிரை, வட்டில், கொடுமை, பூவரும்பு, குதிரை.
இராசியம்—மறைவு, பெண்குறி. உ. இறப்பு—மிகுதி, போதல். உ.
பராகம்—துகள், பூந்தாது. உ. துரோணம்—எண்காற்பட்சி, காகம், தும்பை, வில், பதக்கு. ரு.
இராகம்—இசைப்பாட்டு, சிவப்பு, ஆசை, நிறம். ச.
பரி—குதிரை, சுமத்தல், சீக்கிரம், பாதுகாத்தல், வருத்தம். ரு.
புரி—சங்கு, விரும்புதல், செய்தல், நகரம், கயிறு, கட்டு. சு.
பரிதல்—அறுத்தல், அன்புசெய்தல், இரங்கல். ௩.
வரி—தேமல், எழுத்து, இசைப்பாட்டு, கடல், குடியிறை, நெல். சு.
சரி—கைவளை, வழி. உ. சராவம்—அகல், சலாகை. உ.
கரியவன்—சனி, திருமால், இந்திரன். ௩.
பரிகம்—அகழி, மதிலுண்மேடை, மதில், வளைதடி. ச.
கரில்—குற்றம், உரைத்தல். உ. காதை—சொல், கதை. உ.
மூரி—எருது, எருமை, வலிமை, பழமை, பெருமை, நெரிவு. சு.
வாரி—நீர், கதவு, வெள்ளம், மதில், கடல், வருவாய், வழி. எ.
நாரி—பன்னாடை, பெண், வாசனை, வின்னாணி. ச.
பாரி—கடைவள்ளலெழுவரிலொருவன், கட்டில், மனைவி, கள், நல்லாடை, கடல். சு.

அருகலேசுருங்கல்சார்தலமுதமேசுதைநீர்மோக்கம்
பொருளேசொற்பொருள்பல்பண்டம்பொன்பண்புபிள்ளைவாய்மை
குருநிறமோர்நோய்தேயங்நரவன்பாரம்வியாழன்
அருணமென்பதுமான்செம்மையாடலுமிச்சைநாற்பேர். (௧௧)

முருகுகள்ளிளமைநாற்றமுருகவேள்விழாவணப்பாம்
மருமானேமருமகன்பேர்வழித்தோன்றற்பேருமாமே
இருசுபண்டியுளிரும்புசெவ்வையென்றிருபேரென்ப
கருமையேபெருமையாகுங்கறுப்பொடுவலியுமாமே. (௧௨)

கிருத்திமந்தோலேபண்ணல்கெட்டபொய்விட்டபூதம்
விருத்தியேதொழிலிலாபம்விரிபொருள்வளர்ச்சிக்கும்பேர்
துருத்தியாற்றிடைக்குறைப்பேர்தோலுமாந்துட்டைக்கும்பேர்
அரத்தமேயிரத்தஞ்செம்மையரக்கொடுற்பலங்கடம்பு. (௧௩)

சீர்செல்வந்தாளொத்துச்சீர்த்திகாத்தண்டேபாரம்
தார்கொடிப்படைபூத்தண்டுதாமங்கிங்கிணியின்கோவை
சூரென்பநோயேயச்சமஞ்சாமையணங்குஞ்சொல்லும்
கார்நீர்வெள்ளாடுமேகங்கறுப்பிருண்மாரிக்காலம். (௧௪)

ஆர்கூர்மையாத்திதேரினகத்துறுசுதிருமாகும்
பீரென்பமுலையிற்பாலும்பீர்க்கொடுபசலைக்கும்பேர்
வாரென்பநெடுமைகச்சுமன்னுநீர்நேர்மைநாற்பேர்
நேர்சமமீதல்பாதிநெடிலுடன்பாடுநுட்பம். (௧௫)

அருணன்சூரியன்றேர்ப்பாகனுதித்தன்புதன்முப்பேரே
வருணமேகுலநீராகுமகனென்பசிறந்தோன்மைந்தன்
தரணிபாரிரவிவெற்பாந்தையல்பெண்ணழகுமாகும்
கரிணியேமுழையும்வெற்புங்களிற்றொடுபிடியுங்காட்டும். (௧௬)

மாரியேவிளிவுகள்ளுவடுகிநோய்மேகமைம்பேர்
ஓரியாண்மயிரோர்வள்ளன்முதுநரிமுசுவென்றோதும்
காரியோர்வள்ளலையன்கடுச்சனிவடுகன்காக்கை
தூரியமிடபமாடைதுந்துபியெழுதுங்கோலே. (௧௭)

பிரமமேவேதம்வேள்விமந்திரம்பிரமன்மாலோ
டிரவிதீமுனிவர்முத்தியீசனம்புலிபன்னொன்றே
அரசனேவியாழன்மன்னும்பணந்தோணியாமை
குரல்கதிர்சிறகுமாதர்கூந்தல்யாழ்நரம்புநாற்பேர். (௧௮)

அருகலென்பது—குறைதல், கிட்டல். உ. அமுதம்—அமிர்தம், நீர், மோட்சம். ௩. பொருள்—சொற்பொருள், பலபண்டம், பொன், குணம், மகன், உண்மை. ௬.
குரு—நிறம், ஒருவியாதி, ஒருதேசம், ஆசான். பாரம், வியாழன். ௬.
அருணம்—மான், * சிவப்பு, ஆடு, எலுமிச்சை. ௪.
முருகு—கள், இளமை, வாசனை, முருகன், திருவிழா, அழகு. ௬.
மருமான்—மருகன், வழித்தோன்றல். உ.
இருசு—பண்டியுளிரும்பு, செவ்வை. உ.
கருமை—பெருமை, கறுப்பு, வலிமை. ௩.
கிருத்திமம்—தோல், செய்தல், பொய், பூதகணம். ௪.
விருத்தி—தொழில், இலாபம், விரிவுரை, வளர்தல். ௪.
துருத்தி—ஆற்றிடைக்குறை, தோல், தொழுத்தை. ௩.
அரத்தம்—இரத்தம், சிவப்பு, அரக்கு, செங்குவளை, கடப்பமரம். ௫.
சீர்—செல்வம், தாளவொத்து, மிகுபுகழ், [புகழ்.] காத்தண்டு, பாரம்.
தார்—கொடிப்படை, மலர், சேனை, பூமாலை, கிங்கிணிமாலை. ௬.
சூர்—வியாதி, அச்சம், அஞ்சாமை, தெய்வப்பெண். ௪.
கார்—நீர், வெள்ளாடு, மேகம், கருமை, இருள், கார்காலம். ௬.
ஆர்—கூர்மை, ஆத்திமரம், தேரினகத்திற்செறிகதிர். ௩.
பீர்—முலைப்பால், பீர்க்கு, பசலை. ௩.
வார்—நீளம், கச்சு, நீர், நேர்மை. ௪.
நேர்—ஒப்பு, கொடுத்தல், பாதி, நீளம், உடன்பாடு, நுட்பம். ௬.
அருணன்—சூரியன்றேர்ப்பாகன், சூரியன், புதன். ௩.
வருணம்—குலம், நீர். உ. மகன்—சிறப்புற்றோன், புத்திரன். உ.
தரணி—பூமி, சூரியன், மலை. ௩. தையல்—பெண், அழகு. உ.
கரிணி—மலைமுழை, மலை, யானை, பெண்யானை. ௪.
மாரி—சாவு, கள், காடுகாள், வியாதி, மேகம். ௫.
ஓரி—ஆண்மயிர், கடைவள்ளலெழுவரிலொருவன், † கிழநரி, ஆண்முசு. ௪. காரி—முதல்வள்ளலெழுவரிலொருவன், ஐயனார், நஞ்சு, சனி, வைரவக்கடவுள், காகம். ௬.
தூரியம்—எருது; வஸ்திரம், வாச்சியப்பொது, எழுதுகோல். ௪.
பிரமம்—வேதம், யாகம், மந்திரம், பிரமன், திருமால், சூரியன், நெருப்பு, இருடிகள், மோட்சம், சிவன், சந்திரன். ௧௧.
அரசன்—வியாழன், இராசன். உ. அம்பணம்—தோணி, ஆமை. உ.
குரல்—கதிர், இறகு, பெண்மயிர், யாழ்நரம்பு. ௪.

---

* அரிணம் - மான். † ஓரி - நரிக்கும்பெயர்.

தோரைநெல்விகற்பமூங்கிலரிசிகைவரைசொன்முப்பேர்
ஆரையேமதில்புற்பாயாமகலுளேபரப்பூர்நாடே
ஓரையேமாதர்கூடிவிளையாடலுடனிராசி
தாரைகண்மழைநேரோடாறுரகைவழியேகூர்மை. (௧௯)

ஊர்திதேர்விமானம்பாண்டிலும்பலேசிவிகையாய்மா
ஆர்வமோர்நரகமன்பாமகலமார்பொடுவிசாலம்
ஆர்வலர்கொண்கரன்பரணுவென்பதுயிர்நன்மைப்பேர்
ஆர்தலேநிறைதலுண்டலகளந்தான்மிடாநற்றாழி. (௨௦)

பாரமேகவசந்தோணிபல்லணம்பொறையினோடு
நீருறுகரைவன்பாரநிறைதரைநிகழ்த்துமெண்பேர்
சூரனேயிரவிதீநாய்துகளென்பகுற்றந்தூளாம்
சாரங்கமானும்வண்டுஞ்சாதகப்புள்ளுமாமே. (௨௧)

ஆரல்கார்த்திகைநாள்செவ்வாயாரணுறப்பொருமீனூற்பேர்
சாரலேமருதயாழினிசையொடுசைலப்பக்கம்
மூரலேநகைபல்சோறுமுரம்பென்பமேடுபாறை
கூரல்புட்சிறகுமாதயோதியுமிருபேர்கூறும். (௨௨)

சாரிகைபூவைசுங்கஞ்சுழல்காற்றுத்தானுமாகும்
காரிகையழகுபெண்ணேகலித்துறையோர்நூற்கும்பேர்
வாரணங்கவசங்கோழிதடைசங்குவாரிகைம்மா
பூருவமுதுமைமுன்புகிழக்கென்றும்புகலலாமே. (௨௩)

ஏரழகுழுபெற்றப்பேரிராசிதானேரகூட்டம்
பாருலகந்தேர்ப்பாரம்பயல்பள்ளம்பாதிசிற்றாள்
போரமர்சதயத்தோடுபுகலுமென்முதலாஞ்சும்மை
பீருவேயச்சமுள்ளோன்பெயரொடுபுருவமாமே. (௨௪)

அருப்பமாரிடநோய்காடாமரணுடனூருமப்பேர்
மரக்காலாயிலியஞ்சோதிமாயவனுடன்முப்பேர்
நிரப்பென்பமிடிநிறைப்பேர்நிறையழியாமைநீர்ச்சால்
துருக்கமேயரண்கத்தூரிகுங்குமமரமுஞ்சொல்லும். (௨௫)

குருதியேசிவப்பிரத்தங்குசனெனக்கூறுமுப்பேர்
பரிதியேயூர்கோள்வட்டம்பாற்கரனேமிநாற்பேர்
சுருதியேயொலிவேதப்பேர்சுரமருநெறிகான்மார்க்கம்
இரதிபித்தளைபெண்யானைமதன்றேவியிச்சைநாற்பேர். (௨௬)

தோரையென்பது—ஓர்வகைநெல், வேயரிசி, கையிறை. ந.
ஆரை—மதில், புற்பாய். உ. அகலுள்—அகலம், ஊர், நாடு. ந.
ஓரை—மகளிர்விளையாட்டு, இராசி. உ.
தாரை—கண், மழை, நேரோடல், நட்சத்திரம், வழி, கூர்மை. சு.

ஊர்தி—தேர், விமானம், பண்டி, யானை, தண்டிகை, குதிரை. சு.
ஆர்வம்—நரகம், அன்பு. உ. அகலம்—மார்பு, விரிவு. உ.
ஆர்வலர்—நாயகர், அன்புடையோர். உ. அணு—ஆன்மா, நுட்பம்.
ஆர்தல்—நிறைதல், புசித்தல். உ. அகளம்—மிடா, சாடி. உ.

பாரம்—கவசம், தோணி, குதிரைக்கலணை, பொறுமை, நீர்க்கரை,
கனம், ஓர்நிறை, பூமி. அ.
சூரன்—சூரியன், நெருப்பு, நாய். ந. துகள்—குற்றம், புழுதி. உ.
சாரங்கம்—மான், வண்டு, சாதகப்பட்சி. ந.

ஆரல்—கார்த்திகைநட்சத்திரம், செவ்வாய், மதில், ஆரான்மீன். ச.
சாரல்—மருதயாழிறைரிசை, மலைப்பக்கம். உ.
மூரல்—சிரிப்பு, பல், சோறு. ந. முரம்பு—மேடு, பாறை. உ.
கூறல்—பறவையினிறகு, பெண்மயிர். உ.

சாரிகை—நாகணவாய்ப்புள், சுங்கவிறை, சுழல்காற்று. ந.
காரிகை—அழகு, பெண், கவித்துறை, ஓர்நூல். ச.
வாரணம்—கவசம், கோழி, தடுத்தல், சங்கு, கடல், யானை. சு.
பூருவம்—பழமை, முன்பு, கீழ்த்திசை. ந.

ஏர்-அழகு, உழுமெருது. உ. இராசி-மேடமுதலியராசி, கூட்டம். உ.
பார்—பூமி, தேர்ப்பலகைப்பா. உ. பயல்—பள்ளம், பாதி, சிறுபிள்ளை
போர்—யுத்தம், சதயநட்சத்திரம், நெல்முதலியசுமை. ந.
பீரு—அச்சமுள்ளோன், புருவம். உ.

அருப்பம்—வழுக்குநிலம், வியாதி, காடு, கோட்டை, ஊர். ரு.
மரக்கால்-ஆயிலியநட்சத்திரம், சோதிநட்சத்திரம், திருமால்கூத்து.
நிரப்பு—தரித்திரம், நிறைவு. உ. நிறை—அழிவின்மை, நீர்ச்சால்.
துருக்கம்—அரண், கத்தூரி, குங்குமமரம். ந.

குருதி—சிவப்பு, இரத்தம், செவ்வாய். ந.
பரிதி—பரிவேடம், வட்டம், சூரியன், சக்கராயுதம். ச.
சுருதி—ஒலி, வேதம். உ. சுரம்—அரியவழி, காடு, வழி. ந.
இரதி—பித்தளை, பெண்யானை, மன்மதன்மனைவி, ஆசை. ச.

புரைகுற்றமுவமையில்லம்புழையுயர்ச்சியுமைம்பேரே
விரைமணஞ்சாந்துதூபம்வீரைதான்றயரம்வாரி
நரைவெள்ளையிவுளிவெண்மைநந்திநற்சவரிநாரை
சுரைகள்ளான்முலைதுளைப்பேர்துளும்பலேதிமிறறுள்ளல். (௨௭)

மருளென்பகுறிஞ்சியாழின்றிறத்தொடுமயக்கமும்பேர்
இருளொருநரகமையலிருளொடுகருமையென்ப
பொருநர்போர்த்தலைவர்கூத்தர்புரவலர்பாணர்வீரர்
இருபிறப்பெயிறும்பார்ப்புமிந்துவும்புள்ளுமாமே. (௨௮)

மருதமேயொருமரஞ்செய்மருதமந்நிலப்பாடற்பேர்
எருவையேகொறுக்கைகோரைகழுகுசெம்பிரத்தமென்ப
தருமராசன்றன்புத்தன்சண்டனோடருகன்றானும்
கரியென்பதிருந்தைசான்றுகறையடிசேகுநாற்பேர். (௨௯)

கருவிபல்லியந்துணைக்காரணங்கள்யாழ்கவசமீட்டம்
பொருபடைக்கலந்தொடர்ச்சிபுயல்பலவினைப்பேர்கூட்டம்
பரியின்பல்லணமேயாடைகசைபதின்மூப்பேர்பன்னும்
சுரிகைபேசகவசம்வாளாந்துவைபிண்ணாக்கிறைச்சியோசை. (௩0)

குருகுபுள்ளிளமைநாரைகொல்லுலைமூக்குக்கோழி
சரிவெள்ளைமூலநாள்வாசந்தியொன்பான்பேர்சாற்றும்
முரசேயுத்தரட்டாதிப்பேரியமென்றுமொழியலாமே
தரளமேயுருட்சிமுத்தாஞ்சார்வென்பதிடமும்பற்றும். (௩௧)

முரண்வலிபகையாமென்பமொய்ம்புதோள்வலியுமாகும்
உரையென்பகிளவிதேய்வாமுவாத்தந்தியிளையோன்பௌவம்
ஒரேலொலிவிரைவுமாகுநிதியிருநிதிபொன்னென்ப
உருநிறம்வடிவட்டைப்பேரோதனஞ்சோறேயுண்டி. (௩௨)

அரிகிளிபுணரிமாறேரைம்மையிந்திரன்கால்காந்தி
பரிபுகர்பன்றிசிங்கம்பகைபுகைபாயல்சோலை
வரிமதிசேகுதேரைவானரமியமன்மூங்கில்
எரிபுரைநிறம்பொன்பாந்தளிரவிகண்வரிதார்பச்சை. (௩௩)

அரிசிநெற்கதிர்கள்கூர்மையளிபடைக்கலமேயீர்வான்
அரிதலேசயனநேமியடல்விசிபறையரித்தல்
பரிபுரமதனுட்பெய்தபரலோடிவ்வாறேழைந்தாம்
அரிதமேபசுமைதிக்காமார்ப்பொலிசிரித்தற்பேரே. (௩௪)

புரையென்பது—குற்றம், ஒப்பு, வீடு, உட்டுளை, உயர்சி. ரு.
விரை—வாசனை, கலவைச்சாந்து, நறும்புகை. ங.
வீரை—துன்பம், கடல். உ.
நரை—வெள்ளைக்குதிரை, வெண்மை, இடபம், சாமரம், நாரை. ரு.
சுரை-கள், பசுவின்முலை, உட்டுளை. ங. துளும்பல்-திமிறல், துள்ளல்.
மருள்—குறிஞ்சியாழ்த்திறம், மயக்கம். உ.
இருள்—ஓர்நரகம், மயக்கம், இருள், கறுப்பு. ச.
பொருநர்-படைத்தலைவர், நாடகர், அரசர், புகழ்ந்துபாடுவோர், வீரர்.
இருபிறப்பு—பல், பிராமணர், சந்திரன், பறவை. ச.
மருதம்—ஓர்மரம், வயல், மருதநிலத்திராகம். ங.
எருவை—கொறுக்கை, கோரை, கழுகு, செம்பு, இரத்தம். ரு.
தருமராசன்—புத்தன், யமன், அருகன். ங.
கரி—கரி, சாட்சி, யானை, மரவயிரம். ச.
கருவி—வாச்சியம், உபகரணம், யாழ், கவசம், ஈட்டம், ஆயுதப்பொது, தொடர்பு, மேகம், பலவினைப்பேர், கூட்டம், குதிரைக்கலணை, வஸ்திரம், குதிரைச்சம்மட்டி. கங.
சுரிகை—கவசம், உடைவாள். உ. துவை—பிண்ணாக்கு, தசை, ஒலி.
குருகு-பறவைப்பொது, இளமை, நாரை, கொல்லனுலைமூக்கு, கோழி, கைவளை, வெண்மை, மூலநட்சத்திரம், குருக்கத்தி. கூ.
முரசு—உத்தரட்டாதிநட்சத்திரம், வாச்சியப்பொது. உ.
தரளம்—உருட்சி, முத்து. உ. சார்வு—இடம், பற்று. உ.
**முரண்**—வலிமை, பகை. உ. மொய்ம்பு—புயம், வலிமை. உ.
உரை—சொல், தேய்தல். உ. உவா-யானை, இளையோன், பூரணை. ச.
ஒரேல்—ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு. உ. நிதி-சங்கநிதி, பதுமநிதி, பொன். ங.
உரு—நிறம், வடிவு, அட்டை. ங. ஓதனம்—சோறு, உணவு. உ.
அரி—கிளி, கடல், திருமால், தேர், தகடு, இந்திரன், காற்று, ஒளி, குதிரை, குற்றம், பன்றி, சிங்கம், பகை, புகை, பாயல், சோலை, வரி, சந்திரன், மரவயிரம், தவளை, குரங்கு, யமன், மூங்கில், நெருப்பு, உட்டுளை, நிறம், பொன், பாம்பு, சூரியன், கண்வரி, பூமாலை, பச்சை. ஙஉ.
அரிசி, நெற்கதிர், கள், கூர்மை, வண்டு, ஆயுதம், அரிவாள், அரிதல், சயனம், சக்கராயுதம், வலிமை, விசிப்பலகை, பறை, அரித்தல், சிலம்பினுட்பருக்கைக்கல். (கரு. ஆ சஎ.)
அரிதம்—பச்சைநிறம், திக்கு. உ. ஆர்ப்பு—ஒலி, நகைப்பு. உ.

அருவியே மலைச்சார்வாறுமரி திரைத்தாளுமாகும்
அரலையேகன்னி * வித்தாழிமரல்கழலையுமாமென்ப
கரடமேமதம்பாய்கின்றசுவட்டொடுகாக்கையாகும்
சுரியருன்பெண்மயிர்க்கேசொல்லுமாண்மயிர்க்கும்பேராம். (நரு)

திருவென்பகமலைசெல்வஞ்சிறப்பொடுமுப்பேர்செப்பும்
பரிவென்பதுன்பமின்பம்பகருமன்பிற்குமப்பேர்
கரையேநீர்க்கரைசேர்வாகுங்கைத்துநீணிதிவெறுப்பாம்
சுரகுருமகவான்றேவமந்திரியிருபேர்சொல்லும். (நசு)

அரற்றலேயழுகையோசையைதென்பவிரைவுநொய்தாம்
இரத்தஞ்செந்நீர்சிவப்பாமிலாங்கலியலந்தென்காந்தள்
அரக்கென்பமெழுகுகள்ளின்விகற்பமுஞ்சிவப்புமாகும்
அருச்சுனமருதுவெண்மையறிக்கைதானறிவுபற்றும். (நஎ)

அரந்தையென்பதுகுறிஞ்சியாழிசைதுன்பமாகும்
அருந்தலேயருவையுண்டலளித்தருன்கொடுத்தல்காத்தல்
அரங்கமாற்றிடைக்குறைப்பேராடிடஞ்சபையுமப்பேர்
அரங்குபோரிடம்வட்டாடுமிடஞ்சபைமனைவிகற்பாம். (நஅ)

முருந்தென்பமயிலின்றோகைமுதன்முள்ளுத்தவளமாகும்
விருந்தமேகிளையின்கூட்டம்விலங்கின்கூட்டமுமென்றாகும்
குரங்குவானரம்விலங்கின்பொதுமிகுகோணலாகும்
எருந்துரல்கிளிஞ்சிலென்பரிடஞ்செல்வம்விசாலம்வாமம். (நகூ)

ஆரியர்மிலேச்சர்நல்லோராமெனென்பதிடைச்சொலாவாம்
ஆரியேகதவுசோழனழகொடுமேன்மைக்கும்பேர்
காருகர்தந்துவாயர்கடுங்கொலையாளர்வண்ணார்
தாரகாரியென்பகாளிசண்முகன்றானுமாமே. (சo)

சார்கூடலொருதாருப்பேர்சான்றோன்மான்றலைநாள்பானு
வேரென்பமரவேர்வேர்வாம்விழைச்சுநல்விளமைபோகம்
பாராவாரந்தான்வாரிகடற்கரையிருபேர்பன்னும்
சாரணரொற்றரென்பசமண்முனிவர்க்கும்பேராம். (சக)

அராகஞ்செந்நிறமேபாலையாழ்முடுகியற்பாட்டாசை
கரேணுவேபிடியானைக்குங்கடுங்கொலையானைக்கும்பேர்
கிராணமேகிராணமூக்காங்கிளர்சிறுவட்டிலும்பேர்
கரீரமேமிடாவகத்திகரியின்பல்லடிமுளைப்பேர். (சஉ)

ரகரவெதுகை முற்றிற்று.

ஆகவிருத்தம் - உoசு.

---

* கன்னி - கனியென விகாரமாயிற்று.

அருவியென்பது—மலைச்சாரலாறு, தினைத்தாள். உ.
அரலை—துர்க்கை, விதை, கடல், மரச்செடி, கழலை. ரு.
கரடம்—மதம்பாய்சுவடு, காகம். உ.
சுரியல்—பெண்மயிர், ஆண்மயிர். உ.
திரு—திருமகள், செல்வம், சிறப்பு. ௩.
பரிவு—துன்பம், இன்பம், அன்பு. ௩.
கரை—நீர்க்கரை, சேர்வு. உ. கைத்து—பொன், வெறுப்பு. உ.
சுரகுரு—இந்திரன், வியாழன். உ.
அரற்றல்—அழுதல், ஒலி. உ. ஐது—சீக்கிரம், நொய்மை. உ.
இரத்தம்—உதிரம், சிவப்பு. உ. இலாங்கலி—கலப்பை, தென்னமரம், செங்காந்தள். ௩. அரக்கு—மெழுகு, கள்ளின்விகற்பம், சிவப்பு. ௩.
அருச்சுனம்—மருதமரம், வெண்மை. உ. அறிக்கை—அறிவு, பற்று.
அரந்தை—குறிஞ்சியாழிசை, துன்பம். உ. அருந்தல்—அருமை, உண்டல். உ.
அளித்தல்—கொடுத்தல், காத்தல். உ.
அரங்கம்—ஆற்றிடைக்குறை, நாடகசாலை, சபை. ௩.
அரங்கு—போர்க்களம், சூதாடுதற்குவகுத்தவறை, சபை, மனையின் விகற்பம். ௪.
மூருந்து—மயிலிறகினடிமுள், வெண்மை. உ.
விருந்தம்—சுற்றத்தின்கூட்டம், விலங்கின்கூட்டம். உ.
குரங்கு—குரங்கு, விலங்கின்பொது, வளைவு. ௩.
எருந்து—உரல், கிளிஞ்சில். உ. இடம்-செல்வம், விசாலம், இடப்பக்கம்.
ஆரியர்—மிலேச்சர், நல்லோர். உ. ஆன்—இடைச்சொல், பசு. உ.
* ஆரி—கதவு, சோழன், அழகு, மேன்மை. ௪.
காருகர்—நெய்வோர், கொலையாளர், வண்ணார். ௩.
தாரகாரி—காளி, முருகக்கடவுள். உ.
சார்—கூடுதல், ஒருமரம். உ. சான்றோன்—மிருகசீரிடநட்சத்திரம், சூரியன். உ.
வேர்—மரவேர், வேர்வை. உ. விழைச்சு—இளமை, புணர்ச்சி. உ.
பாராவாரம்-கடல், கடற்கரை. உ. சாரணர்-ஒற்றர், சமணவிருடிகள்.
அராகம்—செந்நிறம், பாலையாழ்த்திறம், முடுகியற்பாட்டு, ஆசை. ௪.
கரேணு—பெண்யானை, யானை. உ.
கிராணம்—கிரகணம், மூக்கு, சிறுவட்டில். ௩.
கீரம்—மிடா, அகத்திமரம், யானைப்பல்லடி, மூளை. ௪.

---

* அராரி - கதவு.

# லகரவெதுகை.

புலவர்பாடுநரேகூத்தர்புதனும்பர்கவிகளோவர்
வலவனேவெற்றியாளன்மருவுந்தேர்ப்பாகன்மாயோன்
அலகுநெற்கதிரேயாதிபலகறைநுளம்பெண்ணேதி
அலரிகண்வரியருக்கனழகொருமரம்பூவாமே. (௧)

ஆலமேவடவிருக்கமடுநஞ்சோடலர்பூநீராம்
மூலம்வேர்முதலேயேதுமுதிர்வுறுகிழங்கோர்நாளாம்
சீலமேகுணந்தண்டித்தநிகழ்சரித்திரமுப்பேரே
சாலமேவலைசாலேகமராமரஞ்சபைமதிற்பேர். (௨)

காலம்வைகறைகாலப்பேர்கலமலம்யாழ்பூணுவாய்
சாலகங்காலதர்ப்பேர்தானேபூமொட்டொகும்
தாலமுண்கலமேநாவேதராதலம்பனையேநாற்பேர்
ஆலலாடுதலொலிப்பேரறுவைசித்திரைநாளாடை. (௩)

இலம்பகமத்தியாயநுதற்சூட்டென்றிருபேராமே
இலஞ்சிமாவாவிகொப்பூழெயில்குணமகிழேயேரி
பலங்கனிபயன்காய்சேனைபலங்கிழங்கறுபேராகும்
அலங்கலென்பதுபூமாலையசைவொடுதளிரிலங்கல். (௪)

ஒலியென்பதிடியேகாற்றேயோசையென்றாகுமுப்பேர்
ஒலியலேயாறுந்தோலுமுடுத்தவாடையும்பைந்தாரும்
கலுழியேகான்யாறென்பகலங்கியநீருமாமே
கலைமதிப்பங்குதூசுகல்விநூலிரலைகாஞ்சி. (௫)

பீலியேயாலவட்டம்பெருவரைகலாபிதோகை
பாலிகையுதடுவெட்டம்படைவாளின்முட்டியும்பேர்
வேலியூர்மதில்காவற்பேர்மெத்தைமெல்லணையேசட்டை
தோலிபம்வனப்புவார்த்தைதுருத்திதோற்பலகையைம்பேர். (௬)

பாலையோர்மரநிலம்மந்நிலத்தினிற்பாடலும்பேர்
வேலையேகடலதற்குமேவியகரையேகாலம்
மாலையேயிரவோடந்திமாலிகையொழுங்குநாற்பேர்
சாலையேகுதிரைப்பந்தியறப்புறந்தானுமாமே. (௭)

அல்லிவெள்ளாம்பல்காயாவகவிதழாகமுப்பேர்
அல்லிராவிருளேயென்பவாகமார்புடலுமாமே
சில்லியேவட்டங்கீரைதேருருள்சிள்வீடென்ப
வல்லியாய்ப்பாடிவள்ளிவரைவொடுநிகளமாமே. (௮)

# லகரவெதுகை.

புலவரென்பது—பாடுவோர், கூத்தர், புதன், தேவர், பண்டிதர், கம்மாளர். சு.
வலவன்—வெற்றியாளன், தேர்ப்பாகன், திருமால். ௩.
அலகு—நெற்கதிர்முதலியன, பலகறை, நுளம்பு, இலக்கம், ஆயுதம். ரு.
அலரி—கண்வரி, சூரியன், அழகு, ஓர்மரம், பூப்பொது. ரு.
ஆலம்—ஆலமரம், நஞ்சு, மலர்ந்தபூ, நீர். ச.
மூலம்—வேர், முதல், காரணம், கிழங்கு, ஒருநட்சத்திரம். ரு.
சீலம்—குணம், தண்டித்தல், சரித்திரம். ௩.
சாலம்—வலை, பலகணி, ஆச்சாமரம், கூட்டம், மதில். ரு.
காலம்—விடியற்காலம், பொழுது. உ.
கலம்—கலப்பை, யாழ், ஆபரணம், மரக்கலம். ச.
சாலகம்—பலகணி, பூவரும்பு. உ. தாலம்—உண்கலம், நா, பூமி, பனை.
ஆலல்—ஆடுதல், ஒலி. உ. அறுவை-சித்திரைநட்சத்திரம், வஸ்திரம்.
இலம்பகம்—அத்தியாயம், நுதலணிமாலை. உ.
இலஞ்சி-மாமரம், வாவி, கொப்பூழ், மதில், குணம், மகிழமரம், எரி.
பலம்—பழம், பயன், காய், சேனை, வலிமை, கிழங்கு. சு.
அலங்கம்—பூமாலை, அசைதல், தளிர், ஒளிசெய்தல். ச.
ஒலி—இடி, காற்று, ஓசை. ௩.
ஒலியல்—நதி, தோல், வஸ்திரம், பூமாலை. ச.
கலுழி—கான்யாறு, கலங்கனீர். உ.
கலை—மதியின்பங்கு, சீலை, கல்வி, நூல், கலைமான், மேகலை. சு.
பீலி—ஆலவட்டம், மலை, மயில், மயிற்றோகை. ச.
பாலிகை—உதடு, வட்டம், படைவாளின்முட்டி. ௩.
வேலி—ஊர், மதில், காவல். ௩. மெத்தை—அமளி, சட்டை. உ.
தோல்—யானை, * எண்வகை வனப்பிலொன்று, சொல், துருத்தி, தோற்பலகை. ரு.
பாலை—ஓர்மரம், ஓர்நிலம், பாலைநிலப்பாடல். ௩.
வேலை—கடல், கடற்கரை, காலம். ௩.
மாலை—இரா, அந்திப்பொழுது, மாலை, ஒழுங்கு. ச.
சாலை—குதிரைப்பந்தி, அரச்சாலை. உ.
அல்லி—வெள்ளாம்பல், காயாமரம், அகவிதழ். ௩.
அல்—இரா, இருள். உ. ஆகம்—மார்பு, உடம்பு. உ.
சில்லி—வட்டம், சிறுகீரை, தேருருள், சிள்வீடு. ச.
வல்லி—இடைச்சேரி, படர்கொடி, அளவு, கால்விலங்கு. ச.

---

* எண்வகை வனப்பு. "அம்மையழகுதொன்மைதோல்விருந்தியைபு புலனிழைபெனவனப் பெட்டே." என்னுஞ் சூத்திரத்தாலறிக.

இல்லில்லாளில்லையென்றலிராசிசாவிடம்வீடாறே
மல்வளம்வலியினோடுமாயவனுடன்முப்பேர்
சில்லையென்பதுபிரண்டைசிள்வீடுதூர்த்தைக்கும்பேர்
ஒல்லையேவிரைவுதொல்லைகடுப்புடன்சிறுபோதாமே. (௯)

வில்லென்பமூலநாளாம்வெஞ்சிலையொளியுமப்பேர்
வல்வலிவிரைவுசூதாமலர்தலையெதிர்தரூன்றல்
புல்புலிபுணர்ச்சிபுன்மைபுதல்பனையனுடநாளாம்
கோல்லென்பதசைச்சோலையங்கொலையேவல்வருத்தநாற்பேர். (௧௦)

மால்புதன்பெருமைமேகமாயவன்மயக்கங்காற்றே
ஆலோடவிரண்டுசொல்லுமாமென்பதல்லவும்பேர்
வால்வெண்மைமிகுதிதூய்தாம்வசந்தனேதென்றல்காமன்
சால்புமாட்சிமைசான்றாண்மைசாற்றியவிருபேர்தானே. (௧௧)

வலம்புரிசங்குநந்தியாவர்த்தமோர்மரமுப்பேரே
புலம்பொலிதனிமையச்சம்பொய்யென்பபொக்கம்பொந்தாம்
சிலம்பொலிஞெகிழிகுன்றுஞ்செருந்திபஞ்சரம்வாட்கோரை
விலங்குகாற்றளைகுறுக்குமிருகத்தின்பொதுவுமாமே. (௧௨)

உலகமேதிசைவிண்பூமியுயர்குணஞ்சனமுயர்ந்தோர்
அலவனேஞெண்டுபூஞையும்புலிகடகராசி
இலயமேகூத்துங்கூத்தின்விகற்பமுமிருபேரென்ப
வலவைவஞ்சப்பெண்வல்லோன்வருடைதான்சிம்புளாடாம். (௧௩)

கலாபமேமணிவடம்மேகலைமயிலிறகுமுப்பேர்
சிலீமுகமுலைக்கண்வண்டுசித்திரபுங்கந்தானும்
சலாகைநன்மணிநாராசஞ்சவளமுமாகுமென்ப
விலோதம்பெண்மயிர்பதாகைவிடமென்பநஞ்சுந்தேளும். (௧௪)

செல்விடியேவன்மேகஞ்சிதலையுமாகுமென்ப
எல்லொளிபகலிகழ்ச்சியிரவுடனிரவியைம்பேர்
சொல்லுரைகீர்த்திநெல்லாந்தொடுத்தலைவளைத்தல்கட்டல்
கல்லொலிமலைகல்லென்பகரண்டநீர்க்காக்கைசெப்பாம். (௧௫)

கலிவஞ்சமொலியேவாரிகடையுகம்வலியைம்பேரே
சிலையொலிமலைகல்வில்லாஞ்செடியொளிசெறிவுதீதாம்
தலமென்பதிலைபுவிப்பேர்தலையிடந்தலைவிண்ணோதி
திலமேமஞ்சாடியெள்ளாந்திலகமஞ்சாடிபொட்டாம். (௧௬)

இல்லெலன்பது—மனைவி, இல்லையெனல். இராசி, சா, இடம், வீடு.
மல்—வளம், வலிமை, திருமால்கூத்து. ௩.
சில்லை—பிரண்டை, சிள்வண்டு, தூர்த்தை. ௩.
ஒல்லை—காலவிரைவு, பழமை, வேகம், சிறுபொழுது. ௪.
வில்—மூலநட்சத்திரம், வில், ஒளி. ௩.
வல்—வலிமை, சீக்கிரம், சூதாடுகருவி. ௩.
மலர்தல்—எதிர்தல், தோன்றல். ௨. புல்—புலி, கலவி, அற்பம், புல், பனை, அனுடநட்சத்திரம். ௬.
கொல்—அசைச்சொல், ஐயம், கொல்லெலனேவல், வருத்தம். ௪.
மால்—புதன், பெருமை, மேகம், திருமால், மயக்கம், காற்று. ௬.
ஆல்—ஆமென்பதற்குப்பெயர். ௧. அல்-அல்லவென்பதற்குப்பெயர்.
வால்—வெண்மை, மிகுதி, சுத்தம். ௩. வசந்தன்—தென்றல், மன்மதன். ௨. சால்பு—மாட்சிமை, சால்புடைமை. ௨.
வலம்புரி—சங்கு, நந்தியாவர்த்தம், ஓர்மரம். ௩.
புலம்பு—ஒலி, தனிமை, பயம். ௩. பொய்-அசத்தியம்,மரப்பொந்து.
சிலம்பு—ஒலி, சிலம்பு, மலை. ௩. செருந்தி—செருந்திமரம், வாட்கோரை. ௨.
விலங்கு—கால்விலங்கு, குறுக்கு, மிருகத்தின்பொது. ௩.
உலகம்—திக்கு,ஆகாயம், பூமி, உயர்குணம், சனம். உயர்ந்தோர். ௬.
அலவன்—நண்டு, பூனை, சந்திரன். கடகராசி. ௪.
இலயம்—கூத்து, கூத்தின் வேறுபாடு. ௨. வலவை—காளியேவற்பெண், வல்லவன். ௨. வருடை—எண்காற்புள், ஆடு. ௨.
கலாபம்—மணிவடம், பதினாறுகோவைமணி, மயிலிறகு. ௩.
சிலீமுகம்—முலைக்கண், வண்டு, அம்பு. ௩.
சலாகை—தெய்வவகன்மணி, சலாகை, சவளம். ௩.
விலோதம்—கூந்தல், பெருங்கொடி. ௨. விடம்—நஞ்சு,* தேள். ௨.
செல்—இடி, செல்லெலனேவல், மேகம், கறையான். ௪.
எல்—பிரகாசம், பகல், இகழ்ச்சி. இரா. சூரியன். ௫.
சொல்—வார்த்தை, புகழ்,நெல். ௩. தொடுத்தல்—வளைத்தல், கட்டல்.
கல்-ஒலிக்குறிப்பு,மலை,கல். ௩. கரண்டம்-† நீர்க்காக்கை. செப்பு.௨.
கலி—வஞ்சனை, ஒலி, கடல், கடையுகம், வலிமை. ௫.
சிலை—ஒலி,மலை,கல்,வில். ௪. செடி—பிரகாசம், நெருக்கம், தீமை.
தலம்—இலை, பூமி. ௨. தலை—இடம், சிரசு, ஆகாயம், முதல். ௪.
திலம்—மஞ்சாடிமரம், எள்ளு. ௨. திலகம்—மஞ்சாடிமரம், பொட்டு.

* நளிவிடம்-தேள். † காரண்டம் - நீர்க்காக்கை.

வல்லைகான்விரைவுமைந்தாம்வடமணிவடமாரும்பு
பல்லமோர்கணக்குப்பாணம்பல்லணங்கரடிநாற்பேர்
மல்லலேவலிவளப்பேர்வாயிலைம்புலன்கடைப்பேர்
முல்லைமல்லிகையேவென்றிமுல்லைநன்னிலங்கற்பாமே. (கஎ)

கோலென்பதீட்டிவாட்கோறுகிலிகைதுலாஞ்சம்மட்டி
சீலமன்னவன்றன்செங்கோறிரட்சியாழ்நரம்போடம்பு
நீலவஞ்சனக்கோலோடுநீளிலந்தையும்பன்னோர்பேர்
காலியருணன்பாம்புகாற்றொடுமுப்பேராமே. (கஅ)

கூலமேபண்ணிகாரம்புனற்கரைகோவிலங்கின்
வாலோடாவணமேபாகல்வரம்பொடுகுரங்கெண்பேரே
காலிடமரக்கால்பிள்ளைகுறுந்தறிவனங்காம்பூற்றம்
காலனங்குரங்கால்வாய்க்கால்காற்றுத்தேருருள்பன்மூன்றே. (கக)

கோலமேயழகுபன்றிபாக்குநீர்க்கொழுந்துபீர்க்காம்
மாலியேயிரவிகள்ளாமாந்தலேமரித்தலுண்டல்
வேலயில்படைக்கலப்பேர்வேதண்டங்கைலைவெற்பாம்
சாலிநெற்பொதுவுங்கள்ளுமருந்ததிதானுமாமே. (உ0)

உலவைகான்மரத்தின்கொம்போடுறுதழைவிலங்கின்கோடாம்
மலைதலேபொரல்சூடற்பேர்மந்திரிகுபேரன்வெள்ளி
யலர்பழிவிரிபூநீராமவிர்தலேயொளிபீறற்பேர்
எலிபூரநாளெலிப்பேரிரணம்பொன்கடன்மாணிக்கம். (உக)

ஆலயநகரங்கோயிலானையின்கூடமுப்பேர்
பாலமேமழுநெற்றிப்பேர்பவித்திரஞ்சுசிதருப்பை
நூலோர்மந்திரிகள்பார்ப்பார்நுவல்கவிப்புலவர்க்கும்பேர்
வேலாவலயந்தான்பூமிவிரிகடலிருபேராமே. (உஉ)

சூலியேகருப்பப்பெண்ணுந்துர்க்கையுஞ்சிவனுமுப்பேர்
வாலியேயலாயுதன்கிட்கிந்தையின்மன்னன்பேராம்
பால்புடையியல்புதிக்குப்பகுத்தல்பாலென்னுமைம்பேர்
ஏலமேமயிர்ச்சாந்தோடேயேலத்தின்பேருமாமே. (உங)

லகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் — உஉகூ.

வல்லையென்பது-பெருங்காடு, காலவிரைவு, வலிமை. ௩. வடம்-மணி வடம், ஆலமரம், கயிறு. ௩.
பல்லம்—ஓரெண், அம்பு, குதிரைக்கலணை, கரடி. ௪.
மல்லல்—வலிமை, வளம். ௨. வாயில்—ஐம்புலன், வாயில். ௨.
முல்லை—வனமல்லிகை, வெற்றி, முல்லைநிலம், கற்பு. ௪.
கோல்—ஈட்டி, விட்டேறு, எழுதுகோல், துலாம், குதிரைச்சம்மட்டி, செங்கோல், திரட்சி, யாழினரம்பு, பாணம், அஞ்சனக்கோல், இலந்தை. ௧௧.
காலிலி—சூரியன்றேர்ப்பாகன், பாம்பு, காற்று. ௩.
கூலம்—பலபண்டம், நீர்க்கரை, பசு, விலங்கின்வால், கடைவீதி, பாகல், வரம்பு, குரங்கு. ௮.
கால்—இடம், மரக்கால், புத்திரன், குறுந்தறி, காடு, மலர்க்காம்பு, ஊன்றுகோல், காலன், மூலை, பாதம், வாய்க்கால், காற்று, தேருருள். ௧௩.
கோலம்—அழகு, பன்றி, பாக்கு, நீரோட்டம், பீர்க்கு. ௫.
மாலி—சூரியன், கள். ௨. மாந்தல்—சாதல், உண்டல். ௨.
வேல்—வேலாயுதம், ஆயுதப்பொது. ௨. வேதண்டம்—வெள்ளிமலை, மலை. ௨.
சாலி—நெற்பொது, கள், அருந்ததி. ௩.
உலவை—காற்று, மரக்கொம்பு, தழை, விலங்கின்கொம்பு. ௪.
மலைதல்—பொருதல், அணிதல். ௨. மந்திரி-குபேரன், சுக்கிரன். ௨.
அலர்-பழிமொழி, மலர்ந்தபூ * நீர் ௩. அவிர்தல்-ஒளிசெய்தல், பீறல்.
எலி—பூரநட்சத்திரம், எலி. ௨. இரணம்-பொன், கடன், மாணிக்கம்.
ஆலயம்—நகரம், தேவர்கோயில், யானைக்கூடம். ௩.
பாலம்—மழுப்படை, நெற்றி. ௨.
பவித்திரம்—தூய்மை, தருப்பை. ௨.
நூலோர்—மந்திரிகள், பிராமணர், புலவர். ௩. வேலாவலயம்-பூமி, கடல். ௨.
சூலி—கருப்பவதி, துர்க்கை, சிவன். ௩.
வாலி—பலதேவன், கிட்கிந்தைமன்னன். ௨.
பால்—பக்கம், குணம், திசை, பங்கு, பால். ௫.
ஏலம்—மயிர்ச்சாந்து, ஏலம். ௨.

---

* மழையலர் - நீர்.

# வகரவெதுகை.

நவமென்பபுதுமைகேண்மையொன்பதுநற்கார்காலம்
கவனமேகலக்கம்வெம்மைகுதிரையின்கதிபோர்காடாம்
உவணமேகலுழனுகுழுயர்ச்சிக்குங்கழுகுக்கும்பேர்
பவனமேயிராசிபூமிபடர்காற்றுமனையேகோயில். (க)

புவனநீர்புவியுமாகும்புரத்தலேகாத்தல்வண்மை
நுவணைநூனுண்மைபிண்டிநூலேசாத்திரமுந்தந்தும்
தவவென்பமிகுதிகுன்றறந்தேநூல்சாத்திரப்பேர்
சிவநன்மைகுறுணிமுத்திசிவனேயுயிர்வியாழன். (உ)

இவறலேமறவியாசையென்பபேரிச்சைக்கும்பேர்
இவர்தலேயெழுச்சியாசையேறுதல்சேறன்மேவல்
சுவவென்பபுள்ளின்மூக்குஞ்சுவர்க்கமுஞ்சுண்டனும்பேர்
குவவென்பதிரட்சிமற்றுங்குவிதலேபெருமைக்கும்பேர். (ங)

தவிசென்பதடுக்குமெத்தையிலகடமுப்பேர்தானே
சவிமணிக்கோவைசெவ்வைசாற்றியவனப்புக்காந்தி
நவிரமேமஞ்ஞைபுன்மைநன்மலையுடனேயுச்சி
நவிலல்சொல்லுதல்பண்ணற்பேர்நவியமேமழுக்கோடாலி. (ச)

கவுசிகம்விளக்குத்தண்டோர்பண்பட்டுக்கடியகோட்டான்
சவுரியேதிருமால்கள்வன்சனியமனினையநாற்பேர்
மவுலியேமுடிகோடீரம்வட்கலென்பதுநாண்கேடாம்
கவலைசெந்தினையோர்வல்லிகவர்வழிதுன்பநாற்பேர். (ரு)

சேவகம்வீரம்யானைதுயிலிடந்துயிலுஞ்செப்பும்
சீவனியோர்மருந்துசெவ்வழித்திறத்தோரோசை
ஆவணம்புனர்தம்வீதியங்காடியுரிமைநாற்பேர்
நீவியேதுடைத்தலாடைநெருங்குகொய்சகமுப்பேரே. (சு)

உவளகமதிலோர்பக்கமூருணிபள்ளமுள்ளில்
கவடென்பகப்பியானைக்கழுத்திடுபுரசைக்கும்பேர்
சிவையுமைமரவேர்கொல்லனுலைமுகந்திரியுமோரி
கவையேயாயிலியங்காடுகவர்வழியெள்ளிளங்காய். (எ)

சிவப்பென்பசினமுஞ்செம்மையுடன்சினக்குறிப்புமுப்பேர்
உவப்பென்பமகிழ்ச்சிமேடாமொழுக்கமேவழியாசாரம்
தெவிட்டலேயடைத்தல்கான்றனிறைதலுமொலியுஞ்செப்பும்
துவக்கேதோல்பிணக்கிரண்டாஞ்சூழலேயிடம்விசாரம். (அ)

# வகரவெதுகை.

நவமென்பது—புதுமை, நட்பு, ஒன்பது, கார்காலம். ச.
கவனம்—கலக்கம், வெப்பம், குதிரையின்வேகம், போர், காடு. ரு.
உவணம்—கருடன், உயர்ச்சி, கழுகு. ந.
பவனம்—இராசி, பூமி, காற்று, வீடு, அரசரில். ரு.

புவனம்—நீர், பூமி. உ. புரத்தல்—காத்தல், கொடுத்தல். உ.
நுவணை-கல்விநூல், நுட்பம், மா. ந. நூல்—சாத்திரம், பஞ்சிநூல்.
தவ—மிகுதி, குறைதல். உ. தந்து—பஞ்சிநூல், சாத்திரம். உ.
சிவம்-நன்மை, குறுணி, மோட்சம். ந. சீவன்—உயிர், வியாழன். உ.

இவறல்—மறதி, ஆசை, வேட்கைப்பெருக்கம். ந.
இவர்தல்—எழுச்சி, ஆசை, ஏறுதல், செல்லுதல், மேவுதல். ரு.
சுவவு—பறவைமூக்கு, சுவர்க்கம், மூஞ்சூறு. ந.
குவவு—திரட்சி, குவிதல், பெருமை. ந.

தவிசு—தடுக்கு, மெத்தை, யானைமேற்றவிசு. ந.
சவி—மணிக்கோவை, செவ்வை, அழகு, ஒளி. ச.
நவிரம்—மயில், புன்மை, மலை, உச்சி. ச.
நவிலல்—சொல்லல், செய்தல். உ. நவியம்—மழுப்படை, கோடாலி.

கவுசிகம்—விளக்குத்தண்டு, ஓர்பண், பட்டுச்சீலை, கோட்டான். ச.
சவுரி—திருமால், கள்வன், சனி, யமன். ச.
மவுலி—முடி, சடை. உ. வட்கல்—நாணம், கெடுதல். உ.
கவலை—கம்பு, ஓர்கொடி, கவர்வழி, துன்பம். ச.

சேவகம்—வீரம், யானைதுயிலிடம், நித்திரை. ந.
சீவனி—ஓர்மருந்து, செவ்வழித்திறத்திறனைசை. உ.
ஆவணம்—புனர்பூசநட்சத்திரம், தெரு, கடைவீதி, உரிமை. ச.
நீவி—துடைத்தல், வஸ்திரம், கொய்சகம். ந.

உவளகம்—மதில், ஓர்பக்கம், குளம், பள்ளம், அந்தப்புரம். ரு.
கவடு—மரக்கொம்பு, யானைக்கழுத்திடுகயிறு. உ.
சிவை—பார்ப்பதி, மரவேர், கொல்லனுலைமூக்கு, நரி. ச.
கவை—* ஆயிலியநட்சத்திரம், காடு, கவர்வழி, எள்ளிளங்காய். ச.

சிவப்பு—கோபம், சிவப்பு, கோபக்குறிப்பு. ந.
† உவப்பு—களிப்பு, மேடு. உ. ஒழுக்கம்—வழி, ஒழுக்கம். உ.
தெவிட்டல்—அடைத்தல், உமிழ்தல், நிறைதல், ஒலித்தல். ச.
துவக்கு—தோல், பிணக்கு. உ. சூழல்—இடம், ஆராய்தல். உ.

---

* கௌவை - ஆயிலியநட்சத்திரம். † உகப்பு - உயர்ச்சி.

சேவலேகாவலோடுசேறுபுள்ளாண்முப்பேரே
கேவலந்தனிமைமுத்திரமென்பதுபால்கிள்ளை
பூவைசாரிகைகாயாவாம்புலிசிங்கமுழுவைசார்ந்தே
வாவலஞ்சலிகைப்புள்ளுந்தாவலும்வருக்கலாமே. (கூ)

சுவல்பிடர்தோண்மேன்மேடுதுரகதக்குசைநாற்பேரே
கவிமந்திபுலவன்சுங்கன்கழியென்பமிகுதிகாயல்
நவிருளைமருதயாழ்வாணுஞ்சிலெந்திரங்கலப்பை
கவிகையேகுடைகொடைப்பேர்கடிப்பங்காதணிபூண்செப்பாம். (கo)

மாவண்டுபெருமைபிண்டிவாசிகூப்பிடல்வெறுத்தல்
காவுறுவிலங்குசெல்வங்கருநிறங்கமலைபத்தாம்
கோவிழிபசுநீர்திக்குக்குலிசம்விண்கிரணம்பூமி
ஏவுரைசுவர்க்கம்வேந்தனிரங்கல்வெற்பீரேழாமே. (கக)

ஆவியேவாவிநாற்றமாருயிர்புகைமூச்சைம்பேர்
கூவிரந்தேர்தேர்மொட்டாங்குவடுநீண்மலைவெற்புச்சி
காவியேகுவளைகாவிக்கல்லொடுகள்ளுமுப்பேர்
நாவிதன்மஞ்சிகன்கார்த்திகைபூரநாளுமாமே. (கஉ)

ஆவென்பதிரக்கம்பெற்றமாச்சாவேர்டிசைவியப்பாம்
காவென்பதுலாம்பூஞ்சோலைகாத்தலோட்சுமைநாற்பேரே
பாவென்பபனுவனூற்பாபரவுதல்பரப்புமாகும்
தாவென்பபகைவருத்தந்தாண்டுதல்வலிகேடைம்பேர். (கந)

கவ்வையேபழிச்சொறுன்பங்கள்ளொலியெள்ளிளங்காய்
பவ்வமேகுமிழிவாரிபருமரக்கணுவுவாவாம்
தவ்வைமுன்பிறந்தாளோடுதாயுமூதேவியும்பேர்
நவ்வியேதோணிமானுநன்றென்பபெருமைநன்மை. (கச)

அவலேசிற்றுண்டிபள்ளநீர்நிலையாகுமுப்பேர்
செவிலியேவளர்த்தகைத்தாய்முன்பிறந்தவளுஞ்செப்பும்
கவுடமோர்கொடியோர்தேசமிருபெயர்கழறலாமே
சுவடுவெச்சிராங்கியோரெண்சுபமென்பதழகுவெண்மை. (கரு)

பவமென்பசனனம்பாவம்பாவந்தான்வினைதியானம்
சவுரியங்களவுவீரந்தண்மைதான்குளிர்ச்சிதாழ்வு
யவமொருதானியப்பேரென்பநெல்விற்குமப்பேர்
யவனர்சோனகர்கண்ணுளர்சித்திரகாரரென்ப. (கசு)

சேவலென்பது—காவல், சேறு, மயிலுமெழாலுமொழிந்த பறவை யாண். ௩. கேவலம்—தனிமை, மோட்சம். ௨. கீரம்-பால், கிளி.
பூவை—நாகணவாய்ப்புள், காயா. ௨.
புலி—சிங்கம், புலி, நால்வகைச்சாந்திலொன்று. ௩.
வாவல்—வெளவால், கடத்தல். ௨.

சுவல்—பிடர், தோண்மேல், மேடு, குதிரைமயிர். ௪.
கவி—குரங்கு, புலவன், சுக்கிரன். ௩. கழி—மிகுதி, காயல். ௨.
நவிர்—ஆண்மயிர், மருதயாழ்த்திறம், வாள். ௩.
நாஞ்சில்—மதிலுறுப்பு, கலப்பை. ௨. கவிகை—குடை, கொடை. ௨.
கடிப்பம்—காதணி, ஆபரணச்செப்பு. ௨.

மா—வண்டு, பெருமை, மா, குதிரை, அழைத்தல், வெறுப்பு, விலங்கின்பொது, செல்வம், கருநிறம், திருமகள். ௧௦.
கோ—கண், பசு, நீர், திசை, வச்சிராயுதம், ஆகாயம், கிரணம், பூமி, அம்பு, சொல், தேவலோகம், அரசன், இரங்கல், மலை. ௧௪.

ஆவி—குளம், வாசனை, உயிர், புகை, உயிர்ப்பு. ௫.
கூவிரம்—தேர், தேர்க்கொடிஞ்சி. ௨. குவடு-மலை, மலையினுச்சி. ௨.
காவி—கருங்குவளை, காவிக்கல், கள். ௩.
நாவிதன்-மயிர்களைவோன், கார்த்திகைநட்சத்திரம், பூரநட்சத்திரம்.

ஆ—இரக்கம், பசு, ஆச்சாமரம், இசை, அதிசயம். ௫.
கா—துலை, சோலை, காத்தல், தோட்சுமை. ௪.
பா—பஞ்சிநூல், வெண்பாமுதலியபா, பரவுதல், பரப்பு. ௪.
தா—பகை, துன்பம், தாண்டுதல், வலிமை, கேடு. ௫.

கவ்வை—பழிச்சொல், வருத்தம், கள், ஒலி, எள்ளிளங்காய். ௫.
பவ்வம்—நீர்க்குமிழி, கடல், மரக்கணு, பௌர்ணிமை. ௪.
தவ்வை—தமக்கை, தாய், மூதேவி. ௩.
நவ்வி—தோணி, மான். ௨. நன்று—பெருமை, நன்மை. ௨.

அவல்—சிற்றுண்டி, பள்ளம், குளம். ௩.
செவிலி—வளர்த்ததாய், முன்பிறந்தாள். ௨. கவுடம்—ஓர்கொடி, ஓர்தேசம். ௨.
சுவடு—வச்சிராங்கி, ஓர்நெல்லிலக்கம். ௨. சுபம்—அழகு, வெண்மை.

பவம்—பிறப்பு, பாவம். ௨. பாவம்-தீவினை, தியானம். ௨.
சவுரியம்—களவு, வீரம். ௨. தண்மை—குளிர்ச்சி, தாழ்வு. ௨.
யவம்—ஓர்வகைத்தானியம், நெல். ௨.
யவனர்—சோனகர், கம்மாளர், சித்திரகாரர். ௩.

ஆவரணந்தான்சட்டைதடைமறைப்பரணமாடை
ஏவலேவியங்கோளென்பவெய்தியவறுமைக்கும்பேர்
ஓவியர்சிற்பநூலோரொடுசித்திரகாரரும்பேர்
ஓவிரக்கச்சொனீக்கமோடுநீர்தகைகபாடம். (௧௭)

அவ்வையேதாயின்பேருமௌவையோடிருபேராமே
செவ்வியேர்பொழுதினோடுசெப்பியபருவமாகும்
தெவ்வமர்பகையிரண்டாந்தீவினைகொடுமைபாவம்
சைவமோர்புராணமீசன்சமயத்தின்விகற்புமாமே. (௧௮)

வகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் — உ௪௭.

# ழகரவெதுகை.

விழவென்பமிதுனராசிவிளங்குமுற்சவமுமாகும்
கழையென்பபுனர்தமூங்கில்கரும்பெனவிரும்புமுப்பேர்
கழல்கழங்கொடுசெருப்புக்காலணிகாலிந்நாற்பேர்
இழமைமூப்புரிமைபண்பாங்கிழிநிதிப்பொதிகீறுமே. (௧)

சூழியேசுனையும்வெய்யதும்பியின்முகபடாமும்
பாழியேவலிவிலங்கின்படுக்கையூர்பற்றிலாரூர்
நாழியேயளக்குநாழிநாழிகைபூரட்டாதி
ஆழிமோதிரமேநேமியலைகடல்கரையேவட்டம். (௨)

இழுமெனலோசையென்பவினிமையுமியம்புமப்பேர்
விழுமமேசிறப்புச்சீர்மையிடும்பையும்விதித்தபேரே
தொழுவென்பதுழலைதானேயிரேவதிநாளுஞ்சொல்லும்
செழுமையேவளங்கொழுப்பாந்தேனென்பநறவும்வண்டும். (௩)

கழுதுபேய்பரண்வண்டென்பகயவுகீழ்பெருமைமென்மை
அழுவமேபரப்புநாடுமெழுங்கலேயிரங்கல்கேடாம்
கழுமல்பற்றொடுமயக்கங்காதலேயாசைகோறல்
கழிதலென்பதுவேசாதல்கடந்திடன்மிகுதிமுப்பேர். (௪)

மாழைபொன்னுலோகக்கட்டிமடமையோர்புளிமாவோலை
கூழையேசிறகுமாதர்கூந்தல்வெம்படையுறுப்பாம்
தாழைகேதகைதெங்காகுஞ்சாகினிசேம்புகீரை
ஊழ்முறைவெயில்பகைப்பேருசியேசூசியாணி. (௫)

ஆவரணமென்பது—சட்டை, தடுத்தல், மறைப்பு, கோட்டை, வஸ்திரம். ரு.
ஏவல்—வியங்கோள், தரித்திரம். உ.
ஓவியர்—சிற்பாசாரியர், சித்திரகாரர். உ.
ஓ—இரக்கச்சொல், நீங்குதல், மடையடைக்குங்கதவு. ங.

அவ்வை—தாய், ஔவையார். உ.
செவ்வி—அழகு, காலம், பருவம். ங.
தெவ்—போர், பகை. உ. தீவினை—கொடுமை, பாவம். உ.
சைவம்—ஓர்புராணம், உட்சமயங்களாறனுளொன்று. உ.

---

# ழகரவெதுகை.

---

விழவென்பது—மிதுனராசி, திருவிழா. உ.
கழை—புனர்பூசநட்சத்திரம், மூங்கில், கரும்பு ங.
கழல்—கழற்காய், செருப்பு, காலணி, கால். ச.
கிழமை—முதுமை, உரிமை, குணம். ங. கிழி—கிதிப்பொதி, கீறு.

சூழி—சுனை, யானைமுகபடாம். உ.
பாழி—வலிமை, விலங்கின்படுக்கை, ஊர், பகைவரூர். ச.
நாழி—அளக்குநாழி, நாழிகை, பூரட்டாதிநட்சத்திரம். ங.
ஆழி—மோதிரம், சக்கராயுதம், கடல், கடற்கரை, வட்டம். ரு.

இழுமெனல்—அனுகரணவோசை, இனிமை. உ.
விழுமம்—சிறப்பு, சீர்மை, துன்பம். ங.
தொழு—தொழுமரம், இரேவதிநட்சத்திரம். உ.
செழுமை—வளமை, கொழுப்பு. உ. தேன்—கள், வண்டு. உ.

கழுது-பேய், பரண், வண்டு. ங. கயவு-கீழ்மை, பெருமை, மென்மை.
அழுவம்—பரப்பு, நாடு. உ. அழுங்கல்—இரங்கல், கேடு. உ.
கழுமல்—பற்றுதல், மயக்கம். உ. காதல்—ஆசை, கொல்லுதல். உ.
கழிதல்—சாதல், கடத்தல், மிகுதி. ங.

மாழை—பொன், உலோகக்கட்டி, அறிவின்மை, அழகு, புளிமா, ஓலை. சு.
குழை—சிறகு, பெண்மயிர், படையுறுப்பு. ங.
தாழை—தாழை, தென்னமரம். உ. சாகினி—சேம்பு, சிறுகீரை. உ.
ஊழ்—முறை, வெய்யில், பகை. ங. ஊசி—சூசி, எழுத்தாணி. உ.

உழையென்பதிடமான்யாழிஞோர்நரம்பிற்கும்பேராம்
குழையென்பதளிர்துவாரங்குண்டலஞ்சேறுநாற்பேர்
விழைவென்பபுணர்ச்சிகாதல்வெறுக்கையென்பதுபொன்செல்வம்
வழிமரபிடம்பின்மார்க்கம்வழங்கலேகொடையுலாவல். (சு)

ஈழம்பொன்கள்ளோர்தேசமெல்லையேயளவைவெய்யோன்
மேழகங்கவசமாடாம்வேளாண்மைகொடையேமெய்ம்மை
காழியர்வண்ணாருப்புவாணிகரிருபேர்காட்டும்
வேழமேகரும்பியானைகொறுக்கைச்சிவேணுநாற்பேர். (எ)

கூழென்பதுணவும்பொன்னும்பயிரென்றுங்கூறுமுப்பேர்
காழென்பமணியின்கோவைகற்பரல்சேகுவித்தாம்
யாழென்பமிதுனம்வீணையிரலைநாளாதிரைப்பேர்
கீழென்பதிடங்கீழ்சாதிகீழ்த்திசைகயமைநாற்பேர். (அ)

கோழியேகுருகோரூராங்குய்யமேமறைவுயோனி
மூழியேவாவிசோரேடகப்பையுமொழியுமுப்பேர்
மூழையேயகைப்பைசோருமுறஞ்சுளகொடுவிசாகம்
நூழிலேகோறல்யானைநுண்கொடிகொடிக்கொத்தான்பேர். (கூ)

தொழிதிபுள்ளொலிகூட்டப்பேர்தொறுநிரையடிமைகூட்டம்
கெழுவுதன்மயக்கம்பற்றுங்கிலாலங்கறைநீர்காடி
குழறலேயுடைப்பொருட்பேர்மயிரிசைக்குழன்மூப்பேரே
அழிவென்பவீதல்கேடாமவிநெய்சோறமரருண்டி. (கௗ)

ழகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் — உருஎ.

---

# ளகரவெதுகை.

குளநுதல்கரும்பின்கட்டிகுட்டமுமிட்டநாமம்
களமமர்க்களமேகண்டங்களாவிடங்கறுப்பேயில்லாள்
வளமைமாட்சிமைகொழுப்பாம்வாருணங்கடலுமேற்கும்
விளவென்பகமர்விளாவாம்விம்மலேங்குதலொலித்தல். (க)

முளரியேவிறகுசெந்தீமுண்டகஞ்சிறுமைகாடாம்
விளரென்பதிளமைதானேவெளுப்பொடுகொழுப்புமாகும்
களபமேயானைக்கன்றுகமழ்சாந்துகலவைமுப்பேர்
உளர்தலேசிதறலாகுந்தடவலுமுரைக்கற்பாற்றே. (உ)

உழையென்பது—இடம், மான், யாழிஞேர்நரம்பு. ௩.
குழை-தளிர், துவாரம், குண்டலம், சேறு. ௪. விழைவு—புணர்ச்சி, ஆசை. ௨.
வெறுக்கை—பொன், செல்வம். ௨. வழி—மரபு, இடம்,பின், வழி.௪.
வழங்கல்—கொடுத்தல், உலாவல். ௨.

ஈழம்—பொன், கள், சிங்களதேசம். ௩. எல்லை-அளவு, சூரியன். ௨.
மேழகம்—கவசம், ஆடு. ௨. வேளாண்மை—கொடை, உண்மை. ௨.
காழியர்—வண்ணார், உப்புவாணிகர். ௨.
வேழம்—கரும்பு, யானை, கொறுக்கை, மூங்கில். ௪.

கூழ்—உணவு, பொன், பயிர். ௩.
காழ்—மணிவடம், பருக்கைக்கல், மரவயிரம், விதை. ௪.
யாழ்—மிதுனராசி, வீணை, அச்சுவினிநட்சத்திரம், திருவாதிரைநட்சத்திரம். ௪. கீழ்-இடம், கீழ்சாதி, கிழக்கு, கீழ்மை. ௪.
கோழி-கோழி, உறையூர். ௨. குய்யம்-மறைவு, பெண்குறி. ௨.
மூழி-குளம், சோறு, அகப்பை. ௩. மூழை—அகப்பை, சோறு. ௨.
மூரம்—சுளகு, விசாகநட்சத்திரம். ௨.
தூழில்—கொல்லல், யானை, படர்கொடி, கொடிக்கொத்தான். ௪.

தொழுதி—பறவையினெலி, கூட்டம், [பறவைக்கூட்டம்.] ௨.
தொறு—பசுக்கூட்டம், அடிமை, கூட்டம். ௩. கெழுவுதல்—மயக்கம், பற்று. ௨. கிலாலம்—இரத்தம், நீர், காடி. ௩.
குழல்—துளையுடைப்பொருள், மயிர், இசைக்குழல். ௩.
அழிவு—சாதல், கேடு. ௨. அவி—நெய், சோறு, தேவருணவு. ௩.

# ளகரவெதுகை.

குளமென்பது—நெற்றி, சர்க்கரை, தடாகம். ௩.
களம்—போர்க்களம், கழுத்து, களாச்செடி, நஞ்சு, கறுப்பு, மனைவி.
வளமை—மாட்சிமை, கொழுப்பு. ௨. வாருணம்—கடல்,மேற்கு. ௨.
விளவு-விலப்பிளவு, விளாமரம். ௨. விம்மல்-அழுதல், ஒலித்தல். ௨.

முளரி—விறகு, நெருப்பு, தாமரை, நுண்மை, காடு. ௫.
விளர்—இளமை, வெண்மை, கொழுப்பு. ௩.
களபம்—யானைக்கன்று, சாந்து, கலவைச்சாந்து. ௩.
உளர்தல்—சிந்தல், தடவல். ௨.

குளிர்மழுநண்டிருத்தல்குளிர்கவண்முழாமீன்றூரை
நளிர்குளிர்பெருமைஞெண்டுநோட்டியசெறிவுநாற்பேர்
ஒளிவட்டந்தான்கண்ணாடிசக்கரமிருபேரோதும்
இளியிசையிசித்தலெல்லையிணங்குதலுரித்தற்கும்பேர். (௩)

பளிதமென்பதுகர்ப்பூரம்பல்லமென்கணக்குமாகும்
வெளிலணில்வேழத்தம்பம்வெண்டயிர்கடைதறிப்பேர்
களிறென்பவத்தநாளேகறையடிசுறவுபன்றி
ஒளியிருசுடரேதீயேயொளிப்பிடம்புகழுமாமே. (௪)

பாளிதஞ்சோறுகண்டசருக்கரைகுழம்புபட்டாம்
ஒளியேயானைக்கூடமொழுங்கென்றும்வழங்குநூலே
கோளிதொன்மரமேயத்திகொள்வோனுங்கொழிஞ்சியும்பேர்
மீளிதிண்ணியன்வலிப்பேர்மேன்மகன்பெருமைக்கும்பேர். (௫)

அளைதயிர்முழைபுற்றாகுமசனியேயுருமுவச்சிரம்
உளைபரிமீதுகட்டுமயிர்பிறமயிருமோதும்
கிளையென்பதோர்பண்மூங்கில்கேளொடுகிளைத்தலும்பேர்
இளைபுயலிளமைவேலிதலைக்காவலிவைநாற்பேரே. (௬)

உள்ளலேகிணைவுள்ளான்பேருழப்பென்பவலியுற்சாகம்
ஞெள்ளலேபள்ளமேன்மைநீண்டவீதியுமப்பேரே
எள்ளலேநகையிழிப்பாம்யாமந்தெற்கிரவுசாமம்
ஞொள்கல்சோம்பிளைத்தலச்சக்குறிப்பென்றுநுவலற்பாலாம். (௭)

வள்ளென்பகாதுகூர்மைவலிவளம்வாளேவாராம்
வெள்ளையேமுசலிசங்குவெளிறுவெள்ளாடுவெண்பா
கள்வனேமுசுஞெண்டியானைகருநிறத்தவனேசோரன்
பள்ளியூர்சிற்றூர்கோயில்பாயல்கண்படைநீத்தோரூர். (௮)

விளக்கொளிசோதிநாளாம்வேள்வியேமகநாளீதல்
அளக்கரேபுடவிசேறுப்பளங்கடல்கார்த்திகைப்பேர்
திளைத்தலேயனுபவித்தல்செறிதலேநிறைதன்முப்பேர்
இளைத்தலேயிளைப்பிரங்கலென்றாழேயிரவிவெய்யில். (௯)

பிள்ளையேவடுகன்காக்கைபெட்டமூன்விரும்பல்வேண்டல்
மள்ளரேமள்ளர்வீரர்மறவர்க்குங்குறவர்க்கும்பேர்
உள்ளமேமுயற்சிநெஞ்சாமுனற்றிழுக்கொடுதாளாண்மை
வள்ளியேவல்லிசெங்கைவளைபுனையிழைமுப்பேரே. (௧௦)

குளிரென்பது—மழுப்படை, நண்டு, தங்குதல், குளிர்ச்சி, கவண், முழவு, மீனெழுங்கு. எ. நளிர்—குளிர்ச்சி, பெருமை, நண்டு, நெருக்கம். ச. ஒளிவட்டம்—கண்ணாடி, சக்கராயுதம். உ.

இளி—எழிசையினொன்று, இசித்தல், இகழ்ச்சிக்குறிப்பு, இணங்குதல், உரித்தல். ரு.

பளிதம்—கருப்பூரம், பல்லமென்னுமோரெண். உ.

வெளில்—அணில், யானைத்தூண், தயிர்கடைதறி. ங.

களிறு—அத்தநட்சத்திரம், யானை சுறு பன்றி இவற்றினாண். உ.

ஒளி—சூரியன், சந்திரன், நெருப்பு, ஒளிப்பிடம், புகழ். ரு.

பாளிதம்—சோறு, கண்டசர்க்கரை, குழம்பு, பட்டுவர்க்கம். ச.

ஒளி—யானைக்கூடம், ஒழுங்கு. உ.

கோளி—ஆலமரம், அத்திமரம், கொள்வோன், பூவாதுகாய்க்குமரம்.

மீளி—திண்ணியன், வலிமை, மேன்மையுள்ளோன், பெருமை. ச.

அளை—தயிர், மலைக்குகை, புற்று. ங.

அசனி—இடி, வச்சிராயுதம். உ. உளை—குதிரையிற்கட்டுமயிர், பிறமயிர். உ. கிளை—ஓர்பண், மூங்கில், உறவு, கிளைத்தல். ரு.

இளை—மேகம், இளமை, வேலி, தலைக்காவல். ச.

உள்ளல்-நினைத்தல், உள்ளான்குருவி. உ. உழப்பு-வலிமை, உற்சாகம்.

ஞெள்ளல்-பள்ளம், மேன்மை, வீதி. ங. எள்ளல்-நகைப்பு, இகழ்ச்சி.

யாமம்—தென்றிசை, இரா, சாமம். ங.

ஞொள்கல்—சோம்பல், இளைத்தல், அச்சக்குறிப்பு. ங.

வள்—காது, கூர்மை, வலிமை, வளம், வாள், வார். சு.

வெள்ளை—பலபத்திரன், சங்கு, வெண்மை, வெள்ளாடு, வெண்பா.

கள்வன்—முசு, நண்டு, யானை, கரியன், திருடன். ரு.

பள்ளி-மருதநிலத்தூர், சிற்றூர், கோயில், மக்கட்படுக்கை, நித்திரை, முனிவரிருப்பிடம். சு.

விளக்கு—தீபம், சோதிநட்சத்திரம். உ. வேள்வி—யாகம், மகநட்சத்திரம், கொடை. ங.

அளக்கர்—பூமி, சேறு, உப்பளம், கடல், கார்த்திகைநட்சத்திரம்.

திளைத்தல்—அனுபவித்தல், நெருங்கல், நிறைதல். ங.

இளைத்தல்—மெலிவு, இறங்கல். உ. என்றூழ்—சூரியன், வெய்யில்.

பிள்ளை—வைரவக்கடவுள், காக்கை. உ. பெட்டல்—விரும்பல், வேட்கைப்பெருக்கம். உ.

மள்ளர்—உழவர், படைவீரர், திண்ணியர், குறிஞ்சிநிலமாக்கள். ச.

உள்ளம்—முயற்சி, மனம். உ. உஞற்று—இழுக்கு, முயற்சி. உ.

வள்ளி—படர்கொடி, கைவளை, ஆபரணம். ௩.

காளமேயூதுகொம்புகழுநஞ்சுகருமைநாற்பேர்
வேளறுமுகன்காமன்பேர்விபூதியூன்கொடுமைசெல்வம்
கோளிடையூறென்பான்கோள்கொலைகுணம்வலிபொய்கொள்கை
ஞாளியேசுணங்கன்கள்ளாநான்முகனருகன்வேதா. (௧௧)

களரென்பமிடறுகோட்டிகளர்நிலங்கருமைநாற்பேர்
தளமிலைபடையேசாந்துதாழிபூவிதழேமேடை
அளகமேமாதரோதியறன்மயிர்க்குழற்சிமுப்பேர்
தளைவிலங்கொடுதொடர்ச்சிதாட்சிலம்பாண்மயிர்ப்பேர். (௧௨)

புள்ளுவண்டவிட்டம்புட்பேர்புளகந்தர்ப்பணங்குமிழ்ப்பாம்
கள்ளென்பகளவுகள்ளாங்கனலிதீயிரவிபன்றி
அள்ளுரஞ்செறிவுகாதோடயிலும்பற்றிரும்புமாகும்
வெள்ளமென்மிகுதிமுந்நீர்வேணுவேமூங்கில்வில்வாள். (௧௩)

வாளென்பதொளிகட்கப்பேர்வல்லரிதளிர்பைங்காயாம்
கூளிபேய்தமரேருசுகுறள்படைத்தலைவன்கூட்டம்
தோளென்பபுயங்கையாகுஞ்சுந்தரியுமையேசுண்டன்
தேளென்பதனுடநாளேவிருச்சிகந்தெறுக்காலும்பேர். (௧௪)

அளியென்பநறவும்வண்டுமென்பொடுகொடையுநாற்பேர்
அளவையேயெல்லைநாளாமாசாரந்துகிறாமாரி
விளரியேயிளமையாழிலோர்நரம்பியாழ்நீள்வேட்கை
வளமென்பபதவியும்பல்பண்டமும்வனப்புமாகும். (௧௫)

வள்ளமேமரக்கால்வட்டில்கடிகைவட்டிற்குமப்பேர்
வள்ளுரம்பசுவிறைச்சிவரைந்தவூன்பொதுவுமாகும்
அள்ளலேநரகஞ்சேறுமம்புநீர்புயல்வேயேவாம்
வெள்ளிலேவிளாப்பாடைப்பேர்வேலன்வேள்வெறியாட்டாளன், ()

காளையேயெருதுபாலைக்கதிபனல்லிளமையோன்பேர்
கூளியர்நண்பர்பூதகணவீரர்கொலைத்திறத்தோர்
கோளகைவட்டமோடுமண்டலிப்பாம்புங்கூறும்
கேள்வியேசெவிகல்விப்பேர்கிடங்ககழ்வாவியாமே. (௧௭)

இளமையேதண்மைகாமமிளமையின்பருவமுப்பேர்
அளறென்பநரகஞ்சேறுமக்காரம்புடைவைவெல்லம்
கிளரென்பகிரணத்தோடுகிளர்கோட்டுமலர்ப்பூந்தாதாம்
களரிபோர்க்களங்காடென்பகருமஞ்செய்யிடமுமாமே. (௧௮)

ளகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - ௨௭௫.

காளமென்பது—ஊதுகொம்பு, சூலம், நஞ்சு, கறுப்பு. ச.

வேள்—குமாரக்கடவுள், மன்மதன். உ. விபூதி— * தசை, பொல்லாங்கு, செல்வம். ங.

கோள்—இடையூறு, நவக்கிரகம், கொலை, குணம், வலிமை, பொய், கொள்கை. எ. ஞாளி-நாய்,கள். உ. நான்முகன்-அருகன், பிரமன்.

களர்—கழுத்து, கூட்டம், களர்நிலம், கறுப்பு. ச.

தளம்—இலை, சேனை, சாந்து, சாடி, பூவிதழ், உபரிகை. சு.

அளகம்—பெண்மயிர், நீர், மயிர்க்குழற்சி. ங.

தளை—விலங்கு, தொடர்பு, சிலம்பு, ஆண்மயிர். ச.

புள்—வண்டு, அவிட்டநட்சத்திரம், பறவை. ங.

புளகம்—கண்ணாடி, மயிர்சிலிர்த்தல். உ.

கள்—களவு, கள். உ. கனலி—நெருப்பு, சூரியன், பன்றி. ங.

அள்—வலிமை, நெருக்கம், காது, கூர்மை, பற்றிரும்பு. ரு.

வெள்ளம்—ஓரெண், மிகுதி,கடல். ங. வேணு—மூங்கில், வில், வாள்.

வாள்—ஒளி, வாளாயுதம். உ. வல்லரி—தளிர், பசுங்காய். உ.

கூளி—பேய்,உறவு,எருது,குற்றம்,பூதம், படைத்தலைவன், கூட்டம்.

தோள்—புயம், கை. உ. சுந்தரி—துர்க்கை, † மூஞ்சூறு. உ.

தேள்—அனுடநட்சத்திரம், விருச்சிகராசி, தேள். ங.

அளி—கள், வண்டு, அன்பு, கொடை. ச.

அளவை—எல்லை, நாள். உ. ஆசாரம்—சீலை, தூய்மை, பெருமழை.

விளரி—இளமை, யாழிலோர்நரம்பு, நெய்தனிலத்தியாழ்,வேட்கைப் பெருக்கம். ச. வளம்—பதவி, பலபண்டம், அழகு. ங.

வள்ளம்—மரக்கால், வட்டில், நாழிகைவட்டில். ங.

வள்ளுரம்—பசுவினிறைச்சி, தசைப்பொது. உ. அள்ளல்—நரகம், சேறு. உ. அம்பு—நீர், மேகம், மூங்கில், பாணம். ச.

வெள்ளில்—விளாமரம், பாடை. உ. வேலன்—முருகக்கடவுள், வெறியாட்டாளன். உ.

காளை—எருது, பாலைநிலத்தலைவன், சிட்டிளமையோன். ங.

கூளியர்—சினேகர், பூதகணவீரர், கொலையாளிகள். ங.

கோளகை—வட்டம், மண்டலிப்பாம்பு. உ.

கேள்வி—காது, கல்வி. உ. கிடங்கு—அகழ், வாவி. உ.

இளமை—தாழ்மை, காமம், இளமைப்பருவம். ங.

அளறு—நரகம், சேறு. உ. அக்காரம்—புடைவை, வெல்லம். உ.

கிளர்—ஒளி, பூந்தாது. உ.

களரி—போர்க்களம், காடு, தொழில்செய்யிடம். ங.

---

* பூதி-தசை. † சுசுந்தரி-மூஞ்சூறு.

# றகரவெதுகை.

இறைவையேபுட்டிலேணியென்பகூர்மிகுதிகூர்மை
குறடென்பபலகைதிண்ணைகொண்மூவென்பதுவிண்மேகம்
புறவமோர்புள்ளுங்காடுமுல்லைநன்னிலனும்போற்றும்
புறணியேகுறிஞ்சிமுல்லைநிலத்தொடுபுறமுந்தோலும். (௧)

மறஞ்சினம்பிணக்குக்கூற்றுமலைந்தசேவகமுமாகும்
குறிஞ்சியோரிசையோர்பண்ணேகுறிஞ்சிசெம்முள்ளிக்கும்பேர்
பிறங்கலேமிகுதிவெற்புநிறைவொலிபெருமையம்பேர்
குறும்பொறைகுன்றுகாடுகுறிஞ்சிநன்னிலத்தூர்முப்பேர். (௨)

தாறுவிற்குதையேயெல்லைதாழ்மரக்குலைமுட்கோலாம்
சேறென்பகும்பிசாரந்தித்திப்புவிழவுகள்ளே
ஊறென்பதீமைதீண்டலுயிர்க்கொலையிடையூறென்ப
ஏறிடிமுதனாளாகுமிடபமோடெருதுமப்பேர். (௩)

சிறையேவேறிடமாம்புள்ளின்சிறகொடுகாவலும்பேர்
கறையிறுத்திடலிரத்தங்கறுப்புரல்விடம்பேரைந்தே
முறையென்பகோசமேயூழ்முறைமையிம்முப்பேரென்ப
பிறழ்தலேநடுக்கம்வேறுபெயர்தலோடொளிவிடற்பேர். (௪)

ஏற்றலேகோடலென்பவெதிர்ந்துபோர்செய்தலும்பேர்
ஆற்றலேபொறைமுயற்சியதிகமேவலியேஞானம்
தோற்றலேவலிபிறப்புத்தோன்றுதல்புகழேநாற்பேர்
போற்றலேபுகழ்தலோம்பல்புறமென்பமுதுகுவீரம். (௫)

அற்றமேமறைவுஞ்சோர்வுமவகாசந்தானுமாகும்
குற்றல்குற்றுதல்பறித்தல்குரையென்பதிடைச்சொலோசை
எற்றென்பதிரக்கமொத்தலெறிதலெத்தன்மைத்தென்றல்
கொற்றியேதுர்க்கைநாமங்கோவிளங்கன்றுங்கூறும். (௬)

உறழ்வென்ப * புணர்வுகாலஞ்செறிவிடையீடொப்பைம்பேர்
உறவியேயெறும்புநீரூற்றுலைக்களமுறவுயிர்ப்பேர்
உறுகணென்பதுவேதுன்பமுறுபயமிடிநோய்நாற்பேர்
உறுவனேமுனிபுத்தன்பேருலக்கையேயுரோங்கலோணம். (௭)

விறப்பென்பசெறிவுவெற்றிவெருவுதல்பொருதனாற்பேர்
பொறுத்தலேபொறைதாங்கற்பேர்புந்திதான்புதனேபுத்தி
இறுத்தலேயொடித்தறங்கலியம்புதன்முப்பேரென்ப
கறுப்பிருள்சினக்குறிப்பாங்கன்றுகைவளைகன்றுமே. (௮)

---

* உணர்வு என்றும் பாடம்.

# றகரவெதுகை.

இறைவையென்பது—கூடை, ஏணி. உ. கூர்—மிகுதி, கூர்மை. உ.

குறடு—பலகை, திண்ணை. உ. கொண்மூ—ஆகாயம், மேகம். உ.

புறவம்—ஓர்பறவை, காடு, முல்லைநிலம். ங.

புறணி—குறிஞ்சிநிலம், முல்லைநிலம், புறம், தோல். ச.

மறம்—கோபம், பிணக்கு, யமன், வீரம். ச.

குறிஞ்சி—ஓரிசை, ஓர்பண், குறிஞ்சிநிலம், செம்முள்ளி. ச.

பிறங்கல்—மிகுதி, மலை, நிறைவு, ஒலி, பெருமை. ரு.

குறும்பொறை—மலை, காடு, குறிஞ்சிநிலத்தூர். ங.

தாறு—விற்குதை, அளவு, மரக்குலை, முட்கோல். ச.

சேறு—சேறு, சாரம், இனிமை, திருவிழா, கள். ரு.

ஊறு—தீமை, தொடுதல், கொலை, இடையூறு. ச.

ஏறு—இடி, அச்சுவினிநட்சத்திரம், இடபராசி, எருது. ச.

சிறை—வேறிடம், பறவையினிறகு, காவல். ங.

கறை—குடியிறை, இரத்தம், கறுப்பு, உரல், நஞ்சு. ரு.

முறை—புத்தகம், ஊழ், முறைமை. ங.

பிறழ்தல்—நடுக்கம், வேறுதல், ஒளிசெய்தல். ங.

ஏற்றல்—கொள்ளல், எதிர்த்துப்போர்செய்தல். உ.

ஆற்றல்—பொறை, முயற்சி, மிகுதி, வலிமை, ஞானம். ரு.

தோற்றல்—வலிமை, பிறத்தல், தோன்றுதல், புகழ். ச.

போற்றல்—புகழ்தல், பாதுகாத்தல். உ. புறம்—முதுகு, வீரம். உ.

அற்றம்—மறைவு, சோர்வு, சமயம். ங.

குற்றல்—குற்றுதல், பறித்தல். உ. குரை—இடைச்சொல், ஒலி. உ.

எற்று-இரக்கக்குறிப்பு, அடித்தல், எறிதல், எத்தன்மைத்தென்றல்.

கொற்றி—துர்க்கை, பசுவினிளங்கன்று. உ.

உறழ்வு—புணர்ச்சி, காலம், நெருக்கம், இடையீடு, உவமை. ரு.

உறவி—எறும்பு, ஊற்று, உலைக்களம், உறவு, உயிர். ரு.

உறுகண்—துன்பம், அச்சம், தரித்திரம், வியாதி. ச.

உறுவன்-முனிவன், அருகன். உ. உலக்கை—உலக்கை, திருவோண நட்சத்திரம். உ.

விறப்பு—நெருக்கம், வெற்றி, அச்சம், போர். ச.

பொறித்தல்—பொறுமை, சுமத்தல். உ. புந்தி-புதன், புத்தி. உ.

இறுத்தல்—ஒடித்தல் தங்குதல், சொல்லுதல். ங.

கறுப்பு—கருமை, கோபக்குறிப்பு. உ. கன்று—கைவளை, கன்று. உ.

பொறிமரக்கலமேசெல்வம்பூமகளெந்திரங்கள்
அறிவிலாஞ்சனையெழுத்தோடைம்பொறிவரியொன்பான்பேர்
வெறிவெருவு,தல்கலக்கம்வெறியாட்டுவட்டநாற்றம்
குறியபேய்துருவைகள்ளுக்கூறுநோயொன்பதாமே. (கூ)

உறைபொருண்மருந்துவாழ்நாளுணவுவெண்கலமேகாரம்
எறிபடைக்கலத்தின்கூடேயெண்குறித்திறுதிபெய்தல்
நறியபாற்பிரையிடைச்சொனகரநீர்த்துளியீராறும்
அறைமுறைமோதல்பாறைதிரைசிற்றின்மொழியாறுமே. (க0)

இறைசிவன்கடன்வேந்தன்கையிறையிறுப்பிறைசிறந்தோன்
சிறுமைபுள்ளிறகுதங்கல்சென்னிகூனிறப்பீராறே
உறையுளென்பதுநாரோமுறுதியேநன்மைகல்வி
பொறைமலைதுறுகல்பாரம்பொறைசுமைகருப்பம்பூமி. (கக)

இறும்புதாமரையின்பூவேமலைகுறுங்காடுமேற்கும்
இறும்பூதுதகைமைவெற்போடதிசயங்குழைதூறென்றும்
கறங்கலேசுழலலோசைகதிரென்பதிரவிசோதி
வறம்புயர்மலைமுலைப்பேர்பாய்மாவேகுதிரைவேங்கை. (கஉ)

கூற்றென்பதியமன்சொல்லாங்கோமானேமூத்தோன்பன்றி
நாற்றநாறுதலூன்றற்பேர்நனவென்பதகலந்தேற்றம்
ஊற்றென்பதூன்றுகோலுமுறவியுமிருபேரோதும்
நோற்றலேபொறைதவப்பேர்நுணங்கென்பநுண்மைதேமல். (கங)

கற்பமேபிரமன்வாழ்நாள்கற்பகதருசுவர்க்கம்
பொற்பென்பதழகினோடுபொலிவுமப்பனையுமாகும்
பற்பமேபதுமந்தூளாம்பழங்கணேதுன்பமோசை
உற்கைதாரகைதீக்கொள்ளியுண்டிதான்புசித்தல்சோறே. (கச)

முற்றல்காழ்கோடன்மூப்புமுடிவுடன்வளைத்தனாற்பேர்
நெற்றியேநுதலின்பேருநெடும்படையுறுப்புமாகும்
கொற்றமேவன்மைவெற்றிகோவரசியன்முப்பேரே
எற்றுதல்புடைத்தலோடேயெறிதலுமிருபேராமே. (கரு)

அறுகென்பசிங்கமோர்புல்யாளியுமாகுமுப்பேர்
வறிதென்பதருகலேசற்றறியாமைபயனில்வார்த்தை
மறலியேமயக்கங்கூற்றுமறவிகண்மறதியீனம்
குறளென்பகுறளும்பேயுங்குறுமையுங்கூறுமுப்பேர். (கசு)

பொறியென்பது—தோணி, செல்வம், இலக்குமி, எந்திரம், அறிவு, அடையாளம், எழுத்து, ஐம்பொறி, தேமல். கூ.
வெறி—அச்சம், கலக்கம், வெறியாட்டு, வட்டம், வாசனை, பேய், ஆடு, கள், வியாதி. கூ.

உறை—பொருள், மருந்து, வாழ்நாள், உணவு, வெண்கலம், காரம், ஆயுதவுறை, ஒரிலக்கக்குறிப்பு, பாலிடுபிரை, இடைச்சொல், நகரம், நீர்த்துளி. கஉ.
அறை—மலைமுழை, மோதல், பாறை, திரை, சிற்றில், சொல். சு.

இறை—சிவன், கடன், அரசன், கையிறை, குடியிறை, உயர்ந்தோன், அற்பம், பறவையினிறகு, தங்கல், தலைமை, கூன், வீட்டிறப்பு. கஉ.
உறையுள்—நாடு, ஊர். உ. உறுதி—நன்மை, கல்வி. உ.
பொறை—மலை, துறுகல், பாரம், பொறுமை, சுமை, கருப்பம், பூமி. எ.

இறும்பு—தாமரைப்பூ, மலை, குறுங்காடு. ந.
இறும்பூது—பெருமை, மலை, அதிசயம், தளிர், சிறுதூறு. ரு.
கறங்கல்—சுழலல், ஒலி. உ. கதிர்—சூரியன், ஒளி. உ.
பறம்பு—மலை, முலை. உ. பாய்மா—குதிரை, புலி. உ.

கூற்று—யமன், சொல். உ. கோமான்—மூத்தோன், பன்றி. உ.
நாற்றம்—மணத்தல், தோன்றல். உ. நனவு—அகலம், தெளிவு. உ.
ஊற்று—ஊன்றுகோல், ஊற்று. உ. நோற்றல்—பொறுத்தல், தவஞ்செய்தல். உ. நுணங்கு—நுண்மை, தேமல். உ.

கற்பம்—பிரமன்வாழ்நாள், கற்பகவிருட்சம், தேவலோகம். ந.
பொற்பு—அழகு, பொலிவு, அலங்காரம். ந. பற்பம்—தாமரை, துகள்.
பழங்கண்—துன்பம், ஒலி. உ. உற்கை—விண்மீன், கடைக்கொள்ளி.
உண்டி—உண்ணல், சோறு. உ.

முற்றல்—வயிரங்கொள்ளல், மூப்பு, முற்றுப்பெறுதல், வளைத்தல்.
நெற்றி—நெற்றி, படையுறுப்பு. உ.
கொற்றம்—வலிமை, வெற்றி, அரசியல். ந.
எற்றுதல்—அடித்தல், எறிதல். உ.

அறுகு—சிங்கம், ஒருவகைப்புல், யாளி. ந.
வறிது—குறைதல், அற்பம், அறியாமை, பயனில்சொல். ச.
மறலி—மயக்கம், யமன். உ. மறவி—கள், மறதி, இழிவு. ந.
குறள்—வாமனம், பேய், குறுமை. ந.

விறலென்பவலிவென்றிப்பேர்விழைந்தோனேநண்பன்வேட்டோன்
நொறிலென்பவிரைவினேடுநடக்கமுமிருபேராமே
நெறிவழிநீதியென்பநிருமித்தல்படைப்பாராய்தல்
பறைபறைவசனத்தோடுபறக்கும்புள்ளிறகுமப்பேர். (கஎ)

றகரவெதுகை முற்றிற்று.

ஆ விருத்தம் - உகஉ.

---

# ணகரவெதுகை.

---

கனவுநன்மணிசங்கக்காம்வரைமலையிறைவேய்மட்டாம்
தனிதமிழொப்பின்மைப்பேர்சாந்தமேகமையுஞ்சாந்தும்
முனைபகைநுனிவெறுப்பாமுளைவேயங்குரமேபிள்ளை
யினமிருங்கிளையமைச்சாமெழில்வண்ணமிளமைக்கும்பேர். (க)

ஆனகம்படகத்தின்பேராகுந்துந்துபியுமப்பேர்
மானமேயளவிலச்சைவிமானமேபெருமைகுற்றம்
பானலேபழனநெய்தல்பாங்கரேயிடம்பக்கப்பேர்
மானலேமயக்கமொப்பாம்வருடமேமழையுமாண்டும். (உ)

தானமேமதநீராட்டுத்தருகொடைசுவர்க்கநாற்பேர்
பீனமேபருமைபாசிபேடென்பபேடியூரே
நானமேபூசும்பூச்சுநானமுங்குளிக்குநீரும்
வானமாகாயமென்பமழையுலர்மரமுமாமே. (ங)

வாணிமேற்கட்டிசேனைவண்டுகிற்கொடிமுப்பேரே
ஆணியுத்தராடமூலஞ்சேதமோர்மாதமென்ப
ஏனையேயொழிபுமற்றையெனுமிடைச்சொற்குமப்பேர்
ஆணியம்பொழுதுநாளாமனந்தையோர்சத்திபூமி. (ச)

முன்னலேநினைவுநெஞ்சாமுன்னஞ்சீக்கிரியோடெண்ணம்
கன்னல்சர்க்கரைகரும்புகரகநாழிகைவட்டிற்பேர்
மன்னனுத்தரட்டாதிப்பேர்மன்னவன்றானுமாகும்
இன்னரநீர்ப்புள்யாழாங்கிடக்கைபூதலம்பாயற்பேர். (ரு)

பின்னையேபின்றைதங்கைபெரியமாற்குரியதேவி
கொன்பயனிலாமைகாலங்கூறியபெருமையச்சம்
பொன்னென்பவனப்பிரும்புபூமகள்வியாழநாற்பேர்
மன்னிலைமிகுதிவேந்தேவாழிவாழ்கெனவிடைச்சொல். (சு)

விறலென்பது—வலிமை, வெற்றி. உ. விழைந்தோன், சிநேகன், கணவன். உ.
நொறில்—விரைவு, நுடக்கம். உ. நெறி—வழி, நீதி. உ.
நிருமித்தல்—சிருட்டித்தல், ஆராய்தல். உ.
பறை—வாச்சியம், சொல், பறவையினிறகு. ந.

# னகரவெதுகை.

மனவென்பது—மணிப்பொது, சங்கு, அக்குமணி. ந.
வரை—மலை, கையிறை, மூங்கில், அளவு. ச. தனி—தனிமை, ஒப்பின்மை. உ. சாந்தம்—பொறுமை, சந்தனம். உ.
முனை—பகை, நுனி, வெறுப்பு. ந. முளை—மூங்கில், அங்குரம், மகன்.
இனம்—சுற்றம், மந்திரி. உ. எழில்—அழகு. இளமை. உ.
ஆனகம்—படகம், துந்துபி. உ. மானம்—அளவு, வெட்கம், விமானம், பெருமை, குற்றம். ரு.
பானல்—வயல், நெய்தல். உ. பாங்கர்—இடம், பக்கம். உ.
மானல்—மயக்கம், ஒப்பு. உ. வருடம்—மழை, ஆண்டு. உ.
தானம்—யானைமதம், நீராடல், கொடுத்தல், தேவலோகம். ச.
பீனம்—பருமை, பாசி. உ. பேடு—அலி, ஊர். உ.
நானம்—பூசும்பூச்சு, கஸ்தூரி, குளிக்குநீர். ந.
வானம்—ஆகாயம், மழை, உலர்ந்தமரம். ந.
வானி—மேற்கட்டி, சேனை, துகிற்கொடி. ந.
ஆனி—உத்தராடநட்சத்திரம், மூலநட்சத்திரம், கேடு, ஆனிமாசம்.
ஏனை—ஒழிபு, மற்றையென்னு மிடைச்சொல். உ.
ஆனியம்—காலம், நாள். உ. அனந்தை—ஓர்சத்தி, பூமி. உ.
முன்னல்—நினைவு, நெஞ்சு. உ. முன்னம்—சீக்கிரிமரம், எண்ணம்.
கன்னல்—சருக்கரை, கரும்பு, கரகம், நாழிகை, நாழிகைவட்டில். ரு.
மன்னன்—உத்தரட்டாதிநட்சத்திரம், அரசன். உ. கின்னரம்—நீர்வாழ்பறவை, வீணை. உ. கிடக்கை—பூமி, மக்கட்படுக்கை. உ.
பின்னை—பின்பு, தங்கை, இலக்குமி. ந.
கொன்—பயனின்மை, காலம், பெருமை, அச்சம். ச.
பொன்—அழகு, இரும்பு, இலக்குமி, வியாழன். ச.
மன்—நிலை, மிகுதி, அரசன். ந. வாழி-வாழ்கெனல், இடைச்சொல்-

வன்னியேபிரமசாரிவளர்கிளிசமிசெந்தீயாம்
சென்னிசம்பாணன்சோழன்சிருளியஞ்செம்பாகும்
கன்னிபெண்ணழிவிலாமைகட்டிளமைக்கும்பேரே
தென்னிசைவனப்புத்தாழைதெற்கொடுகெற்புமாமே. (எ)

குன்றமேவேதண்டமாகுங்குறைவொடுசேதயமும்பேர்
அன்றிலோர்புள்ளுமூலநாளெனவாமிரண்டே
மன்றமேவெளியினுமம்வாசமம்பலமுமப்பேர்
மன்றலேபரிமளப்பேர்மருவுகல்யாணமும்பேர். (அ)

தனமுலைபொன்னுங்கன்றுசந்தமுத்தனமைம்பேராம்
கனவுகித்திரைமையற்பேர்கலிங்கஞ்சாதப்புள்ளாடை
கனைசெறிவொலியாமென்பகவரியேசவரிமேதி
பனுவலேகிளவிநூலாம்படப்பையூர்ப்புறமேதோட்டம். (கூ)

அனந்தனேசிவன்மால்சேடனலாயுதனருகனைந்தே
அனந்தமேமுடிவிலாமையாடகம்விண்முப்பேரே
அனங்கமேயிருவாட்சிப்பேராகுமல்லிகைக்குமப்பேர்
தனஞ்சயன்பார்த்தனேசெந்தழலொருகாற்றுமாமே. (க0)

சானகிசீதைமுங்கிறனுவென்பதுடல்வில்லற்பம்
சானுவேமலைமுழந்தாண்மலைப்பக்கந்தானுமாகும்
சோனையேயோணநாளும்விடாமழைசொரிதலும்பேர்
கானலேமலைச்சார்சோலைகடற்கரைச்சோலைபேய்த்தேர். (கக)

வானென்பவிசும்புமேகமழையொடுபெருமைநாற்பேர்
தானையேசேனையாடைபடைக்கலந்தானுமாகும்
கானந்தேரிசையேபேதைகாடுதெற்பாடியைம்பேர்
ஏனலேசெந்தினைப்பேர்தினைப்புனமென்றுமாமே. (க௨)

முனியென்பதியானைக்கன்றுமுனிவன்வில்லகத்திநாற்பேர்
துனியென்பபுலவிநீட்டந்துன்பநோயாறுகோபம்
பனியென்பநடுக்கந்துன்பம்பயங்குளிரிமமைம்பேரே
சினையென்பமுட்டைபீளாமரக்கொம்புஞ்செப்புமப்பேர். (க௩)

மானேசாரங்கமாவின்பொதுவொடுமகரராசி
கானேநன்மணங்காடென்பகல்லியூர்க்குருவியாமை
ஏனுதிமஞ்சிகன்மந்திரியுந்தந்திரியுமென்ப
மீனேசித்திரைநாள்வான்மீன்மயிலையுமேவுமப்பேர். (க௪)

வன்னியென்பது—பிரமசாரி, கிளி, வன்னிமரம், நெருப்பு. ௪.
சென்னி—தலை, பாணன், சோழன். ௩.
சீருள்—ஈயம், செம்பு. உ. கன்னி-பெண், அழிவின்மை. கட்டிளமை.
தென்—இசை, அழகு, தென்னமரம், தெற்கு, கற்பு. ௫.

குன்று—மலை, குறைதல், சதயநட்சத்திரம். ௩.
அன்றில்—ஓர்பறவை, மூலநட்சத்திரம். ௨.
மன்றம்—வெளி, வாசனை, சபை. ௩.
மன்றல்—வாசனை, விவாகம். ௨.

தனம்—முலை, பொன், பசுவின்கன்று, குணம், அழகு, பசுமுதலிய முப்பொருள். ௬.
கனவு—நித்திரை, மயக்கம். உ. கலிங்கம்—வானம்பாடி, சீலை. ௨.
கனை—நெருக்கம், ஓசை. உ. கவரி—சாமரம், எருமை. ௨.
பனுவல்—சொல், நூல். உ. படப்பை—ஊர்ப்புறம், தோட்டம். ௨.

அனந்தன்—சிவன், திருமால், சேடன், பலபத்திரன், அருகன். ௫.
அனந்தம்—அளவின்மை, பொன், ஆகாயம். ௩.
அனங்கம்—இருவாட்சி, மல்லிகை. ௨.
தனஞ்சயன்—அருச்சுனன், நெருப்பு, தசவாயுக்களுளொன்று. ௩.

சானகி—சீதை, மூங்கில். உ. தனு—உடம்பு, வில், அற்பம். ௩.
சானு—மலை, முழந்தாள், மலைச்சாரல். ௩.
சோனை—திருவோணநட்சத்திரம், விடாமழை. ௨.
கானல்—மலைச்சாரலிற்சோலை, கடற்கரையிற்சோலை, பேய்த்தேர்.

வான்—ஆகாயம், மேகம், மழை, பெருமை. ௪.
தானை—சேனை, வஸ்திரம், ஆயுதப்பொது. ௩.
கானம்—தேர், இராகம், அறிவிலி, காடு, வானம்பாடி. ௫.
ஏனல்—செந்தினை, தினைப்புனம். ௨.

முனி—* யானைக்கன்று, முனிவன், வில், அகத்தி. ௪.
துனி—புலவிநீட்டம், துன்பம், வியாதி, நதி, கோபம். ௫.
பனி—நடுக்கம், துன்பம், அச்சம், குளிர்ச்சி, பனி. ௫.
சினை—முட்டை, கருப்பம், மரக்கொம்பு. ௩.

மான்—மான், விலங்கின்பொது, மகரராசி. ௩.
கான்—வாசனை, காடு. உ. கல்வி—ஊர்க்குருவி, ஆமை. ௨.
ஏனாதி—நாவிதன், மந்திரி, படைத்தலைவன். ௩.
மீன்—சித்திரைநட்சத்திரம், நட்சத்திரம், மீன். ௩.

---

* கயமுனி - யானைக்கன்று.

ஞானமேயறிவுகல்விநல்லதத்துவநூன்மூப்பேர்
யானமேமரக்கலத்தோடெழிலூர்திவிகற்பிரண்டாம்
ஏனமோலேக்குடைப்பேரெறுழியுமறமுமப்பேர்
மேனியேவடிவமென்பநிறத்தையும்விளம்பலாமே. (கரு)

ஞானமென்பது—அறிவு, வித்தை, ஞானநூல். ந.
யானம்—மரக்கலம், வாகனவிகற்பம். உ.
ஏனம்—ஓலேக்குடை, பன்றி, பாவம். ந. மேனி—உருவம், நிறம். உ.

அன்னேயேமுன்பிறந்தாடோழிதாயாகுமென்ப
அன்னமோதிமமேசோருமாகாரமுடனெய்யுண்டி
தன்மையேரியல்பிஞேடுதன்மையினிடமுஞ்சாற்றும்
பன்னலேநெருக்கம்வார்த்தைபருத்தியின்பேருமாமே. (கசு)

அன்னே—முன்பிறந்தாள், தோழி, தாய். ந. அன்னம்-அன்னப்புள், சோறு. உ. ஆகாரம்—உடம்பு, நெய், உணவு. ந.
தன்மை—அழகு, குணம், தன்மையிடம். ந.
பன்னல்—நெருக்கம், சொல், பருத்தி. ந.

வனமேநீர்மிகுதிகாடுவளர்சோலேதுளசியீமம்
மனுவேமந்திரமோர்நூலாமண்ணேபேயிளமையூடன்
புனேயென்பதழகிஞேடுபொலிவுமொப்பனேயுமாகும்
மனேயென்பமனேவிவீடாம்வதுவையேமணங்கல்யாணம். (கள)

வனம்—நீர், மிகுதி, காடு, சோலே, துளசி, சுடுகாடு. சா.
மனு—மந்திரம், ஒர்தருமநூல். உ. மண்ணே—பேய், இளமை, அறிவிலான். ந. புனே—அழகு, பொலிவு, அலங்காரம். ந.
மனே—இல்லாள், வீடு. உ. வதுவை—வாசனே, விவாகம். உ.

அன்விஃனயொடுபெயர்க்கும்விகுதிசாரியையுமாகும்
மன்னிடுங்கனேத்தலென்பதிருளோசையிருபேர்வைக்கும்
இன்னனவொருசொற்பல்பேர்க்கியற்கவிமூந்நூற்ளுென்பான்
சொன்னவன்குணபத்திரன்ருள்சூடுமண்டலவன்ருனே. (கஅ)

அன்—விஃனவிகுதி, பெயர்விகுதி, சாரியை. ந.
கனேத்தல்—இருள், ஒலி. உ.

ணகரவெதுகை முற்றிற்று.

அஅ விருத்தம்-நகo.

---

ஒருசொற்பல்பொருட்பெயர்த்தொகுதி முற்றுப்பெற்றது.

கணபதிதுணை.

# மண்டலபுருடர் வரலாறு.

இவர் தொண்டைநாட்டின்கண் உள்ள பெருமண்டூர் எனப்படும் வீரபுரத்தில் பிறந்தவர். 'வீங்குநீர்ப் பழனஞ் சூழ்ந்த வீரை மண்டலவன்' என இவரே கூறியது காண்க. வீரை என்பது வீரபுரம் என்பதன் மரூஉ. இவர் சமயம் ஆருகதம்; அஃது இந்நூல் முகத்து, 'சொல்வகை யெழுத்தெண்ணெல்லாந் தொல்லைநா ளெல்லையாக, நல்வகையாக்கும் பிண்டிநான்முகன்' எனக் கூறியதனாலும் விளங்கும். இவர் கிருஷ்ணதேவராயர் காலத்திலிருந்தவர். பல வடசொற்களுந் தமிழ் கூறியுள்ளார் இப்போது அச்சாகியுள்ள நிகண்டுகள் பலவற்றுள்ளும் இதுவே விருத்தயாப்பில் இருத்தலின் யாவரும் படித்தற்கு எளியதாக உள்ளது.

---

# பன்னிரண்டாவது

## பல்பெயர்க்கூட்டத் தொருபெயர்த் தொகுதி.

### பாயிரம்.

சொல்வகையெழுத்தெண்ணெல்லாந்தொல்லைநாளெல்லையாக
நல்வகையாக்கும்பிண்டிநான்முகனாளுந்தீமை
வெல்வினைதொடங்கச்செய்துவீடருள்வோன்றாள்போற்றிப்
பல்வகைப்பெயர்க்கூட்டத்தினொருபெயர்பகரலுற்றும்.

இதன்பொருள். தொல்லை நாள் - ஆதிகாலத்திலே, சொல் - சொல்லப்படும், வகை-பாகுபாட்டினையுடைய, எழுத்து - இலக்கணமும், எண்-கணிதமுமாகிய, எல்லாம்-நூல்கள்முழுதையும், எல்லை ஆக-வரையறைப்பட, நல்வகைஆக்கும்-(ஆன்மாக்களின் நிமித்தம்) நடுநீதியாக அருளிச்செய்த, பிண்டி-அசோகமரத்தின் நிழலின்கண்ணே வீற்றிருக்கும், நான்முகன் – நான்கு முகங்களையுடையவரும், நாளும்-நாடோறும், தீமை-தீங்கை, வெல்வினை-வெல்லுகின்ற நற்கருமங்களை, தொடங்கச்செய்து – (மனிதர்கள்) தொடங்கும்படிசெய்து, வீடுஅருள்வோன்-அவருக்கு மோக்ஷத்தைக் கொடுத்தருளுபவராகிய அருகக்கடவுளது, தாள்போற்றி-திருவடிகளைத் துதிசெய்து, பல்வகைப் பெயர்க்கூட்டத்தின்-பல்பெயர்க்கூட்டத்து, ஒருபெயர்-ஒருபெயர்த்தொகுதியை, பகரலுற்றும்-(யாம்) கூறலுற்றும் எ-று.

## உ கஉ-வது பல்பெயர்க்கூட்டத்தொருபெயர்த்தொகுதி

**நிகண்டு:** இது கூட்டம் அல்லது சேர்க்கை என்னும் பொருளை யுடைய வடமொழி; இச்சொற்களின் கூட்டத்தைக் கூறுவத னால் இப்பெயர்பெற்றது; எனவே காரணக்குறி. **இறையனாரகப் பொருள்** உரையின்கண் நிகண்டு என்னும்பெயர் இடுகுறிப்பெய ரெனக் கூறியது காரணச்சிறப்பின்மை கருதி என்க. அன்றிக் **காரணஇடுகுறி** எனக் கோடலுமாம் என்பது.

**பாயிரம்** வரலாறு அல்லது **புறவுரை.** இங்குக் கடவுள் வணக்க மும் செயப்படுபொருளும் ‘சொல்வகை யெழுத்தெண்ணெல்லாம்’ என்னுஞ் செய்யுளால் கூறப்பட்டமையின் இது தற்சிறப்புப் பாயி ரத்தின்கண் அடங்கும். ‘தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளும் எய்த வுரைப்பது தற்சிறப்பாகும்’ என்பது விதி.

பிண்டி நான்முகன் என்றது அசோகமரத்தின் நீழலிலமர்ந்த அருகதேவனை. நான்முகன் என்றது படைப்பது கருதியெனவும் எல்லாச் சமயத்தாரானும் வணங்கப்படும் எல்லாக் கடவுளராகவும் உள்ளான் அருகன் ஒருவனே என்பது கருதியெனவும் கூறும் நன் னூல் விருத்தியுரை காண்க.

நல்வினைசெய்து அதனான் மனத்தூய்மை யடைந்து அதனான் மெய்ப்பொருள் உணர்ந்த பின்னரே வீடுகைகூடும் என்பது உண் மைப்பொருளாதலினால் ‘தீமை வெல்வினை தொடங்கச் செய்து வீட ருள்வோன்’ எனக் கூறினார்.

ஐவகைப் பாகுபாடாவன எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன.

# பன்னிரண்டாவது நிகண்டு.

கூறியகூறினுலுங்குற்றமொன்றிலையருத்தம்
வேறுளதாயினென்றுவிதித்தலின்விரித்துமுன்னம்
ஊறிலாச்சிறப்புவர்க்கமுரைத்திவட்பொதுவர்க்கத்தில்
ஏறியவூழுஞ்சொல்வாமேகமேவீடுபேறு.

இ-ள். கூறிய கூறினுலும்-முன்சொன்னவற்றையே பின்னுஞ் சொல்லினும், வேறுஅருத்தம்-பிறிதுபொருள், உளதாயின்-தருவன வாயின், குற்றம் ஒன்று-அதனுல் யாதொருகுற்றமும், இலைஎன்று-இல்லையென்று, விதித்தலின் - அறிஞர்சொல்லுதலால், முன்னம்-முன்னே, ஊறுஇலா - குற்றம்இல்லாத, சிறப்புவர்க்கம் விரித்து உரைத்து - ஒருசொற் பலபெயர் பலபொருளொருசொல் என்னும் இருவகைச் சிறப்புத் தொகுதிகளை விரித்துக்கூறி, இவண்-இங்கு, பொதுவர்க்கத்தில்-பல்பெயர்கூட்டத் தொருபெயர்த் தொகுதியில், ஏறிய-ஒன்றிரண்டு மூன்று நான்கு எண்களால் உயர்ந்த, ஊழும்-முறையினையும், சொல்வாம்-சொல்லுவாம். எ-று.

முதற்பத்துத் தொகுதியும் அருகன் சிவன் முதலிய பலசொற்களைத் தனித்தனி எடுத்துக்கொண்டு அவற்றிற்குரிய பரியாயச் சொற்களைக் கூறுதலானும், பதினொராவதுதொகுதி பகவன், பகல் முதலிய சொற்களைத் தனித்தனி எடுத்துக்கொண்டு அவற்றிற்குரிய பலபொருள்களைக் கூறுதலானும் இவ்விருகூற்றுப் பதினொரு தொகுதியும் சிறப்புத்தொகுதியென்றும், பன்னிரண்டாவது பல்பெயர்க் கூட்டங்களை ஒன்றிரண்டு முதலிய இலக்கமுறைகளால் பொதுவில்வைத்து விளக்குதலான் இது பொதுத்தொகுதி என்றும் சொல்லப்பட்டன.

கூறியகூறல் என்பது பத்துக்குற்றங்களுள் ஒன்று; அஃதாவது ஒருகால் சொன்ன பொருளையே மீண்டும்கூறுதல். கூறியகூறினும் வேறொரு பொருள் விளக்குமாயின் குற்றமில்லை என்பார் 'கூறிய கூறினுலுங் குற்றமொன்றில்லை யருத்தம் வேறுளதாயினென்று விதித்தலின்' என்றனர். இவ்வாறு விதித்தவர் சேந்தன் திவாகரம் பாடியவர். ஊழ்-முறையென்பர் பரிமேலழகரும், நச்சினார்க்கினியரும். இவற்றை முறையே திருக்குறளில் ஊழதிகாரத்தின் முகத்தும் குறிஞ்சிப்பாட்டில் 'கிளிகடிமரபின ஊழ் ஊழ்வாங்கி' என்னுமிடத்துங் காண்க.

ஏகம்–விடுதலை.

உ: பிறப்பு, வினை, தோற்றம், சுடர்.

இருமையேயிம்மையோடுமறுமைநல்வினையினோடு
மருவுதீவினைகளென்பமற்றிருவினையினுமம்
இருவகைத்தோற்றமென்றேயிடுஞ்சராசரங்களென்ப
இருசுடர்மதியமற்றையிரவியென்றியம்பலாமே. (௨)

உ: மரபு, கந்தம், அறம், பொருள்.

இருமரபன்னைதந்தையெய்தியவழியாங்கந்தம்
இருவகைநற்கந்தங்களேற்றதுர்க்கந்தமென்ப
இருவகையறங்களென்பவில்லறந்துறவறங்கள்
இருவகைப்பொருள்கள்கல்வியேற்றசெல்வங்களாமே. (௩)

உ: கூத்து, ௩: பழம், பாவபுண்ணியவழக்கம்.

இருவகைக்கூத்துத்தானேயியன்றதேசிகமேமார்க்கம்
கருதுமுப்பழங்களின்பேர்கதலிமாபலாவென்றுமே
விரைவொடுசெய்தலேசெய்வித்தலேயுடம்பாடென்ன
வருமுறைபாவமோடுபுண்ணியவழக்கமாமே. (௪)

௩: பிறப்பு, பொறி, காலம், தொழில்.

மும்மையேயும்மையிம்மைமொழிந்திடுமறுமையென்ப
செம்மையாம்வாக்குக்காயந்திகழ்மனமுப்பொறிப்பேர்
மும்மையாங்காலப்பேரின்மொழியிறப்பெதிர்நிகழ்ச்சி
மும்மையாஞ்செய்கைபண்ணன்முறைகாத்தல்சிதைத்தலாமே. (௫)

௩: இடம், நிலம், குற்றம், சுடர்.

மூன்றிடமென்பதன்மைமுன்னிலைபடர்க்கையாகும்
ஆன்றமுந்நிலங்கள்பூமியந்தரஞ்சுவர்க்கமென்ப
மூன்றுகுற்றங்கள்காமமுதிர்சினமயக்கந்தானே
மூன்றுசெஞ்சுடரேதிங்கண்முளைத்தெழுபரிதியங்கி. (௬)

௩: மொழி, வேதத்தீ, உயிர்த்தீ.

பழித்திடல்புகழ்தன்மெய்ம்மைபயக்குமும்மொழிப்பேராகும்
கழிப்பில்வேதத்தின்முத்தீகாருகபத்தியத்தோ
டழிப்பிலாத்தெற்கிலங்கியாகவனீயமென்ப
ஒழிப்பிலாவுயிரிலங்கியுதரம்வித்துறுசினத்தீ. (௭)

௩: குணம். (சாத்துவிகச்செயல்.)

ஏற்றசாத்துவிகத்தோடேயிராசதந்தாமதங்கள்
ஆற்றுமுக்குணங்களாகுமதிற்சாத்துவிகமேஞானம்
சாற்றியதவமேமெய்ம்மைசால்புநல்லருளுண்டாதல்
போற்றியவாமைபோலைம்புலனடக்குதலுமாமே. (௮)

இருமை—இப்பிறப்பு, வருபிறப்பு. (இம்மை, மறுமை.)
இருவினை—நல்வினை, தீவினை.
இருவகைத்தோற்றம்—சரம், அசரம். (அசைதல், அசையாமை) சரம்-இயங்கியற்பொருளென்றும், அசரம்-நிலையியற்பொருளென்றும் தமிழில் வழங்கும்.
இருசுடர்—(இரண்டொளி) சந்திரன், சூரியன். (௨)

இருமரபு—தாய்மரபு, தந்தைமரபு. இருவகைக்கந்தம்—நற்கந்தம், துர்க்கந்தம். இருவகையறம்—இல்லறம், துறவறம்.
இருவகைப்பொருள்—கல்விப்பொருள், செல்வப்பொருள். பொருள் பொய்ப்பொருள்முதலாகப் பலவகைப்படினும் பெரும்பான்மை கருதி இரண்டென்றார். (௩)

இருவகைக்கூத்து—தேசிகம், மார்க்கம். தேசிகம் என்பது இயற்சொல் முதலிய நான்குசொற்கூறுய சொற்பிரயோகம் என்பர் அடியார்க்கு நல்லார். மார்க்கம் என்பது வடுகு.
முப்பழம்—வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம்.
மூவகைப்பாவபுண்ணியவழக்கம்-செய்தல், செய்வித்தல், உடன்படல்.

மும்மை—உம்மை, இம்மை, மறுமை[சென்ற பிறப்பு, இப்பிறப்பு,வரு [பிறப்பு.
முப்பொறி—வாக்கு, காயம், மனம்.
முக்காலம்—இறந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம்.
முத்தொழில்—படைத்தல், காத்தல், அழித்தல். (௪)

மூவிடம்—தன்மை, முன்னிலை, படர்க்கை. (முறையே யான், நீ, அவன்.) முன்னிலை முன்நிற்றலையுடையவன்; படர்க்கை பேசும் விஷயம் செல்லுதலையுடைய இடம்; படர்தல்-செல்லல்.
மூவுலகம்—பூமி, அந்தரம், சுவர்க்கம்.
முக்குற்றம்—காமம், வெகுளி, மயக்கம். காமம்-ஆசை, அஃதாவது பொருண்மேற்செல்லும் பற்றுள்ளம், வெகுளி கோபம்; ஆசைப்பட்டபொருள் கிடைக்காதபோது உண்டாவது; மயக்கம்-கோபத்தின் காரியமாகவுள்ளது. வெகுளி-வெகுள் பகுதி. இ - விகுதி, இம்மூன்று சொற்களுள் வெகுளி ஒன்றே தமிழ்ச்சொல்.
முச்சுடர்-சோமன், சூரியன், அக்கினி. (௫)

மூவகைமொழி—பழித்தல், புகழ்தல், மெய்கூறல்.
மூவகைவேதத்தீ—காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவநீயம், காருகபத்தியம்: இல்லறத்தானுக்கு உரிய யாகாக்கினி. தக்ஷிணாக்கினி: முன்கூறிய காருகபத்தியத்துக்கு இடப்புறத்திலுள்ளது. ஆகவநீயம்: யாகத்துக்கு உரியது.
மூவகையுயிர்த்தீ—உதராக்கினி, காமாக்கினி, கோபாக்கினி. உதராக்கினி உதரம்-வயிறு; ஜாடராக்கினி. (௭)

முக்குணம்—சாத்துவிகம், இராசதம், தாமதம். (ஞானம், தவம், மெய்ம்மை, மேன்மை, அருளுடைமை, ஐம்புலனடக்கல்; இவை சாத்விதுகச் செயல்கள்.) (௮)

(இராசதச்செயல்.)

தானமேதவமேமெய்ம்மைதருமம்பேணுதலினோடு
ஞானமேகல்விகேள்விநலனிவைதெரிதருமே
ஈனமொன்றில்லார்வைத்தவிராசதகுணங்களென்ப
ஊனமிலுறுவன்முன்னாளுரைத்திடுமுறைமைதானே. (௯)

(தாமதச்செயல்.)

தாமதநிறைபெருண்டிசாம்புதல்சோம்புமூரி
காமமேநீதிகேடுகண்ணுறக்கம்பொச்சாப்பு
நாமமாஞ்சலமேவஞ்சநாட்டியவிம்மூப்பாலும்
மாமலிவுடனேமற்றமெலிவொடுசமனுமாமே. (௧௦)

௩: தானம் (உத்தமதானம்.)

மறுவறுதானமூன்றுவகைதமிலுத்தமந்தான்
பெருமுறையோம்பிவைத்துப்பேணியபொருளைத்தானே
குறுகியேபெறுகவென்றுநுறையிரந்தடங்கினோர்க்கும்
உறுதவர்க்குவந்துதாழ்ந்தேயுபகாரஞ்செய்தலாமே. (௧௧)

(மத்திமதானம், அதமதானம்.)

சீருறுப்பில்லார்மாதர்சிதடராதுலர்க்குநல்கல்
வாருறுகொங்கைநல்லாய்மத்திமதானமென்ப
ஆர்வமேபுகழ்கண்ணோட்டமச்சங்கைம்மாறுமற்றைக்
* காரணமின்னவெல்லாங்கடைப்படுதானமாமே. (௧௨)

௩: கடுகு, பலை, புரம், சூரியவீதி.

திரிகடுகஞ்சுக்கோடுதிப்பிலிமிளகுசெப்பும்
திரிபலையென்பதானேதிகழ்கடுநெல்லிதான்றி
புரமூன்றுசெம்பொன்வெண்பொன்போற்றியகரும்பொன்னென்ப
விரவியமேடமேறுமிதுனமேயருக்கன்வீதி. (௧௩)

௪: நிலம், கதி, அங்கம்.

முல்லையேகுறிஞ்சிநெய்தன்மொழிந்திடுமருதமென்ப
நல்லநானிலமென்றோதும்நாற்கதியும்பர்மக்கள்
சொல்லியவிலங்கினோடுநரகர்சாதுரங்கமென்ப
வெல்லுமால்யானைதேரேவெம்பரிகாலாளாமே. (௧௪)

௪: இழிச்சொல்வேதம்.

குறளைபொய்கடுஞ்சொல்லோடுகூறியபயனில்வார்த்தை
நறுநுதல்கேட்டிமற்றைநால்வகையிழிசொல்லாகும்
மறுவிலாவிருக்கினோடுவளமிகும்யசுவேசாமம்
அறைதருமதர்வமென்பவாமிவைவேதநான்கே. (௧௫)

---

* காரணங்கடப்பாடேழும் என்றும் பாடம்.

இராசதச்செயல்—தானம், தவம், மெய்ம்மை, தருமம்பேணல், ஞானம், கல்வி, கேள்வி. (க)

தாமதச்செயல்—பேருண்டி, ஒடுங்கல், சோம்பு, மூரி, காமம், நீதிகேடு, நித்திரை, மறதி, தணியாக்கோபம், வஞ்சம். மூரி-அருள்: தொடர்பில்லாதார் இடத்தும் தோன்றும் உள்ளவருக்கம். (க0)

மூவகைத்தானம்—உத்தமதானம், மத்திமதானம், அதமதானம். உத்தமதானம்-தருமவழியாற் சம்பாதித்த பொருளை மனம் இந்திரியவழி செல்லாது தடுத்து நோற்குந் தவமுடையா ரிருக்குமிடம் சென்று பெற்றுக்கொள்க எனக்குறையிரந்து பணிந்துகொடுத்தல்.

மத்திமதானம்—அங்கக்குறைவுடையோர்க்கும், பெண்களுக்கும், செவிடர்க்கும், வறியவர்களுக்கும், (பிரதிபலன்கருதாது) கொடுத்தல்.
அதமதானம்—அன்பு, புகழ், கண்ணோட்டம், அச்சம், கைம்மாறு, பிறிதுகாரணம் பலன்கருதிக் கொடுத்தல். கண்ணோட்டம்-தாக்ஷிண்ணியம்; கண் + ஒட்டம் = கண்ணினது ஒட்டம். கைம்மாறு-கையினின்று மாறுதலை யுடையது; பிரதியுபகாரம். (கஉ)

திரிகடுகம்—சுக்கு, திப்பிலி, மிளகு.
திரிபலை—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.
திரிபுரம்—பொன்மதில், வெள்ளிமதில், இருப்புமதில்.
சூரியனுக்குரியமூவகைவீதி—மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி. முறையே (உத்தராயநம், பூர்வாயநம், தக்ஷிணாயநம் என்பர் வடநூலார்.) [சூரியன் வைகாசி ஆனி ஆடி ஆவணி மாதங்களில், மேடத்தின் வழியேபோந்து சஞ்சரிப்பன். சித்திரை புரட்டாசி ஐப்பசி பங்குனிகளில், ரிஷபத்தின் வழியேபோந்து சஞ்சரிப்பன். கார்த்திகை மார்கழி தைகளில், மிதுனத்தின் வழியேபோந்து சஞ்சரிப்பன். ஆதலால் அந்த மாதங்கள் மேட இடப மிதுன வீதிகளெனப்படும்.] (கங)

நால்வகைநிலம்—முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம். முல்லை-காடுங் காடுசேர்ந்த இடமும்; உரிப் பொருள் இருத்தலும் இருத்தல் அஃதாவது நிமித்தமும் அதன் கற்பு. குறிஞ்சி-மலையும் மலைசார்ந்த இடமும்; உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும். நெய்தல்-கடலுங் கடல்சார்ந்த இடமும் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும். மருதம்-வயலும் வயல்சார்ந்த இடமும்; உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும்.
நாற்கதி—தேவ, மனுட, விலங்கு, நரக பிறப்புகள்.
நால்வகையங்கம்—கஜம், ரதம், துரகம், பதாதிகள். கஜம்-யானைப்படை, ரதம்-தேர்ப்படை, துரகம்-குதிரைப்படை, பதாதி-காலாட்படை. (கச)

நால்வகையிழிசொல்—குறளை, பொய், கடுஞ்சொல், பயனில்சொல்.
நால்வகைவேதம்—இருக்கு, யசுர், சாமம், அதர்வம். (கரு)

ச: புருஷார்த்தம், கேள்வி, அரண், ஆடவர்குணம்.

அறமொடுபொருளின்பம்வீடானநாற்பொருள்களாகும்
உறுமிவைதம்மைக்கேட்டலொத்தநால்வகைக்கேள்விப்பேர்
செறிகடம்வெற்புநீரேதிணிமதிலரணநான்காம்
அறிவொடுநிறையேயோர்ப்புக்கடைப்பிடிகுணநான்காமே. (௧௬)

ச: பெண்கள்குணம், புண்ணியத்தோற்றம்.

நாணமேமடமேயச்சநாட்டியபயிர்ப்புநான்கும்
மாணிழைமடநல்லார்க்குவைத்தநாற்குணங்களாகும்
பேணியதவமொழுக்கம்பெருங்கொடைகல்விநான்கிற்
பூணுநற்பொருள்கணான்கும்புண்ணியத்தோற்றமாமே. (௧௭)

ச: பொன் வகை, பூவகை.

சொல்லியசாதரூபங்கிளிச்சிறைதுலங்குகின்ற
நல்லவாடகமேசாம்பூநதமிவைநால்வகைப்பொன்
மெல்லியகொடிப்பூக்கோட்டில்விளங்குபூநீர்ப்பூவேறு
புல்லியபுதற்பூவென்னப்பொருந்துநால்வகையிற்பூவாம். (௧௮)

ச: உண்டி, ஊறுபாடு, அரசருபாயம்.

நறைபடவுண்பதின்பநக்குவபருகனான்காம்
எறிதலேகுத்தல்வெட்டலெய்தனான்கூறுபாடாம்
முறைபடுசாமம்பேதமுந்தியதானந்தண்டம்
நெறிபடுமுபாயநான்குநிருபர்தம்முறைமையாமே. (௧௯)

ச: உயிர்த்தோற்றம், புலவர்.

துவமதாங்குடற்போர்வைக்குட்டொடர்புறுமுட்டைதன்னில்
நவையறுநிலத்தில்வேர்வினல்லுயிர்த்தோற்றநான்காம்
கவியொடுகமகன்வாதிகாசிலாவாக்கியென்ப
யிவிபுன்மேனால்வகைத்தாம்புலமையரியல்புதானே. (௨௦)

நால்வகைப்பொருள்—அறம், பொருள், இன்பம், வீடு. அறம்-திருக்குறள் முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும். பொருள்-அறநெறியால் பொருளீட்டுதல். இன்பம்-அறத்தின்வழி தன் மனைவியோடு அனுபவித்தல். வீடு-மோக்ஷம்; இம்மூன்றனையும் அறவே விடுதல். இதனைக் குறிக்கும் வெண்பா. ஈதலறந் தீவினைவிட் டீட்டல் பொருளெஞ்ஞான்றுங், காதலிருவர் கருத்தொருமித்-தாதரவு, பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு. (ஒளவையார்.)

நால்வகைக்கேள்வி—மேற்படி நான்கினையு முணர்த்தும் புருஷார்த்த நூல்களைக் கேட்டல். நால்வகையரண்-காடு, மலை, நீர், மதில்.

ஆடவர்க்குரியநால்வகைக்குணம்—அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி. நிறை-காப்பன காத்துக்கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். நிறு-பகுதி. ஓர்ப்பு-ஆராய்தல். கடைப்பிடி-துணிந்த ஒருண்மையினை விடாது பற்றுதல். (௧௬)

பெண்களுக்குரிய நால்வகைக்குணம்—நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. நால்வகைப் புண்ணியத்தோற்றம்-தவம், ஒழுக்கம்; சொடை, கல்வி இவற்றை உடையராய்ப்பிறத்தலே புண்ணியர். மடம்-கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை, பயிர்ப்பு-அருவருப்பு. புண்ணியம்-பரிசுத்தம். (௧௭)

நால்வகைப்பொன்—சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம்.

நால்வகைப்பூ—கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, அல்லது நிலப்பூ. சாம்பூநதப்பொன் எல்லாவற்றிலுஞ் சிறந்தது. ஆசிரியர் நக்கீரனார் 'நாவலொடு பெயரிய பொலம்புனையவிரிழை' என்பர். (௧௮)

நால்வகையுணவு—உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன.

நால்வகையூறுபாடு—எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

நால்வகையுபாயம்—சாமம், பேதம், தானம், தண்டம். உபாயம் நான்கு. சாமம்-சமாதானம், பேதம்-பிரித்துக்கோடல், தானம்-பொருள்தரல், தண்டம்-போரிடுதல். சாமம்-பரஸ்பரோபகாரம், சுக்ருதம், குணங்களைப் புகழ்தல், சுற்றத்தினுதலைத் தெரிவித்தல், நானுன்னைச்சேர்ந்தவனென்று நல்வார்த்தை கூறுதலென ஐவகைப்படும். பேதம்-ஒருவர்க்கொருவர் ஆகவிடாமற்கெடுப்பது, பரஸ்பரசங்கர்ஷணத்தை யுண்டுசெய்தல், ஸந்தர்ஜனம் என மூவகைப்படும். தானம்-தன்பொருள் முழுதுங் கொடுத்தல், எங்கேயாவது பொருள்வாங்கிக் கொண்ட பக்ஷத்தில் அதற்கநுகூலனுய்க் கழித்தல், அபூர்வ வஸ்துக்களைத் தருதல், இவன் பொருளைக்கொள் அது உன்பொருளென ஒருவன் பொருளில் பிரவர்த்திக்கச் செய்தல், குணம், பிரயோசனம் என ஐவகைப்படும். தண்டம்வதம், அர்த்தஹாரணம், பரிக்கிலேசம் எனமூவகைப்படும்.

நால்வகையுயிர்த்தோற்றம்-கருப்பையிற்றேன்றுவது, முட்டையிற்றேன்றுவது, வித்துவேர்முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவது, வேர்வையிற்றேன்றுவது.

நால்வகைப்புலவர்—கவி, கமகன், வாதி, வாக்கி. (௨௦)

(கவி, கமகன் என்னும் புலவர்தன்மை.)

நீட்டியவாசிருேடுமதுரஞ்சித்திரம்வித்தாரப்
பாட்டினவையாருமெச்சப்பாடுவோன்கவியென்ருகும்
நாட்டியவரும்பொருட்கள்செம்பொருணடையவாகக்
காட்டியேவிவகரிப்போன்கமகனென்றறையலாமே. (௨௧)

(வாதி, வாக்கி என்னும் புலவர்தன்மை.)

எதுவுமேற்கோளுந்தானெடுத்துடன்காட்டியாங்கே
வாதினிற்பிறன்கோளெல்லாமறுப்பவன்வாதியென்ப
ஒதியவறம்பொருட்களுற்றிடுமின்பம்வீடு
கோதின்றிக்கேட்கவேட்கக்கூறுவோன்வாக்கியாமே. (௨௨)

(ஆசுகவி.)

கொடுத்திடும்பொருளின்மற்றுக்கூறியவினத்திற்கோட்டி
அடுத்திடுமெப்போதப்போதசைவின்றியாருமெச்ச
எடுத்தியல்பாகப்பாடுமெவனவனாசுசொல்வான்
வடுப்பிளவனையவொண்கண்மடமொழிவல்லிநல்லாய், (௨௩)

(மதுரகவி.)

பொருளினிற்பொலிவுஞ்சொல்லிற்பொருந்தியபொலிவுமற்றைத்
தருதொடைதொடைவிகற்புந்தாந்துதைந்தமிர்தமூற
உருவகமுதலாவைத்தேயோதியவலங்காரத்தோ
டிருளறவோசைதோன்றியிருந்ததுமதுரமாமே. (௨௪)

(சித்திரகவி.)

சொற்றிடுமொலேமாற்றேசுழிகுளமேகபாதம்
குற்றமில்சக்கரத்தின்கூறெழுகூற்றிருக்கை
கற்றிடுமடிமயக்குக்காட்டும்பாவின்புணர்ப்போ
டொற்றெழுத்தியாவுந்தீர்ந்தவொருபொருட்பாட்டினேடும். (௨௫)

(இதுவுமது.)

சித்திரப்பாவேமற்றவிசித்திரப்பாவினேவோ
டுத்தரங்குற்றமில்லாவோரெழுத்தினத்திற்பாட்டே
வைத்திடுங்காதைதன்னைமறைப்பதுகரந்துறைப்பாத்
தைத்தகோமூத்திரிகூடசதுர்த்தமென்றிசைத்தபாட்டு. (௨௬)

(இதுவுமது.)

சருப்பதோபத்திரங்கள்சார்ந்திடுமெழுத்திேைடு
வருக்கமும்வடநூல்வைத்துவருமுதாரணமுநோக்கி
விரித்திடவிசைத்துவைத்த * மிறைக்கவிப்பாட்டுமற்றும்
தெரித்ததுபாடவல்லோன்சித்திரகவியென்ருமே. (௨௭)

---

* மிறைக்கவி-சித்திரப்பா.

கவியாவான்—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் யாவரும் வியக்கும்படி பாடுவோன்.

கமகனாவான்—அரும்பொருட்களைச் செம்பொருணடையினவாகக்காட்டி விவகரிப்போன். (உக)

வாதியாவான்—ஏதுவும் மேற்கோளும் எடுத்துக்காட்டி வாதித்துப் பிறன்கொள்கையை மறுப்பவன்.

வாக்கியாவான்—அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப்பொருளையும் யாரும் விரும்பிக்கேட்குமாறு குற்றமறக் கூறுவோன். (உஉ)

ஆசுகவி—சபையிலே ஒருவனாற் கொடுக்கப்பட்ட பொருள், பாட்டு அடி முதலியன அமையும்படி விரைந்து பாடவல்லவன். (உங)

மதுரகவி—பொருட்சிறப்பும் சொற்சிறப்பும், தொடையும், தொடைவகைகளும் நெருங்கி, உருவகமுதலிய அலங்காரங்களும் ஓசையுந் தோன்றும்படி பாடவல்லோன். (உச)

சித்திரகவி—மாலைமாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரவகை, எழுகூற்றிருக்கை, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, ஒற்றெழுத்தில்லாப்பாட்டு, ஒருபொருட்பாட்டு.

சித்திரகவி முற்காலத்தில் மந்திரோச்சாரணநிமித்தம் சக்கரங்களில் எழுத்துக்களை அமைத்துப் பாடப்பெற்று வந்தது. பிற்காலத்தில் யாவரும் எதனையுஞ் சித்திரமாகப் பாடத்தொடங்கினர். அது பொருந்தாது எனத் தொல்காப்பியவுரையில் நச்சினார்க்கினியர் கண்டித்தனர். (உரு)

சித்திரப்பா, விசித்திரப்பா, வினாவுத்தரம், ஓரெழுத்துப்பாட்டு, ஓரினப்பாட்டு, காதைகரப்பு, கரந்துறைபாட்டு, கோமூத்திரி, கூடசதுர்த்தம். (உசா)

சருப்பதோபத்திரம் என்பவைகளும், எழுத்தும், எழுத்தின் வர்க்கமும், உதாரணமும் நோக்கிப்பாடும்படி வடநூலுள்ளே வைத்த மிறைக்கவிகளும், பிறவும் பாடவல்லோன் சித்திரகவியாம். (உஎ)

(வித்தாரகவி.)

தெரித்தமும்மணியின்கோவைசெப்புபன்மணியின்மாலை
வருத்தந்தீர்மடலையூர்தன்மறத்தொடுகலிவெண்பாவே
உருத்தபாசண்டமற்றுமுறுமியலிசையேகூத்து
விரித்துறப்பாடவல்லோன்வித்தாரகவியென்றாமே. (உஅ)

ச: சரம்விடுகிலை. (வைகாசம்.)

வரிசிலையியற்றுவோர்க்குவகுத்தநால்வகையேசிற்றல்
பரவுபைசாசமற்றும்பகர்ந்தவாலீடத்தோடு
பெருகியமண்டலந்தான்பிரத்தியாலீடமாகும்
ஒருகாளின்றொருகாறன்னைமுடக்கல்பைசாசமென்ப. (உகூ)

(ஆலீடம், மண்டலம், பிரத்தியாலீடம்.)

வலப்பதமண்டலித்துவாமபாதந்தான்முந்து
நிலப்பெயரேயாலீடமின்றமண்டலத்திறைமம்
இலக்கணத்தோடேகூடவிருகாலுமண்டலித்தல்
வலப்பதமுந்திப்பிற்கான்மண்டலம்பிரத்தியாலீடம். (௩0)

ரு: எழுத்துப்பொருத்தம்.

பாலனேகுமரன்மன்னன்படுமுதிர்கிழவன்சாவு
கோலுந்தன்பேரெழுத்துக்குறித்ததுமுதலாக்கொள்க
ஏலுமுன்னெழுத்துமூன்றுமின்பம்பின்னிரண்டுந்தீதாம்
சாலுமூவகைச்சேர்தானேசாற்றியசவிதைக்கின்பம். (௩க)

ரு: முற்பக்கப்பட்சி.

அகரமேயாதிபாகவைந்துகுற்றெழுத்துந்தானே
புகல்வல்லூருந்தைகாக்கைபோர்க்கோழியொடுகலாபி
தொகுமுண்டிபோக்குவேந்துதுயில்சாவுதொழில்களாகும்
பகருமைந்தெழுத்துள்யாதுபற்றினுமதுவேமுன்னும். (௩உ)

ரு: பிற்பக்கப்பட்சி.

பிற்பக்கமாகில்வேறுபேதிக்கும்யாதோவென்னில்
அற்புதவுண்டிசாவேயறிதுயிலரசுபோக்குப்
பொற்பறுமரணந்தூக்கமில்லாதபொழுதையோர்ந்து
பற்பலசெய்யுட்டானே பகர்ந்திடின்மிகுந்தநன்மை. (௩௩)

ரு: உயிரிறப்பு.

சுவையின்மீனளிநாற்றத்திற்றும்பியேபரிசந்தன்னில்
நவையிலாவசுணந்தானேநல்லிசைதனிற்பதங்கம்
உவகையாமொளியைவேட்டேயுயிரினையிழக்குமைந்தாம்
இவையெலாமுடையோர்தம்பாலாருயிரிழந்திடாதார். (௩௪)

வித்தாரகவி—மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மடலூர்தல், மறம், கலிவெண்பா, பாசண்டத்துறை, இயல் இசை நாடகம் என்பனவற்றை விரித்துப் பாடவல்லோன். (உஅ)

வில்வீரர் நிற்கும் நால்வகை நிலை—பைசாசம், ஆலீடம், மண்டலம், பிரத்தியாலீடம். பைசாசமாவது-ஒருகாலை ஊன்றி ஒருகாலை முடக்கி நிற்றல். (உகூ)

ஆலீடமாவது—வலக்காலை வளைத்து இடக்காலை முன்வைத்து நிற்றல். மண்டலமாவது-இருகாலையும் மண்டலித்து நிற்றல். பிரத்தியாலீடமாவது-வலக்காலை முன்வைத்து இடக்காலை மண்டலித்து நிற்றல். (ந0)

ஐவகைத்தானப்பொருத்தம்—பாலன், குமரன், அரசன், கிழவன், மரணம். தானப்பொருத்தம் பார்க்கும்போது நெட்டெழுத்துக்களை அவ்வவற்றிற் கினமாயுள்ள குற்றெழுத்திலடக்கி ஐந்தெழுத்தாகக்கொண்டு, பாட்டுடைத் தலைவன் பெயரின் முதலெழுத்தைப் பாலன்றானமாக வைத்தெண்ணுக. எண்ணும்போது எடுத்துக்கொண்ட முதற்சீரின் முதலாம் எழுத்து முதன்மூன்று தானத்தொன்றாய் வரின் நன்மை, பின்னிரண்டுதானத்தில் வருமாயின் தீதாம். நற்கணமாகிய மூவகைச்சீரே எவ்வகைப்பட்ட பாக்களுக்கும் முதற்சீராகக்கொண்டு பாடல் வேண்டும். (நக)

பஞ்சபட்சி—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில். இவற்றை அ,இ, உ என்னும் எழுத்துகளும் உணர்த்தும். முறையே ஊண் நடை, அரசு, துயில், சாவு, என்பன இவற்றின்தொழில்களாகும்.

இப்பட்சிகளும் தொழில்களும், அபரபக்கத்திலே மயில், கோழி, காகம், ஆந்தை,வல்லூறு எனவும்; ஊண், சாவு, துயில், அரசு,நடை எனவும்பேதமாகக் கொள்ளப்படும். தன் பெயர்ப் பக்ஷி சாவு துயில் இல்லாதபொழுதிற் செய்யுள் செய்தல் மிகவும் நன்மை. (நந)

ஐவகைப்புலனுகர்வாலுயிரிழப்பன—மீன் சுவையினாலும், வண்டு நாற்றத்தினாலும், தும்பி பரிசத்தினாலும், அசுணமா இசையினாலும், விட்டில் ஒளியினாலும் உயிரிழக்கும். அசுணம் ஒருவகை இசையறி விலங்கென்று சிலரும், இசையறி பறவையெனச் சிலரும் கூறுவர்; இப்போது ஆராய்ச்சியினால் பறவையென்றே தெளிவாகிறது. (நச)

௫: திணை, வாசம்.

கோலியவைந்திணைப்பேர்குறிஞ்சியேசெறிந்தமுல்லை
பாலையேநெய்தலோடுபரவியமருதமாமே
ஏலந்தக்கோலமற்றையிலவங்கத்தொடுசாதிக்காய்
சாலுங்கர்ப்பூரமைந்துஞ்சாற்றியபஞ்சவாசம். (௩௫)

௫: விரை, அகிற்கூட்டு.

சந்தனமகிலினோடுதகரங்குங்குமமேகோட்டம்
இந்தவைந்தென்றுசொல்லுமெய்தியவிரைகளின்பேர்
உந்துசந்தனங்கர்ப்பூரமுடனெரிகாசுசெந்தேன்
அந்தவேலங்க * ளென்பவகிற்கூட்டோரைந்துந்தாமே. (௩௬)

௫: அரசன்குழு, அரசன்சுற்றம்.

தடுக்குமந்திரிபுரோகிதன்செழிற்றூதமைஞற்றன்
எடுத்துவந்திருந்தசேனைக்கிறைவனைங்குழுவென்றாகும்
படைத்தொழிலோர்நிமித்தம்பார்ப்பவராயுள்வேதர்
அடுத்தநட்பாளர்பார்ப்பாரைவகையுறுதிச்சுற்றம். (௩௭)

௬: குரவர், பால்.

அரசனேயுபாத்தியாயனன்னையே ‡ யையன்மூத்தோன்
குரவரோரைவரென்றுகூறினர்வேறுநூலோர்
ஒருவனேயொருத்திமற்றுமுறைத்திடும்பலரேயொன்று
விரவியபலவென்றைந்துமேவியவைம்பாலாமே. (௩௮)

௫: அங்கம், பாதகம்.

பஞ்சாங்கந்திதியேவாரம்பகர்ந்தநாள்யோகத்தோடு
துஞ்சாதகரணமென்பசூழ்கொலைகளவுபொய்யே
அஞ்சாதகள்ளருந்தலார்குருநிந்தையென்ப
பஞ்சார்மெல்லடிநல்லாய்கேள்பஞ்சபாதகத்தின்பேரே. (௩௯)

௫: சயனம், கூந்தலினைம்பால்.

மயிற்றூவியிலவின்பஞ்சுமற்றைச்செம்பஞ்சுவெண்பஞ்
சயிர்ப்பிலாவன்னத்தூவியாம்பஞ்சசயனத்தின்பேர்
வியக்குமைம்பால்வகைப்பேர்மேவியமுடியேகொண்டை
குயிற்றியகுழல்பனிச்சைகோலவார்சுருளுங்கூறும். (௪0)

௫. துரககதி, உணவு.

மல்லமேமயூரமற்றைவானரம்வல்லியம்மே
சொல்லியசரமேயென்பதுரகதகதிகளைந்தாம்
பல்லினாற்கடித்தனக்கல்பருகலேவிழுங்கன்மற்றும்
மெல்லவேசுவைத்தலாகும்வினவிலைந்துணவுதாமே. (௪௧)

௫: வினா, பூதம்.

அறியாதான்வினாவல்பின்னையறிவொப்புக்காண்டலோடு
குறியுடனையந்தீர்தல்குறித்தவனறிவுகோடல்
கறையறமெய்யவற்குக் காட்டலைவகைவினாவாம்
பெறுநிலநீர்தீகாற்றேபெருவிசும்பைந்துபூதம். (௪௨)

*வெல்லம் என்றும் பாடம். அகிற்கூட்டைந்தனுள் வெல்லமும் ஒன்றாகக் கூறுவர் சிலஆசிரியர். ‡ அடிகளே என்றும் பாடம்.

ஐந்திணை—குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம்.
பஞ்சவாசம்—ஏலம், தக்கோலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம்.

ஐவகைவிரை—சந்தனம், அகில், தகரம், குங்குமப்பூ, கோட்டம்.
ஐவகையகிற்கூட்டு—சந்தனம், கருப்பூரம், எரிகாசு, (காசுக்கட்டி) தேன், ஏலம். (கூசு)

அரசனைம்பெருங்குழு—மந்திரி, புரோகிதன், தூதன், ஒற்றன், (ஒற்றன்-மாறுவேடங்கொண்டாராய்வோன்.) சேனாபதி.
அவனைம்பெருஞ்சுற்றம்—படைத்தொழிலாளர், நிமித்தம்பார்ப்பவர், ஆயுள்வேதியர், நட்பாளர், அந்தணர். ஆயுள்வேதியர்-வைத்தியர். அந்தணர்-அழகிய தட்பத்தையுடையவர். அஃதாவது துறவிகள். இவ்வாறன்றி அந்தத்தை அணவுவோர் அஃதாவது வேதாந்தத்தை நோக்குவார் என்று கூறினர் நச்சினார்க்கினியார். (கூஎ)

ஐவகைக்குரவர்—அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்.
ஐம்பால்—ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால். (கூஅ)

பஞ்சாங்கம்—திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம்.
பஞ்சபாதகம்—கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குருநிந்தை.()

பஞ்சசயனம்—மயிற்றூவி, இலவின்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத்தூவி.
கூந்தலினைம்பால்—முடி, கொண்டை, குழல், பனிச்சை, சுருள் (சo)

ஐவகைத்துரக கதி—மல்லகதி, மயூரகதி, வானரகதி, வல்லியகதி, சரகதி. (மயூரம்-மயில்.)
ஐவகையுணவு—கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல், சுவைத்தல். ()

ஐவகைவினா—அறியான்வினாவல், அறிவொப்புக்காண்டல், ஐயந்தீர்தல், அவனறிவுதான்கோடல், மெய்யவற்குக்காட்டல். அறிவொப்புக்காண்டல்-அவனறிவு தன்னறிவுடன் ஒத்திருக்கும் பகுதியை அறிதல். அவனறிவுதான் கோடல்-அவனறிவைத்தான் கொள்ளுதல்.
ஐம்பூதம்—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். (ஆகாயம்-வெளி) (சஉ)

ரு: ஈசுரன்முகம், இசைக்கருவி.

தலைவனைம்முகங்களாவசத்தியோசாதம்வாமம்
புலனுறுமகோரமேதற்புருடமீசானமென்ப
குலவுதோறுளைநரம்புகூறிடுங்கஞ்சங்கண்டம்
இலகுமிவ்வைந்தாலாகுமிசைக்கருவிகளைந்தாமே. (சங)

ரு: வேள்வி, தாயர்.

தெய்வமேபிரமம்பூதந்தென்புலத்தோர்மனித்தர்
ஐவகையோரையோம்பலைவகைவேள்வியாமே
உய்வகைபாராட்டுந்தாயூட்டுந்தாய்முலைத்தாய்கைத்தாய்
செவ்வகையறிந்துபோற்றுஞ்செவிலித்தாயைவர்தாயர். (சச)

ரு: கைத்தொழில், மெய்யவத்தை.

இலகியவெண்ணனூசியெழுதலேயிலையைக்கிள்ளல்
மலர்தொடுத்திடுதலேயாழ்வாசித்தலைறுழிலைந்தாகும்
குலவுகொட்டாவிநெட்டைகுறுகுறுப்பேமூச்சீடே
அலமரவொடுங்கிநட்டுவிழுதன்மெய்யவத்தையைந்தே. (சரு)

ரு: காடுபடுதிரவியம், கடல்படுதிரவியம்.

அரக்கிறாலினியதேனேயாய்மயிற்பீலிநாவி
நெருக்கியகாட்டினுற்றநெடுந்திரவியங்களைந்தாம்
திரைக்கடற்படுவவுப்புச்செய்யவொண்பவளம்வெண்முத்
திரைத்தெழுசங்கோர்க்கோலையிவ்வைந்துமென்னலாமே. (சசு)

ரு: நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம்.

செங்நெல்செவ்விளநீர்மற்றைச்சிறுபயறுடனேவாழை
கன்னலிவ்வைந்துநாட்டிற்கருதியதிரவியப்பேர்
மின்னுகண்ணுடிபித்தன்வெந்திறன்மந்தியானை
மன்னவனகரியைந்துவருந்திரவியங்களென்ப. (சஎ)

ரு: மலைபடுதிரவியம், புலனுகர்ச்சி.

கறியொடுகோட்டமிக்ககாரகிலொடுதக்கோலம்
நறியகுங்குமமைந்தென்பனன்மலைத்திரவியப்பேர்
துறையிலைம்பொறிநுகர்ச்சிசுவையொளியூறேயோசை
அறையுநாற்றங்களென்னுமடைவிவையாகுமன்றே. (சஅ)

ரு: மன்மதபாணம், அவற்றின்பெயர்.

ஆசைவிலாவனசஞ்சூதமசோகமேமுல்லைநீலம்
ஒசியும்வேள்கணைகளாகுமுன்மத்தமதனமோகம்
வசையில்சந்தாபத்தோடுவசீகரணங்களைப்பேர்
இசையுமற்றிவைகள்செய்தேயிடுமவத்தையுமேற்சொல்வாம். (சகூ)

ஈசுரனைம்முகம்—சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசானம். ஈசுவரன் ஐம்முகம்: ஈசானமூர்த்தி, படிகநிறமும் மூன்று கண்ணும் சூலம் அபயமும் உடையராய்ச் சௌமியராய்ப் புருஷாகாரமாய் இருப்பர். சத்தியோசாதமூர்த்தி வெண்ணிறம், வெள்ளைமாலை, வெள்ளாடை, பால்யரூபம், புன்னகை, அபயம், வரதம் உடையவர். வாமதேவமூர்த்தி செந்நிறமும் சுரபிமாலையும் உயர்ந்தமூக்கும் கையில் கத்தி கேடயமும் சிவந்தபாசையும் உடையவர். அகோரமூர்த்தி வெண்மைகலந்த கருநிறம் காதிற்குண்டலம், மீசை, சிகை, கோரப்பல், பயங்கரமுகம், கபாலமாலை, சர்ப்பபூஷணம் முதலிய பெற்று எட்டுத்தோள்களையுடையவர். தற்புருஷமூர்த்தி நான்கு முனிவர்களைத் தந்தருள்புரிந்தவர்.

ஐவகையிசைக்கருவி—தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி. தோற்கருவி முரசுமுதலியன. துளைக்கருவி புல்லாங்குழல்முதலியன. நரம்புக்கவி யாழ்முதலியன. கஞ்சக்கருவி தாளம்முதலியன. கண்டக்கருவி மிடற்றூல் பாடுதல். ()

ஐவகைவேள்வி—தேவயாகம், பிரமயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மாநுடயாகம். தேவயாகம்-தேவர்களைப் பூசித்தல், பிதிர்யாகம்-பிதுர்களைப் பூசித்தல், பூதயாகம்-பூதங்கட்குப் பலிபோடுதல், மாநுஷயாகம்-அதிதி பூசைசெய்தல், பிரமயாகம்-வேதம் ஓதுதல்.

ஐவகைத்தாயர்—பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய். (சச)

ஐவகைத்தொழில்—எண்ணல், எழுதல், இலைகிள்ளல், மலர்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

மெய்யின் ஐவகையவத்தை—கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, மூச்சீடு, நட்டுவிழுதல். (சரு)

காடுபடுதிரவியம் ஐந்து—அரக்கு, இறூல், தேன், மயிற்பீலி, நாவி.

கடல்படுதிரவியம் ஐந்து-உப்பு, பவளம், முத்து, சங்கு, ஓர்க்கோலை.

நாடுபடுதிரவியம் ஐந்து—செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, வாழை, கரும்பு.

நகர்படுதிரவியம் ஐந்து—கண்ணாடி, பித்தன், கருங்குரங்கு, யானை, அரசன். (சஎ)

மலைபடுதிரவியம் ஐந்து—மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமப்பூ.

ஐம்புலன்—சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். ஊறு-ஸ்பரிசம் தொட்டறிதல். (சஅ)

மன்மதபாணம் ஐந்து—தாமரைப்பூ, மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, நீலோற்பலப்பூ. உன்மத்தம், மதனம், மோகம், சந்தாபம், வசீகரணம் என்பன முறையே இவற்றின் பெயர்களாம். (சகூ)

ரு: யங்கணையவத்தை.

(சுப்பிரயோகத்தின்றன்மை, விப்பிரயோகத்தின்றன்மை.)

பெருகுசுப்பிரயோகம்பின்பிறந்தவிப்பிரயோகம்மேல்
மருவியசோகமோகமரணமுமுறையேசெய்யும்
பெருகுசுப்பிரயோகந்தான்பேச்சொடுசினைவுமாகும்
விரவுவிப்பிரயோகந்தான்வெயிதுயிர்த்திரங்கலாமே. (ருo)

(சோகத்தின்றன்மை, மோகத்தின்றன்மை, மரணத்தின்றன்மை.)

சோகமேவெதுப்பினேடுதுய்ப்பவைதெவிட்டல்செய்யும்
மோகமேயழுதலோடுமொழிபலபிதற்றலென்ப
வேகமாமரணந்தானேமிகுமயக்கோடயர்ப்பாம்
பாகடர்சொல்லினல்லாய்பசருநூலியல்பிதாமே. (ருக)

சு: அந்தணர்தொழில், அரசர்தொழில்.

ஓதலேயோதுவித்தலுடன்வேட்டல்வேட்பித்திட்டல்
ஈதலேயேற்றலாறுமேற்குமந்தணர்தொழிற்பேர்
ஓதலேவேட்டலீதலுலகோம்பல்படைபயிற்றல்
மேதகுபோர்செய்திட்டல்வேந்தர்செய்தொழில்களாமே. (ருஉ)

சு: அரசர்க்கங்கம், வைசியர்தொழில்.

படைகுடிகூழமைச்சுப்பற்றியநட்பினேடு
நெடுமதிலரசியற்குநிகழ்த்தியவாறுபேதம்
மிடையறவோதல்வேட்டல்வேளாண்மைவாணிகத்தி
னுடனிரைகாத்தலேரையுழலாறும்வசியர்க்காமே. (ருந)

சு: சூத்திரர், தொழில்.

வசியர்தந்தொழில்களாறுள்வகுத்தமுத்தொழில்களான
பசுவோம்பல்பொருளையீட்டல்பயிரிடல்புராணமாதி
நசையுறவோதலீதனண்ணுமந்தணர்முன்னோர்க்கு
வசைதவிரநுகூலம்மாம்வகைத்தொழில்சூத்திரர்க்காம். (ருச)

சு: திகிரிமன்னர்.

அரிச்சந்த்ரனளனேவெற்றியாமுசுகுந்தனேடு
பொருப்புறப்புகழைவைத்தபுருகுச்சன்புரூரவாவே
விரித்தபூந்தாமக்கார்த்தவீரியனென்றின்னோரே
தெரித்துமுன்னெடுத்துவைத்ததிகிரிமன்னவர்களாறே. (ருரு)

சு: வேதாங்கம், உட்பகை.

ஆறங்கஞ்சிக்ஷைகற்பமாம்வியாகரணமற்றும்
வீறியநிருத்தஞ்சந்தோவிசிதஞ்சோதிடமென்றாகும்
கூறிடுங்கொடியகாமங்குரோதமேயுலோபமோகம்
பாறியமதங்களேமாற்சரியமுட்பகையாறென்ப. (ருசு)

சு: தானை, படை, சுவை.

ஒத்தவில்வேல்வாள்யானையுயர்பரிதேரோடாறே
சுத்தமூலங்கான்கூலிதுணைபகைநாடென்றாறே
தித்தித்தல்புளித்தல்கூர்த்தல்சேரவேதுவர்த்தல்காழ்த்தல்
கைத்தலேயறுசுவைக்குக்காட்டியவபிதானங்கள். (ருஎ)

ஐங்கணையவத்தை—முறையே சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பனவாம்.

சுப்பிரயோகத்தின்றன்மை—பேச்சும் நினைவும். விப்பிரயோகத்தின்றன்மை—மூச்செறிந்து வருந்துதல். (ருO)

சோகத்தின்றன்மை—வெதுப்பும் உணவு வெறுத்தலும்.

மோகத்தின்றன்மை—அழுதலும் பிதற்றலும்.

மரணத்தின்றன்மை—மயக்கமும் அயர்ச்சியும். (ருக)

அந்தணர்க்குரிய அறுதொழில்—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். (வேட்டல்-யாகஞ்செய்தல்.)

அரசர்க்குரிய அறுதொழில்—ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைக்கலம்பயிலல், போர்செய்திட்டல். (ருஉ)

அரசர்க்குரிய ஆறங்கம்—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

வைசியர்க்குரிய அறுதொழில்—ஓதல், வேட்டல், வேளாண்மை, வாணிகம், பசுக்காத்தல், உழவு. (ருங)

சூத்திரர்க்குரிய அறுதொழில்—பசுக்காத்தல், பொருளீட்டல், பயிரிடல், புராணாதிகளையோதல், ஈதல், அந்தணர் முதலியோர்க்கு அநுகூலமாகிய தொழில் செய்தல். (ருச)

ஆறுசக்கிரவர்த்திகள்—அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன், புரூரவா, கார்த்தவீரியன். (ருரு)

வேதாங்கம் ஆறு—சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதம், சோதிடம். சிக்ஷை யாளினி முனிவர் இயற்றியது; இதன்கண் வேதசப்தங்கட்கு அக்ஷரத்தானம், உதாத்த அனுதாத்த ஸ்வரித ஞானங்கள் கூறப்பட்டுள்ளது. வியாகரணம் யாளினி இயற்றியது; காத்யாயனரும் பதஞ்சலியும் வியாக்கியானம் செய்தனர். இதில் வேதசப்தங்களின் பிரகிருதி பிரத்யயஞானம் கூறப்பட்டுளது. சந்தம் பிங்கலர் கர்த்தா; இதில் வேதத்திற் கூறப்பட்ட காயத்திரி முதலியவற்றின் சந்தங்களின் ஞானம் உணர்த்தப்பட் டிருக்கிறது. நிருக்தம் இதற்கு யாஸ்கமகருஷி கர்த்தா; இதில் வேதமந்திரங்களின் பொருளை அறிய அதன்கண்வந்துள்ள பதங்களின் பொருளை உணர்த்துவது. சோதிஷம் ஆதித்யாதியர் கர்த்தா; இது வைதிககர்மங்களைத் தொடங்குங் காலஞானத்தையும் அதன் பயனையுங்கூறும். கற்பம் இதற்கு ஆச்வலாயனர், காத்யாயனர், ஆபஸ்தம்பர், போதாயனர், வைகாசனர், திராஷ்யாயனர், பாரத்வாஜர், சத்தியாஷ்டர், ஹிரண்யகேசி முதலியவர் கர்த்தாக்கள்; இதுயாககர்மங்களை அனுஷ்டிக்கும் வகையைக் கூறுவது

ஆறு உட்பகை—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம். (ருசா)

அறுவகைத்தானை—வில், வேல், வாள், யானை, குதிரை, தேர்.

அறுவகைப்படை—மூலப்படை, காட்டுப்படை, கூலிப்படை, துணைப்படை, பகைப்படை, நாட்டுப்படை.

அறுவகைச்சுவை—தித்தித்தல், புளித்தல், கூர்த்தல், துவர்த்தல், காழ்த்தல், கைத்தல். [கூர்த்தல்-உவர்த்தல். காழ்த்தல்-உரைத்தல்.]

௬: உட்சமயம்.

அரியவுட்சமயமாறேயாவனசைவந்தூய்மை
பெருகுபாசுபதத்தோடுபிறங்குமாவிரதமற்றும்
கருதியவீடுபேறுகாட்டுகாளாமுகந்தான்
மருவியவாமமிக்கவைரவமென்னலாமே. (௫அ)

௬: புறச்சமயம்.

அறுபுறச்சமயந்தானேயறையுலோகாயதம்பின்
உறைதருபௌத்தமேயாருகதமீமாஞ்சமோடு
குறிபெறுமாயாவாதங்கூறியபாஞ்சராத்ரம்
நெறிபெறுமிவையேயென்னநிகழ்த்துவர் நூல்வல்லோரே. (௫௯)

௬: நாட்டமைதி, அரசியல்.

செல்வமேவிளைவுமிக்கசெழுவளஞ்செங்கோலுண்மை
ஒல்குநோய்குறும்பிலாமையுற்றநாட்டமைதியாரும்
நல்லறமறந்தான்மேலேநாட்டியவறம்பொருட்கள்
ஒல்லுமின்பங்களாறுமோங்கரசியலின்பேதம். (௬0)

(அறநிலையறம், மறநிலையறம்.)

தந்தமின்வருணக்காப்பிற்றரும்பொருளாலேபேணல்
அந்தவாறியற்கைதம்முளறநிலையறமென்றாகும்
முந்திகலறுத்தல்செஞ்சோற்றுதவியில்லோர்ச்செகுத்தல்
வந்தவாணிரையைமீட்டன்மறநிலையறமென்றாமே. (௬௧)

(அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள்.)

நெறிவழிநின்றுதத்தநிலையினாலுழந்துழந்து
பெறுபொருளறநிலைக்குப்பேசியமுறைமையாகும்
செறுநர்தம்பொருளுமற்றத்தெண்டத்திற்பொருளுஞ்சூதின்
மறுகியபொருளுமம்மறநிலைப்பொருளின்பேரே. (௬௨)

(அறநிலையின்பம், மறநிலையின்பம்.)

கூறுமோர்பருவநல்லகுலமொத்ததாகத்தீவேட்
டாறியவில்விருத்தலறநிலையின்பமாகும்
ஏறுதான்றழுவல்வில்லாவிலக்கமெய்திடுதலெல்லாம்
மாறுடைநெறியிற்கூட்டமறநிலையின்பமாமே. (௬௩)

௬: கருமபூமிக்குரிமை.

வரைவொடுதொழிலேவித்தைவாணிகமுழவேசிற்பம்
உரைசெயும்போகபூமியொழிவினிலாதிகாலம்
விரைசெறிபிண்டிவேந்தன்விதித்தலினஃதேயம்ம
கருமபூமியென்னும்பேர்கண்டதொன்றுண்டுநூலின். (௬௪)

(போகபூமியியல்பு.)

விதியுளிபதினான்குமேவியபன்னீராண்டுப்
பதியொடுமனைவிதெய்வப்பத்துப்பூந்தருவும்வேண்டும்
புதியபோகங்கொடுப்பப்புணர்ந்துதாம்பிரியாராகி
மதியொடுமறுவுமென்னவாழ்வதுபோகபூமி. (௬௫)

அறுவகையகச்சமயம்—சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம். (ருஅ)

அறுவகைப்புறச்சமயம்—உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம். (மாயாவாதம்-வாய்வேதாந்தம் கூறுதல். உலோகாயதம்-உலகத்தில் அநுபவிக்கும் இன்பமே சுவர்க்கம், துன்பமே நரகம்; கடவுள் என்பது இல்லை என்பவர். பௌத்தம்-புத்தரைக் கடவுளாகக் கொள்பவர். ஆருகதம்-அருகனை வழிபடுவோர். பாஞ்சராத்திரம்-ஐந்து இராத்திரியில் செய்யப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஆகமம். (ருகூ)

நாட்டிற்குரிய அறுவகைச்சிறப்பு—செல்வம், விளைவு, பல்வளம், செங்கோன்மை, நோயின்மை, குறும்பின்மை.

அறுவகையரசியல்—அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம். (சுo)

அறநிலையறம்—நான்கு வருணத்தாரும் தத்தம் வருணாச்சிரமங்களிற் பிறழாது தங்களைக்காக்குங் காவலின்பொருட்டுக் கொடுக்கும்பொருள்கொண்டு அவரைப் பாதுகாத்தல்.

மறநிலையறம்—பகைத்திறந்தெறுதலும், செஞ்சோற்றுதவி யில்லோரைச் செகுத்தலும், நிரைமீட்டலுமாம். (சுக)

அறநிலைப்பொருள்—நீதிவழிநின்று தத்தம் நிலையினால் முயன்று பெறுபொருள்.

மறநிலைப்பொருள்—பகைஞர்பொருளும், சண்டத்தில் வந்தபொருளும், சூதில்வென்ற பொருளுமாம். (சுஉ)

அறநிலையின்பம்—ஒத்தபருவமும் ஒத்த குலமுமுடைய கன்னிகையை அக்கினிமுன்பாக விவாகஞ்செய்து இல்லிலிருந் தநுபவிக்குமின்பம்.

மறநிலையின்பம்—ஏறுதழுவலும், வில்லால் இலக்கமெய்தலும் முதலியவற்றாற் கன்னிகையை விவாகஞ் செய்தநுபவிக்குமின்பம் ()

கருமபூமிக்குரிய அறுவகைத்தொழில்—வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம். (சுந)

போகபூமியாவது—பதினாறுவயதுடைய நாயகனும் பன்னிரண்டுவயதுடைய நாயகியும் பத்துக்கற்பகங்களும் வேண்டிய புதியபோகங்களைக் கொடுப்பப்பெற்றுப் புணர்ந்தின்ப மநுபவித்துப் பிரியாது வாழும் பூமி. சிலர் பதினாறெறனு மியாயுட் பாவையும் நாலைந்தென்றுதியாயுட்கொள் காளையும் மெய்யொவ்வுதல் என்றார். (சுரு)

சு: போகபூமி.

வருமாதியரிவஞ்சம்பார்மதித்தநல்லரிவஞ்சம்பைம்
பொருளாரேமதவஞ்சம்மேற்புகழ்பெறுமேமவஞ்சம்
ஒருதேவகுருவத்தோடேயுத்தரகுருவமென்ன
வருபோகபூமியாறுவகைப்படுமியல்பதாமே. (௬௬)

எ: மாதர்கள், தாது.

வருசலபிராமிமற்றைமகேச்வரியொடுகௌமாரி
மருவூர்வைணவிவராகிமாகேந்திரியொடுசாமுண்டி
இருமையேழ்திருக்கள்பேராமிரதமேயுதிரமென்பு
பரவுதோலிறைச்சிமூளைபற்றுசுக்கிலந்தாதேழே. (௬௭)

எ: செங்கோல்வழக்கம், பிறப்பு.

அறமொடுபொருளேயின்பமன்பொடுபுகழ்மதிப்பு
மறுமையென்றேழுஞ்செங்கோன்மன்னவர்பேறேயாகும்
அறிவுளதேவர்மக்களறிவின்மீன்விலங்குசெந்து
பறவைதாவரங்களென்பபகருமேழ்பிறப்பின்பேரே. (௬௮)

எ: பிறப்பு.

ஊர்வனபதினொன்றாகுமொன்பான்மாநுடர்தம்பேதம்
நீரினில்விலங்குபுள்ளுப்பப்பத்தாநெடியதேவர்
சாருமீரேழ்நாலைந்தேதாவரயோனிபேதம்
ஆருமெண்பானென்கோடேயமைத்தநூறாயிரங்கள். (௬௯)

எ: தீவு, சமுத்திரம்.

இவர்தருநாவலோடேயிறலியேகுசைகிரவுஞ்சம்
புவிபுகழிலவுதெங்குபுட்கரந்தீவேழின்பேர்
உவர்கரும்பின்சாறோடேயொண்மதுநெய்சிறந்த
நவமதாந்தயிர்பாலப்புநாட்டியகடலேழின்பேர். (௭௦)

எ: மேலுலகம்.

நவமாம்பூலோகமற்றுநாட்டியபுவலோகந்தான்
சுவலோகமகலோகம்மேசொற்றிடுஞ்சனலோகம்மே
தவலோகமதனினோடுசத்தியலோகமின்ன
உவமானமில்லாமேலேழுலகெனுமறிவினாலே. (௭௧)

எ: கீழுலகம்.

அதலமேவிதலமற்றுமடைவானசுதலத்தோடும்
இதமுறுதராதலம்மேரசாதலமகாதலந்தான்
புதியபாதலத்தினோடுபோற்றுங்கீழேழுலோகம்
உதவியவுலகநூலீரேழெனுமுலகுதாமே. (௭௨)

எ: நிரயவட்டம்.

பெருகியகளிற்றின்வட்டம்பெருமணல்வட்டம்பொங்கும்
எரிபரல்வட்டமற்றுமெறியரிபடையின்வட்டம்
பொருவறவிரண்டுமொழ்கப்போர்த்திடும்புகையின்வட்டம்
இருள்வட்டம்பெருங்கீழ்வட்டமென்பவேழ்நிரயவட்டம். (௭௩)

அறுவகைப்போகபூமி—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், ஏமதவஞ்சம் ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம். (௬௬)

எழுவகைமாதர்கள்—அபிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மாகேந்திரி, மாகாளி.

எழுவகைத்தாது—இரதம், உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம். (௬௭)

செங்கோல் மன்னவர்க்குறிய எழுவகைப்பேறு—அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, மறுமை.

எழுவகைப்பிறப்பு—தேவர், மனிதர், நீர்வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறவை, தாவரம். (௬௮)

எழுவகைப்பிறப்பில் எண்பத்துநான்கு நூறுயிர யோனிபேதம்—ஊர்வன பதினொரு நூறுயிரயோனிபேதம், மனிதர் ஒன்பது நூறுயிரயோனிபேதம், நீர்வாழ்வன பத்து நூறுயிர யோனிபேதம், விலங்கு பத்துநூறுயிர யோனிபேதம், பறவை பத்து நூறுயிர யோனிபேதம், தேவர் பதினுன்கு நூறுயிர யோனிபேதம், தாவரம் இருபது நூறுயிர யோனிபேதம். (௬௯)

எழுதீவின்பெயர்—நாவலந்தீவு, இறலித்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, இலவந்தீவு, தெங்கந்தீவு, புட்கரதீவு.

எழுகடல்—உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல் மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், (சுத்தநீர்க்கடல்.) வெள்ளைநீர்க்கடல். (எ0)

எழுமேலுலகம்—பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம். (எக)

எழுகீழுலகம்—அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம். (எஉ)

எழுகிரயவட்டம்—களிற்றுவட்டம், மணல்வட்டம், எரிபரல்வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், இருள்வட்டம், பெருங்கீழ்வட்டம். (எ௩)

எ. நரகம், நதி.

குழைவுறுகூடசாலமிரௌரவங்கும்பிபாகம்
விழுபூதியள்ளல்செந்துவிதித்தமாபூதியாமே
வழிகங்கையமுனையேநன்மதைசரஸ்வதிகாவேரி
விழுமியகுமரிகோதாவரியெழுநதியின்பேரே. (எச)

எ: முனிவர். நாட்டுக்குற்றம்.

புலிபுகழ்கும்பயோனிபுலத்தியனங்கிராவே
கவுதமன்வசிட்டன்மற்றைக்காசிபனொடுமார்க்கண்டன்
இவரெழுமுனிவர்விட்டிறெட்டியரேனங்கள்வர்
அவமழைநால்வாய்கிள்ளையாமிவைநாட்டேழ்குற்றம். (எரு)

எ: முகில்.

பொழியுமாவர்த்தமெங்கும்போர்த்தபுட்கலஞ்சங்காரம்
கழியுமாசவனமேநீர்க்காரியேருதிசொற்காரி
மொழிசிலாவருடமென்பமுகில்களோரேழினுமம்
அழிவுகாலத்திற்றோன்றியடர்வனபடர்வவாமே. (எசு)

அ: திசையானை.

களிற்றயிராவதஞ்சீர்காட்டுபுண்டரீகந்தானங்
குளிர்த்தவாமனம்பொன்னோடைக்குமுதமஞ்சனம்வெம்போரை
விளைத்திடும்புட்பதந்தமேவியசார்வபௌமம்
பிளிற்றுசுப்பிரதீகந்தான்பெருத்தவெண்டிசையானைப்பேர். (எஎ)

அ. மலை.

மன்னியவிமயத்தோடுமந்தரங்கைலைவிந்தம்
கொன்வளர்நிடதமேமகூடமேநீலவெற்புத்
துன்னியகந்தமாதனத்தொடுசூழ்வெற்பெட்டாம்
இன்னவையுலகநூலினியற்கையேயென்றுகாண்மின். (எஅ)

அ. நாகம்.

மன்னுவாசுகியனந்தன்மருவியதக்கன்சங்கன்
பன்னியகுளிகனோடுபதுமன்மாபதுமன்மற்றைக்
கொன்னெயிற்றழல்விழிக்கார்க்கோடகனென்றவெட்டும்
முன்னியகடவுட்பாம்பின்மொழியபிதானமாமே. (எகூ)

அ: திக்குப்பாலகர், அவர்சார்திசை.

திண்டிறன்மகவானங்கிசெறியமனிருதியோடு
கொண்டிடும்வருணன்வாயுக்குபேரனீசானனென்ப
எண்டிசையுலோகபாலரிவர்பேர்கீட்டிசைதொட்டெண்ணும்
கண்டகீழ்பால்வடக்குக்கதிரொடுதிங்கட்காமே. (அ0)

அ: திக்குப்பாலகர்குறி, மூர்த்தம்.

கொடிபுகைசியஞ்சீறிக்குரைத்துவள்ளென்னுஞாளி
இடபமேகழுதையானையேகுகாகந்திக்கங்கம்
படிநீர்தீவளியாகாயம்பரிதியேவிரவுதிங்கள்
அடல்புனையியமானன்மற்றட்டமூர்த்தங்களாமே. (அக)

ஏழுநரகம்—கூடசாலம், இரௌரவம், கும்பிபாகம், பூதி, அள்ளல், செந்து, மகாபூதி.
ஏழுநதி—கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, காவேரி, குமரி, கோதாவரி. (௭௪)

ஏழுமுனிவர்—அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன்.
நாட்டில்வரும் ஏழுகுற்றம்—விட்டில், தொட்டியர், பன்றி, கள்வர், அவமழை, யானை, கிளி. (௭௫)

ஏழுமுகில்—ஆவர்த்தம், புட்கலம், சங்காரம், ஆசவனம், நீர்க்காரி, சொற்காரி, சிலாவருடம். (௭௬)

எண்டிசையானை—அயிராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம். (௭௭)

எட்டுமலை—இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம். (௭௮)

எட்டுப்பெரியநாகம்—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன். (௭௯)

எட்டுத்திக்குப்பாலகர்—இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். இவர் திசைகள் முறையே கிழக்கு தென்கிழக்கு தெற்கு முதலியன.
சூரியசந்திரர் சார்திசைகள்—முறையே கிழக்கும் வடக்குமாம். (௮௦)

எட்டுத்திக்குக்குறி—கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.
அட்டமூர்த்தங்கள்—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா. இவ்வெட்டும் சிவபெருமானுக்குத் திருமேனியெனப்படும். இவையெட்டும் அன்றி உலகமென்பது ஒன்றின்மையின் சிவபெருமான் எல்லாமாய் உள்ளான் என்பது விளங்கும். இவ்வுண்மை, நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான், உலகேழெனத் திசைபத்தெனத்தா னொருவனுமே, பலவாகிநின்றவா தோணோக்கமாடாமோ என்னுந் திருவாசகச் செய்யுளால் உணர்க. (௮௧)

அ. சித்தி.

மன்னியவணிமாமற்றைமகிமாவேகரிமாவோடு
பின்னுறலகிமாபிராத்திபெறும்பிராகாமியங்கள்
முன்னுறுமீசத்துவம்பின்முற்றியவசித்துவந்தான்
உன்னியநூல்களோதுமோரிருநான்குசித்தி. (அஉ)

அ. யோக அங்கம்.

இயமமேநியமமுந்தியேற்றவாசனத்திேனாடு
நயனுறுபிராணாயாமநாட்டியபிரத்தியாகாரம்
சயமுறுதியானத்தோடுதாரணைசமாதியெட்டும்
வியனுறும்யோகமென்றுவிதித்தனர்மதித்தநூலோர். (அந)

அ. தரும அங்கம்.

அறமையப்படாமைமற்றையவாவின்மையுவர்ப்பொன்றின்மை
நெறிகெழுமயக்கமின்மைசினறவப்பழியைநீக்கல்
உறுதியினிறுத்தல்பேரன்புடைமையேயறம்விளக்கல்
இறைவனதறத்துட்கூறுமெட்டுறுப்பிவைகளாமே. (அச)

அ. அருள் குணம்.

கடையிலாஞானத்தோடுகாட்சிவீரியமேயின்பம்
மிடையுறுநாமமின்மைவிதித்தகோத்திரங்களின்மை
அடைவிலாவாயுவின்மையந்தராயங்களின்மை
உடையவனிறைவனென்னவுரைக்குமாருகதநூலே. (அரு)

அ. சிவன்குணம்.

இன்னவையருகநூலினிசைக்குமெண்குணங்கண்மற்றும்
தன்வயந்தூயதேகந்தகுமியல்புணர்வுமேலாப்
பன்னுமுற்றுணர்விேனாடுபாசங்களியல்பினீங்கல்
முன்னுபேரருளேமற்றைமுடிவிலாவாற்றல்பின்னும். (அசு)

(இதுவுமது.)

வரம்பிலாவின்பமென்றேவாய்த்திடுங்குணங்களெட்டும்
தரம்பெறுசைவநூலிற்சாற்றியதொகையாமென்ப
திருந்துமிக்குணங்கடானேசேர்ந்தவனியாவனென்னிற்
பொருந்தியவுலகமெல்லாம்புரந்திடுங்கடவுளாமே. (அஎ)

அ. இறைவன் குற்றம்.

மன்னியவறிவுகாட்சிமறைத்தல்வேதநீயத்தோடு
துன்னுமோகநீயமாயுத்தொடர்நாமகோத்திரங்கள்
முன்னுறுமந்தராயமொழிந்தவெண்குற்றமாகும்
இன்னவைதீர்ந்தோன்யாவன்யாவர்க்குமிறைவனாமே. (அஅ)

அ. வைசியர் பண்பு.

பெறுவதுதெரிதலீட்டல்பேணிமற்றவைபகுத்தல்
இறுவதஞ்சாமையென்றுமிடனறிந்தொழுகல்வந்தே
உறுபெருந்தனிமையாற்றலுடன்முனிவிலனேயாதல்
மறுவறுபொழுதிற்கூடல்வசியர்தங்குணங்களெட்டே. (அகூ)

எண்சித்தி—அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். முறையே அணு, பெரிது, பாரம், இலேசு, நினைத்தவிடம்செல்லுதல், விரும்பினதைப்பெறல், சிருஷ்டி முதலிய செய்தல் எதையும் தன்வசப்படுத்தல். (அஉ)

எட்டுயோகாங்கம்—இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி. இயமம் கொலை, களவு செய்யாமை, மெய்கூறல், கள்ளுண்ணாமை, பிறர்பொருள் விரும்பாமை, இந்திரிய மடக்கல் முதலியன. நியமம் தத்துவ நூலாராய்தல், தவம், தூய்மை, தெய்வவழிபாடு, மனமுவப்பு முதலியன. ஆதனம் சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் முதலியன. பிராணாயாமம் பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ்செய்தல். தாரணை ஆதாரத்தனங்களாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறுதாரங்களில் அவற்றுக்குரிய தேவதைகளைக் குருமுகமாக அறிந்து மனதையும் வாயுவையும் அங்கங்கே நிறுத்தித் தரிசித்து ஆனந்தமுறுதல். தியானம் ஐம்புலனும் அடக்கியோகஞ்செய்தல். சமாதி கரணங்களிறந்து மனோலயமான சாக்கிராதீதத்தில் தன்னிலைகண்டின்புறுதல். (அங)

எட்டுத்தருமாங்கம்—அறமையப்படாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழிந்தோரை நிலைநிறுத்தல், அறுசமயத்தவர்க்கன்பு, அறம்விளக்கல். (அச)

அருகனுக்குரிய எட்டுகுணம்—கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அந்தராயங்களின்மை. (அரு)

சிவனுக்குரிய எண்குணம்—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களி னீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலாற்றலுடைமை. இவைகளின் விரிவை அகராதிகளிற் காண்க. சிவபெருமான் எண்குணம் உடையராதலை 'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான், தாளை வணங்காத் தலை' என்னும் திருக்குறளாலும் உணர்க. (அசு)

வரம்பிலின்பமுடைமை. (அஎ)

அருகனுக்காகாவென விலக்கப்பட்ட எட்டுச்குற்றம்—ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம். (அஅ)

வைசியர்க்குரிய எண்வகைக் குணம்—உறுவதுதெரிதல், ஈட்டல், கொடுத்தல், இறுவதஞ்சாமை, இடனறிந்தொழுகல், தனிமையாற்றல், முனிவிலனாதல், பொழுதொடுபுணர்தல். (அகூ)

அ. கணிதம், மங்கலம்.

குணகாரம்பரியச்சந்தான்குறித்தபாற்கரமேமூலம்
தணவாமானதமேகன்மஞ்சலிதியேதருதமெட்டும்
கணியார்தங்கணிதந்தீபங்கவரிகண்ணாடிதோட்டி
புணர்மீனைமுரசுகும்பம்பொலிகொடிசுபமோரெட்டே. (௩௦)

அ. மெய்ப்பரிசம், நாட்டின்கேடு.

தட்டலேபற்றலோடுதடவலேதீண்டல்குத்தல்
வெட்டலேகட்டலூன்றன்மெய்ப்பரிசங்களெட்டாம்
விட்டில்தன்னரசுநால்வாய்மிகுமழைமிகுகாற்றோடே
நட்டம்வேற்றரசுகிள்ளைநாடுறுங்கேடெட்டென்ப. (௩௧)

அ. மணம்.

பிரமமேபிரசாபத்தியம்பெருகுமாரிடமேதெய்வம்
கருதுகாந்தருவத்தோடேகாட்டியவசுரமற்றும்
பரவியவிராக்கதங்கள்பைசாசமிருநான்கென்ப
மருவியவுலகியற்கைவகுத்திடுமணங்களின்பேர். (௩௨)

அ. மாலை.

நிரைகவர்ந்திடுதல்வெட்சிநிரைமீட்டல்கரந்தையென்ப
வெருவார்மேற்சேறல்வஞ்சிமீட்டெதிரூன்றல்காஞ்சி
வருநொச்சிபுரிசைகாத்தல்வளைத்திடலுழிஞையாகும்
பொருவதுதும்பையென்பபோர்வெல்லல்வாகையாமே. (௩௩)

அ. இராசசகாயர்.

கரணத்திற்றிரள்கள்வாய்ந்தகடைகாப்போர்நகரிமாக்கள்
தருபடைத்தலைவர்மற்றுந்தன்கிளைச்சுற்றம்யானை
புரவியூர்வோரேயென்றும்போற்றுகாவிதியரென்றும்
விரவியவெண்பேராயம்வேந்தருக்கமைத்ததாமே. (௩௪)

அ. உடற்குறை, செய்யுளசைக்கணம்.

குறளொடுசெவிடுமூங்கைகூன்மருள்குருடுமாவே
உறுமுறுப்பில்லாப்பிண்டமோதியவெண்மெய்யெச்சம்
நிறையுநீர்நிலனேதேயுநிகழ்சுடர்மதியேவானம்
பெறுமியமானன்வாயுப்பேசியகணங்களெட்டே. (௩௫)

(நற்கணம், துர்க்கணம்.)

நிலனொடுநீர்வெண்டிங்களியமானன்வெய்யோன்
உலவுதீவாயுவிண்ணென்றோதியகணங்களெட்டில்
நலமுறுகவிதைமுன்னர்நாட்டியநான்குநன்றாம்
கலகமாம்பின்னர்நான்குகணங்களுங்காணுங்காலே. (௩௬)

அட்டகணிதம்—குணகாரம், பரியச்சம், பாற்கரம், மூலம், மானதம்: கன்மம், சலிதி, தருதம். (பிங்கல நிகண்டைப்பார்க்க)

அட்டமங்கலம்—விளக்கு, கவரி, கண்ணாடி, தோட்டி, இணைக்கயல், முரசு, நிறைகுடம், கொடி. (கூ0)

எண்வகைமெய்ப்பரிசம்—தட்டல், பற்றல், தடவல், தீண்டல், குத்தல், வெட்டல், கட்டல், ஊன்றல்.

நாட்டில்வரும் எண்விதக்கேடு—விட்டில், தன்னரசு, யானை, மிகுமழை, மிகுகாற்று, நட்டம், வேற்றரசு, கிளி. (கூக)

எண்மணம்—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம். பிரமமாவது ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியங் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்து இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது. பிரசாபத்தியமாவது மகட்கோடற்கு உரிய கோத்திரத்தார் கொடுத்த பரிசத்து இரட்டிதம் மகட்கு ஈந்து கொடுப்பது. ஆரிடமாவது தக்கான் ஒருவர்க்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நிறீஇப் பொன் அணிந்து நீரும் இவைபோற் பொலிந்து வாழ்வீரென நீரிற்கொடுப்பது. தெய்வதமாவது பெருவேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஒருவற்கு அவ்வேள்வித் தீமுன்னர்த்தக்கணையாகக் கொடுப்பது. அசுரமாவது கொல்லேறு கோடல், திரிபன்றியெய்தல் வில்லேற்றுதல் முதலியனசெய்து கோடல். இராக்கதம் தலைமகள் தன்னினும் தமரினும்பெறாது வலிதிற் கொள்வது. பைசாசம் மூத்தோர் களித்தோர்துயின்றோர் புணர்ச்சியும் இழிந்தோளை மணஞ்செய்தலும் ஆடைமாறுதலும் பிறவும். கந்தருவம் கந்தருவகுமாரருங் கன்னியருந் தம்முன் எதிர்ப்பட்டுப் புணர்வது. (கூஉ)

எண்வகைமாலை—வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை. இவை முறையே நிரைகவர்தல், நிரைமீட்டல், பகைமேற்சேறல், எதிரூன்றல், மதில்காத்தல், அரண்வளைத்தல், அதிரப்பொருதல், போர்வெல்லுதல் என்னும் வீரச்செயல்களாம். (கூங)

அரசர்க்குரிய எண்பேராயம்-கருமாதிகாரர், கடைகாப்பாளர், நகரிமாக்கள், படைத்தலைவர், சுற்றத்தார், யானைவீரர், குதிரைவீரர், காவிதியர். ஆயம்-கூட்டம். காவிதியர்-காவிதிப்பட்டம் பெற்றஅமைச்சர்.

எண்வகை உடற்குறை—குறள், செவிடு, மூங்கை, கூன், மருள், குருடு, மா, உறுப்பிலாப்பிண்டம். [மருள்-ஆண்டு ஆணோ பெண்ணோ என மயங்கல்] மா-விலங்குறுப்பு விரவப்பெற்றவடிவம். உறுப்பில் பிண்டம்-உறுப்புக்குறைந்தவடிவம். குறள்-பூதம், குறுகியவடிவம்.

செய்யுளுக்குரிய எண்வகை அசை—நீர்க்கணம், நிலக்கணம், தேயுகணம், சூரியகணம், சந்திரகணம், ஆகாயகணம், இயமானகணம், வாயுகணம். (இயமானன்-ஆன்மா.) (கூ௫)

மேற்சொல்லிய எட்டினுள் நிலக்கணம், நீர்க்கணம், சந்திரகணம், இயமானகணம் என்னும் நான்கும், நூலிலே முதற்செய்யுண் முதலில் வருதல் நன்மையாம். மற்றைய நான்கும் வருதல் தீதாம். ()

(செய்யுளசைக் கணப்பொருத்தம்.)

நிரையதுமூன்றுதானேநிலக்கணநேர்முன்னாகி
நிரையிணைபின்னராயினீரேநேரிணைபின்னாகி
நிரையதுமுன்னராயினெடியவெண்டிங்களென்ப
புரையறநேர்மூன்றாகிற்பொருந்தியவியமானன்றான். (௯௭)

(இதுவுமது.)

நிரைநடுவாகமற்றைநேரிருபாலும்வெய்யோன்
நிரையிருபாலுநிற்கநேர்நடுத்தீயென்றாகும்
நிரையிறுவாகமற்றுநேரிணைமுன்னேவாயு
நிரையிணைமுன்னராகிநேரிறினீராகாயம். (௯௮)

௧. நீர்த்தவர்க்குச்செய் புண்ணியம்.

எதிர்கொளல்பணிதலோடிருக்கைகால்கழுவலாறும்
புதுவிரைநறும்பூத்தூபம்புனைவிளக்கடைவேயேத்தல்
விதியின்வாளரவுதோலுஃவிடமுநீத்தென்னநீத்த
அதிகருக்கமுதமேந்தலவைநவபுண்ணியந்தான். (௯௯)

௧. பூமிபாககாண்டம்.

வடபாலேதென்பால்கீழ்பால்வகுத்தமேல்பால்விதேசம்
வடபாலேதென்பான்மீதுவைத்திடுமிரேபதங்கள்
வடபாலேதென்பான்மீதுவைத்திடுபாதத்தோடு
வடிவாமத்திமகண்டங்கள்வருநவகண்டமாமே. (௧௦௦)

௧. தாரணை.

வைத்தநாமங்கண்மாயைவச்சிரஞ்சித்திரங்கள்
சத்தமேவத்துவோடுசதுரங்கஞ்செய்யுளெட்டும்
புத்தரேகாணப்பட்டபொருட்குறைநிறைவேயென்றும்
ஒத்ததாரணைகளென்பவோதுமொன்பானுமீதே. (௧௦௧)

௧. நாளறிதல்வகை.

தனதுநாளிற்பின்னாளுஞ்சார்ந்திடுநாலுமாறும்
வினவியவெட்டொன்பானும்விருத்தமொன்றில்லைதன்னாள்
இனையமூன்றுடனைந்தாநாளேழாநாளிவைபொருந்தா
நினையுடிம்மூன்றொன்பானுமேணர்படுமூன்றுவட்டம். (௧௦௨)

௧. நடனதாளம்.

அடியினிற்சமதாளத்தோடருமமேயரிதாளம்மேற்
படிமமேதுருவதாளம்பற்றியசித்திரந்தான்
விடதாளஞ்சயமேமற்றுமேவியநிவிர்த்ததாளம்
நடையுறுபுலவரோதுநவதாளமிவைகளாமே. (௧௦௩)

௧. இரத்தினம்.

மரகதம்பவளநீலம்வச்சிரம்பதுமராகம்
விரவியதரளமேகோமேதகம்புருடராகம்
உரவியகாந்திவிட்டேயுமிழ்வயிடூரியந்தான்
பெருகியநவமணிக்குப்பெயரிவையாகுமென்ப. (௧௦௪)

நிரை நிரை நிரை நிலக்கணம். நேர் நிரை நிரை நீர்க்கணம். நிரை நேர் நேர் சந்திரகணம். நேர் நேர் நேர் இயமானகணம். (௯௭)

நேர் நிரை நேர் சூரியகணம். நிரை நேர் நிரை தேயுகணம். நேர் நேர் நிரை வாயுகணம். நிரை நிரை நேர் ஆகாயகணம். (௯அ)

பெரியோர்க்குச்செய்யும் ஒழுக்கம் என்னும் நவபுண்ணியம்—எதிர் கொளல், பணிதல், ஆசனத்திருத்துதல், கால்கழுவல், அருச்சித்தல், தூபங்காட்டல், தீபங்காட்டல், துதித்தல், உணவுகொடுத்தல். (௯௯)

நவகண்டம்—வடபால்விதேகம், தென்பால் விதேகம், கீழ்பால்விதேகம், மேல்பால் விதேகம், வடபாலிரேவதம், தென்பாலிரேவதம், வடபாற்பரதம், தென்பாற்பரதம், மத்திமகண்டம். (௧00)

நவதாரணை—நாமதாரணை, மாயாதாரணை, வச்சிரதாரணை, சித்திரதாரணை, சத்ததாரணை, வத்துதாரணை, சதுரங்கதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை. (௧0௧)

செய்யுளுக்குரிய நட்சத்திரம் ஒன்பதாகப்பிரித்தறிதல்—பாட்டுடைத்தலைவன்மீது பாடப்படும் முதற்பாவின் முதற்சீர்க்குரிய முதலெழுத்திற்கமைந்த நட்சத்திரம் அவனியற்பெயரின் முதலெழுத்திற்கமைந்த நட்சத்திரத்திற்கு அடுத்த நட்சத்திரமாகவும், நான்காம் ஆறாம் எட்டாம் ஒன்பதாம் நட்சத்திரங்களாகவும் இருத்தல் நன்று. அவனுடைய நட்சத்திரமாகவும், அதற்கு மூன்றாம் ஐந்தாம் ஏழாம் நட்சத்திரங்களாகவும் இருத்தல் தீது. அஸ்வனிமுதல் இருபத்தேழு நட்சத்திரங்களும் மும்முறை ஒன்பது ஒன்பதாகப் பிரித்து அறியப்படும். (௧0௨)

நவதாளம்—சமதாளம், அருமதாளம், அரிதாளம், படிமதாளம், துருவதாளம், சித்திரதாளம், விடதாளம், சயதாளம், நிவிர்த்ததாளம். (௧0௩)

நவரத்தினம்—மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வயிடூரியம். (௧0௪)

௯. இரசம். ௧௦. சிற்பத்தொழிற்குறுப்பு.

நல்லசிங்காரம்வீரம்நகைசாந்தங்கருணைகுற்சை
ஒல்லுமற்புதம்பயத்தோடுறுகோபமிரதமொன்பான்
கல்லுலோகம்மண்செங்கல்கண்டசர்க்கரைமெழுக்குச்
சொல்லியமரமேதந்தஞ்சுதைவண்ணந்தொழிற்சிற்பர்க்காம். (௧௦௫)

௧௦. அங்கம். துவர்.

நெடுமலையாறுநாடூர்நீண்டதார்புரவியானை
கொடிமுரசுடனேதானைகூறியதசாங்கமென்ப
படிபுனைநாவலேமுப்பழநாற்பான்மரமுத்தக்கா
சொடுமாவின்றளிர்பத்தென்பவோதியதுவரின்பேரே. (௧௦௬)

௧௦. அரிவதாரம்.

காமமீனாமைபன்றிநாரசிங்கத்தினோடு
வாமனன்பரசுராமன்வானரர்தொழுமிராமன்
பாமலிவாசுதேவன்பலதேவனுடனேகற்கி
ஆமிவைபத்துந்தானே யரியவதாரமென்ப. (௧௦௭)

௪௦. வேளாளர் தொழில்.

வருவிருந்தோம்பலாணைவழிநிற்றலொழுக்கமூக்கம்
சரிலகத்தின்மையென்றுங்கைக்கடனாற்றலன்றே
உரியதாமிறையிறுத்தலொற்றுமைகோடல்போற்றல்
விரவுமாண்வினைதொடங்கல்வேளாளர்செய்கைபத்தே. (௧௦௮)

௧௦. பெண்களான் மலருமரம்.

ஏடவிழ்மகிழ்சுவைக்கவெதிர்பாலைநண்புகூடப்
பாடலவிந்திக்கத்தேம்படிமுல்லைநகைக்கப்புன்னை
ஆடநீள்குராவணைக்கவசோகுதைத்திடவாசந்தி
பாடமாப்பார்க்க * வார்சண்பகநிழல்படத்தளிர்க்கும். (௧௦௯)

௧௦. மறைந்துகாணுங்கோள்கள்.

பரிதியிந்திரண்டுசீறும்பைந்நாகக்கோளிரண்டோ
டிருசுடர்வளைந்துசூழும்பரிவேடநெடுசவீண்டுப்
பெருகியவான்மீன்வானிற்பெருந்தூமமெதிர்ந்தவில்லுக்
கருதுமிவ்வெல்லாம்பேசிற்சரைந்துறைகோள்களாமே. (௧௧௦)

௧௦. ஆண்பிள்ளைக்கவி.

சாற்றுகாப்புச்செங்கீரைதாலேசப்பாணிமுத்தம்
போற்றுவாரானையேயம்புலிசிற்றில்சிறுபறைப்பின்
எற்றிடுஞ்சிறுதேராமிப்பருவம்பத்தையுமிசைக்கும்
தேற்றுமாண்பிள்ளைப்பாட்டாசிரியஞ்சேர்விருத்தப்பாவே. (௧௧௧)

பெண்பிள்ளைக்கவி.

அரிவையர்க்காகிலீற்றிலறைமூன்றுபருவமாக
உரியதாங்கழங்கம்மானையூசல்முன்னேழினோடு
வருமூன்றேயாதிமூவேழ்மதிகாருற்றித்தமாதத்
திருபாலாரையுங்கேட்பித்தலினிதைந்தேழாண்டுதானே. (௧௧௨)

---

* பாடவேமராப்பார்க்கச் சண்பக என்றும் பாடம்.

௯வரசம்—சிங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, குற்சை, அற்புதம், பயம், கோபம் [சிங்காரம்-இன்பம். குற்சை - இழிபு.]

பத்துவகைச்சிற்பத்தொழிலுறுப்பு—கல், உலோகம், மண், செங்கல், கண்டசர்க்கரை, மெழுகு, மரம், தந்தம், சுதை, வண்ணம். (௧௦௫)

தசாங்கம்—மலை, யாறு, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, தானை.

பத்துவகைத்துவர்—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, மூச்சக்காசு, மாந்தளிர். (௧௦௬)

விட்டுணுவின்தசாவதாரம்—மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனம், பரசுராமன், தசரதராமன், கண்ணன், பலதேவன், கற்கி.()

வேளாளருடையபத்துவகைச்செய்கை—விருந்தோம்பல், ஆணைவழிநிற்றல், ஒழுக்கம், குருபத்தி, மனத்துமாசின்மை, கைக்கடனாற்றல், அரசர்க்கிறைகொடுத்தல், ஒற்றுமைகோடல், சுற்றம்பேணல், மாட்சிமையான வினைகளைத்தொடங்கல். (௧௦௮)

பெண்களான்மலரும் பத்துவகைமரம்—மகிழ் பெண்கள் சுவைத்தலாலும், பாலை நண்புசெய்தலாலும், பாதிரி சிந்தித்தலாலும், முல்லை நகைத்தலாலும், புன்னை ஆடுதலாலும், குரா அணைத்தலாலும், அசோகு உதைத்தலாலும், குருக்கத்தி பாடுதலாலும், மா பார்த்தலாலும், சண்பகம் நிழல்படுதலாலும் மலரும். (௧௦௯)

கரந்துறைகோள்கள்பத்து—சூரியன், சந்திரன், இராகு, கேது, பரிவேடமிரண்டு, வான்மீன், தூமகேது, வானவில்லிரண்டு. (இராகு கேது சாயாகிரகங்கள்.) (௧௧௦)

ஆண்பிள்ளைக்கவியுறுப்புப்பத்து—காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர், பிள்ளைக்கவி ஆசிரியவிருத்தத்தாலியற்றப்படும். (சப்பாணி-கைதட்டல்.) செங்கீரை-ஒருகாலைமடக்கி யொருகாலைநீட்டி யிருகைகளையும் நிலத்திலூன்றிக்கொண்டு தலைநிமிர்த்து முகமசைய ஆடுதல்; இது குழந்தைக்கு ஐந்தாம்மாதம் நிகழ்வது. கீர்-சொல். தால்-நாக்கு. தாலாட்டல் என்பதற்கு நாவையசைத்தலெனச்சிலர் பொருள் கொள்வர்; அது பொருந்தாது அது தாராட்டல் என ஒரு சொல். பாராட்டல் சீராட்டல் என்பனபோல. வாரானை-வருகை ஆனை-தொழிற்பெயர்விகுதி. அம்புலி-சந்திரன். (௧௧௧)

பெண்பிள்ளைக்கவியுறுப்பு பத்து—ஆண்பிள்ளைக் கவியுறுப்புப் பத்தில்—சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னு மூன்றுறுப்பையு நீக்கி எஞ்சிய எழுறுப்போடு, கழங்கு, அம்மானை, ஊசல் என்னும் மூன்றுறுப்பையுஞ் சேர்க்கப் பத்தாம். இக்கவிகளை மூன்றும்மாத முதல் இருபத்தொராமாசம்வரை ஒற்றித்த மாசங்களினும், ஐந்தாம் எழாம் ஆண்டினும், கேட்பிக்கலாகும். (௧௧௨)

௧௨. உயிர்மெய்வேதனை.

அனலுடனசனிசிதமாயுதம்விடயருந்து
புனல்வளிவிடத்தையுந்தான்புசிப்பிக்கும்பசியேதாகம்
நனியிகுமுனிவருமைகாட்டியபிணியினோடே
இணையும்வேதனையீராறுமெய்திடுந்துன்பமென்ப. (௧௧௩)

௧௨. தானைவகை.

தந்தியொன்றேதேரொன்றசாதியாம்புரவிமூன்று
வந்தடும்பதாதியைந்துவகுத்திடும்பத்தியென்ப
உந்துமப்பத்திமூன்றேயுறிற்சேனாமுகமென்றாகும்
முந்துசேனாமுகந்தான்மும்மடிகுல்மமாமே. (௧௧௪)

இதுவுமது.

மருவியகுல்மமூன்றுமடிதானேகணமதாகும்
கருதியகணமேமூன்றுகாட்டியவாகினிப்பேர்
பெருகுவாகினிதான்மூன்றுப்ருதனையாகுமென்ப
வருப்ருதனைதான்மூன்றுவகுத்திடுஞ்சமூவாகும்மே. (௧௧௫)

இதுவுமது.

பேரியல்சமூவேமூன்றுபிரளயம்பிரளயந்தான்
ஓர்மூன்றேசமுத்திரமாகுமுயர்சமுத்திரமோர்மூன்று
தேர்தருசங்குசங்குமூன்றதேயநீகமென்ப
சோர்விலாவநீகமூன்றேசொல்லுமக்குரோணியாமே. (௧௧௬)

௧௮. கணம்.

விரவுசாரணரேசித்தர்விஞ்சையர்பசாசர்பூதர்
கருடர்கின்னரரியக்கர்காந்தர்வர்சுரர்தைத்யர்
உரகராகாசவாசருத்தரகுருவோர்யோகர்
நிருதர்கிம்புருடர்விண்மீனிறைகணமூவாறுமே. (௧௧௭)

௧௮. மங்கலச்சொல்.

சீர்மணிபரிதியானைதிருநிலமுலகுதிங்கள்
கார்மலைசொல்லெழுத்துக்கங்கைநீர்கடல்பூத்தேர்பொன்
ஏருறுமிவைமூவாறுமிதிற்பரியாயப்பேரும்
ஆருமங்கலச்சொற்செய்யுளாய்ந்துமுன்வைக்கநன்றாம். (௧௧௮)

௧௮. குற்றம்.

பசியதிசயமேயுள்ளல்பயமேகையறவுமூப்புக்
கசிவுநீர்வேட்டல்வேண்டல்கதமதங்கேதத்தோடே
ஒசியுநோய்பிறப்பிறப்போடுவகையேயுறக்கமின்பம்
இசையுமீரொன்பான்குற்றமிவைதீர்ந்தோனிறைவனாமே. (௧௧௯)

௧௮. புராணம்.

மச்சமேகூர்மஞ்சைவம்வைணவம்வராகம்லிங்கம்
பத்மம்வாமனமேசாந்தம்பவிடியமாக்கினேயம்
கற்புளபிரமங்கைவர்த்தம்மேநாரதமார்க்கண்டம்
உற்றபாகவதமேகாருடம்பிரமாண்டமென்னூல். (௧௨௰)

உயிர்க்குரிய பன்னிருவகைவேதனை—அனல், இடியேறு, குளிர், ஆயுதம், நஞ்சு, மருந்து, நீர், காற்று, பசி, தாகம், முனிவருமை, பிணி. (திவாகரர் விரிவாகக்கூறியுள்ளார்.) (கசங)

பன்னிருவகைத்தானை—யானை ஒன்று, தேர் ஒன்று, குதிரை மூன்று, பதாதி ஐந்து கொண்டது ஒருபத்தி. பத்தி மூன்றுகொண்டது சேனாமுகம், சேனாமுகம் மூன்று கொண்டது குல்மம் (கசச)

குல்மம் மூன்று கொண்டது கணம். கணம் மூன்று கொண்டது வாகினி. வாகினி மூன்றுகொண்டது பிருதனை. பிருதனை மூன்று கொண்டது சமூ. (கசரு)

சமூ மூன்று கொண்டது பிரளயம். பிரளயம் மூன்றுகொண்டது சமுத்திரம். சமுத்திரம் மூன்று கொண்டது சங்கு. சங்குமூன்று கொண்டது அநீகம். அநீகம் மூன்று கொண்டது அக்குரோணி.

பதினெண்கணங்கள்—சாரணர், சித்தர், விஞ்சையர், பைசாசர், பூதர், கருடர், கின்னரர், இயக்கர், காந்தர்வர், சுரர், தைத்தியர், உரகர், ஆகாசவாசர், போகபூமியர், முனிவர், நிருதர், கிம்புருடர், விண்மீன். (கசஎ)

பதினெண்வகை மங்கலச்சொல்—சீர், மணி, பரிதி, யானை, திரு, நிலம், உலகு, திங்கள், கார், மலை, சொல், எழுத்து, கங்கை, நீர், கடல், பூ, தேர், பொன். இவையன்றி இவற்றின் பரியாயப் பெயர்களும் செய்யுளில் முன்வைத்தற்குரிய மங்கலச் சொற்களாம். மங்கலச்சொல் முதலியன பிற்காலத்துத் தோன்றியவை. (சகஅ)

யாக்கைக்குரிய பதினெண்வகைக்குற்றம்—பசி, அதிசயம், நினைத்தல், பயம், கையறவு, மூப்பு, வியர்த்தல், நீர்வேட்டல், வேண்டல், வெகுளி, மதம், கேதம், நோய், பிறப்பு, இறப்பு, உவகை, உறக்கம், இன்பம். (கையறவு-செயலின்மை.) (கசகூ)

பதினெண்புராணம்—மச்சம், கூர்மம், சைவம், வைஷ்ணவம், வராகம், இலிங்கம், பத்மம், வாமனம், காந்தம், பவிடியம், ஆக்கினேயம், பிரமம், பிரமகைவர்த்தம், நாரதீயம், மார்க்கண்டேயம், பாகவதம், காருடம், பிரமாண்டம். (கஉ0)

௨௧. இராச சின்னம்.

முடிகுடைசவரிதோட்டிமுரசுசக்கரமேகால்வாய்
கொடிமதில்தோரணநீர்க்குடமலர்மாலைசங்கு
கடலொடுமகரமாமைகயலிணையரிமாத்தீபம்
இடபமாசனமூவேழுமிறைதிருப்பொறிகளாமே. (௪௨௧)

௨௨ பேடியிலக்கணம்.

இச்சையாற்பேடிசெய்யுமிலக்கணமிப்பாற்கேண்மின்
நச்சவேபேசலோடுநல்லிசையோர்ந்துநிற்றல்
அச்சமொன்றில்லாதாகியாண்பெண்ணுமடைவியற்றல்
உச்சியிற்கையைவைத்தலொருகரந்தானேவீசல். (௧௨௨)

இதுவுமது.

விழிகளைவெருச்செய்தல்வெம்முலைநலித்துநிற்றல்
சுழலவேநோக்கனக்குநாணமொருக்தோமென்றொருத்தல்
கழிநடம்பயிற்றல்வேறுகாரணமில்லாக்கோபம்
அழுதிடனடுநீங்கியாங்கொருபக்கம்பார்த்தல். (௧௨௩)

இதுவுமது.

இரங்குதல்வருந்தல்யாருமிரங்கவேபேசிக்காட்டல்
குரங்கல்கோதாடல்கூடல்கூவிளிகொண்டுநிற்றல்
மருங்கினிற்கையைவைத்தல்வாங்குதல்பாங்கிதன்னைத்
திருந்தவேநோக்கலேலேலென்றலுஞ்செய்கையாமே. (௧௨௪)

௨௩. செய்யுளலங்காரம்.

உருவகமுவமையோடேயூன்றியவடிமடக்கே
விரிசுடர்நிலைமடக்கேவேற்றுமைவெளிப்படுத்தல்
மருவியநோக்கேயுட்கோள்வருந்தொகைமொழியேமற்றைத்
தருமிகைமொழியேவார்த்தைதன்மைவேறருத்தம்வைப்பே. (௪௨௫)

இதுவுமது.

சிறப்புதாநிலைசிலேடைமறுத்திடுநிலையின்வார்த்தை
நிறுத்துடனிலையிற்கூட்டமுவமாரூபகத்தினோடு
வெறுப்பிலாமகிழ்ச்சிசெய்துமிகுநுவலாநுவற்சி
உறுத்தியேயிடுந்தலைக்கூட்டுயரணிதெரிசனங்கள். (௧௨௬)

இதுவுமது.

உரைகெழுபாராட்டோடேயொருங்கியனிலையேயையம்
விரவியநிலைவாழ்த்தென்னவிதித்திடுமிருபத்தெட்டாம்
மருவியவலங்காரத்தைவரிசையிற்பாடவல்லோன்
புரிவுறமெழுத்துஞ்சொல்லும்பொருள்யாப்போடிவையறிந்தோன். ()

தமிழாசிரியனாவான்.

இந்தநல்லிலக்கணத்திலிசைந்திடுதுறையும்வல்லோன்
நந்தமுத்தமிழினோடுநாற்கவிபாடவல்லோன்
அந்தணற்குலத்துதித்தோன்வடிவமோடொழுக்கமுள்ளோன்
அந்தவாறையாண்டேகியாண்டெழுபானீங்காதோன். (௧௨௮)

அரசர்க்குரிய இருபத்தொரு சின்னங்கள்—முடி, குடை கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், தோரணம், பூரணகும்பம், மாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம். (௧௨௧)

பேடிக்குரிய இருபத்தைந்துவகை யிலக்கணம்—நச்சப்பேசல், நல்லிசையோர்தல், ஆண்பெண்ணுமடைவியற்றல், உச்சியிற்கையை வைத்தல், ஒருகைவீசிநடத்தல், (௧௨௨)

விழிகளைவேருச்செய்தல், முலையைவருத்திநிற்றல், கண்சுழலநோக்குதல், நாணுதல், தொந்தோமென்றுதாளமிடல், நடித்தல், காரணமின்றிக்கோபித்தல், அழுதல், ஒருபக்கம்பார்த்தல், (௧௨௩)

இரங்குதல், வருந்தல், யாவருமிரங்கும்படிபேசுதல், வளைதல், கோதாடல், கூடல், கூவிளிகொள்ளல், மருங்கிற்கையைவைத்தல், அதனை எடுத்தல், பாங்கியைநோக்கல், எலேலெலென்றுபாடல். (இந்த விலக்கணங்களை மாறுபடக் கூறுதலுமுண்டு.) (௧௨௪)

இருபத்தெட்டுச்செய்யுளலங்காரம்—உருவகம், உவமை, அடிமடக்கு, தீபகம், நிலைமடக்கு, வேற்றுமை, வெளிப்படை, நோக்கு, உட்கோள், தொகைமொழி, மிகைமொழி, சொற்பின்வருநிலை, தன்மை, வேற்றுப்பொருள்வைப்பு, (௧௨௫)

சிறப்பு, சிலேடை, மறுத்துமொழிநிலை, உடனிலைக்கூட்டம், உவமாருபகம், மகிழ்ச்சி, நுவலாநுவற்சி, ஒப்புமைக்கூட்டம், நிதர்சனம்,

புகழ்ச்சி, ஒருங்கியனிலை, ஐயம், கலவை, வாழ்த்து என்னும் இவ்வணிகளாம்.

நல்லாசிரியன் இலக்கணம்—மேற்படியலங்காரங்களோடு மற்றை எழுத்துச் சொற்பொருள் யாப்பு என்னும் நான்கினையும் அறிந்தவனும், (௧௨௭)

இவ்விலக்கணத்துறைகளில் வல்லவனும், முத்தமிழிலும், நாற்கவிகளிலும் வல்லவனும், உயர்குலத்துதித்தவனும், அழகும் ஆசாரமுமுடையவனும், முப்பதுவயசின்மேற்பட்டு எழுபதுவயசுக்குட்பட்டவனும் நல்லாசிரியனும். (முத்தமிழ்-இயல், இசை, நாடகம்.) ()

ஒருவர்செய்யுட்கோடன்மரபு.

வழுக்கடீர்கவிதைதன்னைவசையிலார்கொள்ளுங்காலைக்
கொழிப்பிரோரணங்கணட்டிக்கொடிமாடமெடுத்துயர்த்தி
விழுத்தகுகோலஞ்செய்துமென்றுகில்விரித்தபின்றைத்
தெழித்திடும்பல்லியந்தான்முழங்கிடெனத்திமிதிமென்ன. (சஉ௬)

இதுவுமது.

அட்டமங்கலங்களேந்தவரிவையர்பலரும்வாழ்த்த
மட்டவிழ்பாளைவேய்ந்தமணிக்குடந்தீபமல்கப்
பட்டபல்லுணமுளைத்தபாலிகைவிதானப்பந்தர்
இட்டமாமனையிற்சான்றோரியல்புளியிரீஇயபின்னை. (௧௯௦)

இதுவுமது.

மன்னுமாசனத்திருத்திவளமலிகவிதைசேட்டுப்
பொன்னொடுதுகிருந்தூசும்பூண்முடிகடகத்தோடும்
இன்னவைபலவுமீந்திட்டேழடிபுலவன்பின்போய்
நின்மெனநிற்றன்மன்னர்நில்மிசைவழக்கதாமே. (௧௯௧)

உலோபியர்க்குச் செய்யுட்வகை.

பாட்டுடைத்தலைவன்றானேபரிசிலீயாதகாலை
மீட்டொருபெரியனூர்பேர்வேறுசொல்லியற்றிச்சேர்க்கின்
ஈட்டுசெல்வங்கள்பொன்றியீங்கிவன்றிருவுமாய்ந்து
நாட்டியவவனுக்காகுநவின்றநூல்வழக்கிதாமே. (௧௯உ)

இதுவுமது.

பரிசிலீயாதபாவிபாமாலைசெம்பூச்சூட்டி
வரியரவுறைவன்மீகமாகாளிமுன்றிறன்னில்
உரியநீண்மனைப்புறத்திலொள்ளெரிகொளுத்தில்வீயும்
தெரியுமோராண்டிலென்றேசெப்பினன் * முனிவன்றானே. ()

௯உ: அறம்.

ஆதுலர்சாலையையமறுசமயத்தோர்க்குண்டி
ஓதுவார்க்குணவுசேலையுறுமேறுவிடல்காதோலை
மாதுபோகம்மகப்பால்மகப்பேறுமகவளர்த்தல்
வேதைநோய்மருந்துகொல்லாவிலைகொடுத்துயிர்நோய்தீர்த்தல். ()

இதுவுமது.

கண்ணடிபிறரிற்காத்தல்கன்னிகாதானங்காவே
வண்ணார்நாவிதரேசுண்ணமடந்தடங்கண்மருந்து
தண்ணீர்பெய்பந்தல்கோலத்தலைக்கெண்ணெய்சிறைச்சோறோடு
பண்ணணவிலங்கூணல்கல்பசுவின்வாயுறைகொடுத்தல். (௧௯௫)

இதுவுமது.

அறவையாம்பிணமடக்கலறவைத்தூரியம்வருந்தா
திறவியேயிடம்விடாமணிறையத்தின்பண்டநல்கல்
உறுதியாவுரிஞ்சுகின்றதறியிவையோதுமெண்ணான்
கறநிலையபிதானங்களம்பிகைசெய்யுமாறே. (௧௯௬)

---

* முனிவன்-அகத்தியன்.

புலவர் கவிதையை அரசர் அங்கீகரிக்குமுறைமை—குற்றமற்ற கவிதையை அரசர் ஏற்றுக்கொள்ளும்போது தோரணங்கள் நாட்டி, கொடியுயர்த்தி, கோலஞ்செய்து, பட்டு விரித்தபின் பலவாச்சியங்களும் முழங்க, (௧௨௯)

அட்டமங்கலங்களேந்த, பெண்கள் பல்லாண்டுகூற, பூரணகும்பமும் தீபமும் முளைப்பாலிகைகளும் விளங்க, விதானப்பந்தருள்ளே அறிஞர்களை ஆசாரப்படி அமர்த்தியபின், (விதானம்-மேற்கட்டி.)

தனதாசனத்திற்புலவனை இருத்தி, கவிதையைக்கேட்டு, புலவனுக்குப் பொன்முதலியவைகளைக் கொடுத்து, ஏழடிதூரம் அவனுக்குப் பின்போய் வழிவிட்டு, அவன் நிற்க என்றபின் நிற்றல் முறைமையாகும். (௧௩௧)

பரிசில்கொடாத உலோபியர்க்குச் செய்யுட் செய்வகை—கவிதை கேட்ட பாட்டுடைத்தலைவன் பரிசில் கொடானாயின், அக்கவிதையினின்றும் அவன்பெயரையும் ஊரையும் எடுத்துவிட்டு, வேறொருவனுடைய ஊரையும் பெயரையும் நாட்டின், பரிசில் கொடாதவனுடைய செல்வமெல்லாம் நீங்கிப் பின்னர் நாட்டப்பட்டவனுக்காகும். (௧௩௨)

பரிசில்கொடாத பாவியினுடைய பாமாலையை எழுதிச் செம்பூச்சூட்டிப் பாம்புப்புற்றிலும், காளிகோயிலிலும், தன்மனைப்புறத்திலும், எரித்தால் அவன் ஒருவருடத்தில் இறப்பான் என்று அகத்தியமுனிவர் கூறினர். (௧௩௩)

முப்பத்திரண்டு அறம்—ஆதுலர்க்குச்சாலை, ஐயம், அறுசமயத்தோர்க்குண்டி, ஓதுவார்க்குணவு, சேலை, ஏறுவிடுத்தல், காதோலை, பெண்போகம், மகப்பால், மகப்பேறு, மகவளர்த்தல், மருந்து, கொல்லாமல் விலைகொடுத்துயிர் நோய்தீர்த்தல், (ஆதுலர்-வறியவர்.)

கண்ணாடி, பிறரிற்காத்தல், கன்னிகாதானம், சோலை, வண்ணார், நாவிதர், சுண்ணம், மடம், தடம், கண்மருந்து, தண்ணீர்ப்பந்தர், தலைக்கெண்ணெய், சிறைச்சோறு, விலங்கிற்குணவு, பசுவுக்குவாயுறை, (நாவிதர்-அம்பட்டர். வாயுறை-மருந்து.) (௧௩௫)

அறவைப்பிண்மடக்கல், அறவைத்தூரியம், தின்பண்டநல்கல், ஆவுரிஞ்சுதறி. (ஆவுரிஞ்சுதறி-பசு தினவை ஒழித்துக்கொள்ளும் கட்டை.) (௧௩௬)

ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர்வரைக்கும்.

உற்றறிபுலனென்றூற்புன்மரமேயோரறிவிற்சீவன்
முற்றுமீரறிவிற்சீவன் முரணங்தேயாதிநாவாற்
செற்றமூவறிவிற்சீவன்சிதலெறும்பாதிமூக்காற்
சொற்றநாலறிவிற்சீவன் றும்பிவண்டாதிகண்ணால் (௧௩எ)

இதுவுமது.

வானவர்மனிதர்கீழ்போய்மாழ்கியநரகரோடு
கானுறைவிலங்குபுள்ளுக்காட்டுநாலறிவினோடே
ஊனமில்செவியுமாங்கேயுறுவினையறிவிற்சீவன்
மானமர்நோக்கினல்லாய்மனமுமொன்றதிகமாமே. (௧௩அ)

காப்புக்கு முன்னெடுக்குந் தெய்வம்.

காப்புக்குமுன்னெடுக்குங்கடவுள்மாலேயாகும்
பூப்புனைமலரின்செல்விபுனைபவனுதலானும்
காப்பவனுதலானுங்கதிர்முடிகடகத்தோடு
வாய்ப்பதாமதாணிபூணூல்வரிசையிற்புனைதலானும். (௧௩௯)

அருகன், சிவன், ஊர்தி முதலியன.

அருகனதூர்திதானேயம்புயம்படைநற்காட்சி
பெருகியஞானசீலம்பெருங்கொடியருளேயென்ப
மருமலர்க்கொன்றையார்க்குவாகனமிடபமாகும்
பரசொடுகெடியசூலம்பிநாகவில்படைகளாமே. (௧௪0)

மால், பிரமன், வேதியர் ஊர்தி முதலியன.

கரியமால்துவசமூர்திகலுழனென்றுரைக்கற்பாற்றே
வரிசிலையாழிசங்குவாள்கதைபடையைந்தாகும்
பிரமனதூர்தியன்னம்பெரும்படைபாசமாகும்
அருமறைகொடியேயாகுமந்தணர்தமக்குமாமே. (௧௪௧)

பலதேவன், இயமன், குபேரன், ஊர்திமுதலியன.

பரிவுளபலதேவற்குப்படைநாஞ்சில்கொடியேபெண்ணை
எருமையேயமன்றனூர்தியெறிபடைபாசந்தண்டாம்
கரியதோர்கூற்றினுக்குக்கடும்படைகணிச்சியாகும்
புரிநரவாகனம்பூம்புட்பகங்குபேரனூர்தி. (௧௪௨)

சூரியன், சந்திரன், சுப்பிரமணியர் ஊர்திமுதலியன.

குறைவிலாத்தனிக்காற்பொற்றேர்கூறியவருக்கனூர்தி
நிறைதருமதியினூர்திநீண்முத்துவிமானமென்ப
அறுமுகனூர்திதானேயானையுமயிலுமென்ப
உறுபடைவேலாமற்றையொண்கொடிகோழியாமே. (௧௪௩)

இந்திரனூர்தி முதலியன.

கரியயிராவதம்பூங்கற்பகக்காவேசோலை
உரியவெம்பரியின்பேரேயுச்சயிச்சிரவமாகும்
மருவுமண்டபஞ்சுதன்மைமாளிகைவசந்தமென்ப
பெருகியவுருமுமற்றைப்பெருங்கொடிபுரந்தரற்காம். (௧௪௪)

ஓரறிவுயர்—புல், மரம் முதலியன. இவைமெய்யாற் பரிசத்தை அறியும். ஈரறிவுயிர்—முரள், (அட்டை) நந்து முதலியன. இவை பரிசத்தோடு நாவினுற் சுவையையும் அறியும். மூவறிவுயிர்—கறையான், எறும்பு முதலியன. இவை அவ்விரண்டோடு மூக்கினுற் சுவையையும் அறியும். நாலறிவுயிர்—தும்பி, வண்டு, முதலியன. இவை அம்மூன்றனோடு கண்ணுல் உருவத்தையும் அறியும். ()

ஐயறிவுயிர்கள்—வானவர், மனிதர், நரகர், விலங்கு, புள்ளு இவர் அந்நான்கனோடு செவியினுல் ஒலியையும் அறிவர். இவர்க்கு மனத்தாலறியும் அறிவும் விசேடமாக உண்டு. மக்கள் ஆறறிவு உடையவர், 'மக்கள் தாமே ஆறறி உயிரே' என்றனர் ஆசிரியர் தொல்காப்பியனுர். இது சில விலங்குகட்கும் பறவைகட்கும் உண்டு. ()

காப்புக்கு முன்னெடுக்குங் கடவுள்—இலக்குமிக்கு நாயகரா யிருத்தலானும், காவற்கடவுளா யிருத்தலானும், முடிமுதலிய புனைதலானும் காப்புக்கு முன்னெடுக்குங் கடவுள் விட்டுணுவாகும். (கநகூ)

அருகன்வாகனம்—தாமரைப்பூ. படை - காட்சி, ஞானம், சீலம். கொடி - அருள்.

சிவன்வாகனம்—இடபம். படை - மழு, சூலம், பினுகவில். (கசo)

விட்டுணுவின்வாகனம்—கருடன். கொடி - கருடன். படை - வில், சக்கரம், சங்கு, வாள், தண்டு என்னும் பஞ்சாயுதங்கள்.

பிரமன்வாகனம்—அன்னப்பறவை. படை - பாசம். கொடி-வேதம் இது பிராமணருக்குமாம். (கசக)

பலதேவன்படை—கலப்பை. கொடி - பனை.

யமன்வாகனம்—எருமை. படை-பாசம், தண்டு.

காலன்படை—கணிச்சி.

குபேரன்வாகனம்—நரவாகனம். புட்பகவிமானம். (கசஉ)

சூரியன் ஊர்தி—ஒற்றையாழித்தேர்.

சந்திரன் ஊர்தி—முத்துவிமானம்.

சுப்பிரமணியர் ஊர்தி—யானை, மயில். படை - வேல். கொடி-கோழி. (கசங)

இந்திரன் ஊர்தி—ஐராவதயானை. சோலை-கற்பகச்சோலை. குதிரை-உச்சயிச்சிரவம். மண்டபம்-சுதன்மை. மாளிகை - வசந்தம். கொடி - இடியேறு. (கசச)

காளி, துர்க்கை, மூதேவி ஊர்தி முதலியன.

அழகியகாளியூர்தியாளியேதுவசம்பேயாம்
பழுதறுதுர்க்கைபற்றும்படைவாளாங்கலையேயூர்தி
கெழுமூதேவியூருங்கிளர்ந்தவாகனத்தினுமம்
கழுதையாம்படைதுடைப்பங்காக்கையம்பதாகைதானே. (௧௪௫)

சத்தமாதர்கள் ஊர்தியும், படையும்.

அன்னமேயிடபந்தோகையணிமயில்கலுழன்சீயம்
பின்னியல்யானையோடுபேயெழுபெண்களூர்தி
மன்னுநூன்மறைபினாகவார்சிலைசத்தியாழி
துன்னியகலப்பைவச்ரஞ்சூலம்வெம்படைகளாமே. (௧௪௬)

மூவரசர்கள் கொடியும் மாலையும், புலவர்கொடியும்.

மன்னியசேரனுக்குவரிசிலைக்கொடிபனந்தார்
பொன்னியந்துறைச்சோழற்கேபுலிக்கொடியாத்திமாலை
தென்னவன்றனக்குத்தானேசேற்கொடிவேப்பந்தாராம்
பன்னியகேழல்வேழப்பதாகையும்புலவருக்கே. (௧௪௭)

பட்டத்து யானையிலக்கணம்.

காலொருநாலுகோசங்கைவாலேழ்நிலத்திற்றேய்ந்து
பாலொடுசெங்குபோலும்பதத்துகிர்விதத்திற்சூழ்ந்து
வாலொடுகொன்மெய்கைவெண்மருப்பினுலுயிரைக்கொன்றே
ஏலவேழுயர்ந்தொன்பானீண்டீரைந்துசுழுத்ததாகி. (௧௪௮)

இதுவுமது.

பெறுமுறைமுன்புயர்ந்துபின்பணிந்தழகிதாய
தறுகண்ணதாகிச்சூழிசார்ந்தமத்தகத்ததாகி
முறநிகர்கன்னதானமூரிமால்யானைதானே
அறநெறிசெலுத்துஞ்செங்கோலரசுவாவாகுமென்ப. (௧௪௯)

பட்டத்துக்குதிரையிலக்கணம்.

மாதர்தம்மனத்தையொத்தமனத்ததாய்வாழையுற்ற
சோதிலாமடலேபோலச்சொழுந்துளசெவியதாகிப்
பாதமுன்வெந்நெருத்துப்பகர்முகம்பான்மைத்தாகி
ஓதுமெண்பத்திரண்டங்குலியுயர்பரிமன்னர்க்காம். (௧௫௦)

அதியுகம்முதலியன.

ஒருபதினாயிரம்பத்துரையதியுகமென்றாகும்
வருமதியுகந்தான்மீளமதித்தநூறாயிரங்கள்
பிரமமாம்பிரமநூறாயிரமதுகோடிதானே
அரியதோர்கோடிபத்தாமர்ப்புதமென்றுசொல்லும். (௧௫௧)

இதுவுமது.

கருதருகோடிநூறுகணகமாங்கணகம்பத்துப்
பெருகியகற்பமாகும்பேணுமக்கற்பம்பத்துத்
திருமிகுநிகற்பமாகுநிகற்பமீரைந்துசங்கம்
தாமுளசங்கம்பத்துச்சமுத்திரமென்றேசாற்றும். (௧௫௨)

காளியூர்தி—சிங்கம். கொடி-பேய்.
துர்க்கையின்படை—வாள். ஊர்தி - கலைமான்.
மூதேவியின்வாகனம் - கழுதை. படை-துடைப்பம். கொடி-காகம்.')

சத்தமாதர்களுள்ளே அபிராமிக்கு அன்னமும், மாகேசுவரிக்கு இடபமும், கௌமாரிக்கு மயிலும், வைணவிக்குக் கருடனும், வராகிக்குச் சிங்கமும், மாகேந்திரிக்கு யானையும், மாகாளிக்குப் பேயும் வாகனங்களாகும். இவர்களுக்கு முறையே வேதமும், பினாகவில்லும், வேலும், சக்கரமும், கலப்பையும், வச்சிரமும், சூலமும் படைகளாம். (கசசு)

சேரன்கொடி—வில்லு. மாலை - பனந்தார்.
சோழன்கொடி—புலி. மாலை - ஆத்திமாலை.
பாண்டியன்கொடி—மீன். மாலை - வேப்பந்தார்.
புலவருடையகொடி—பன்றி. யானை. (கசஎ)

அரசுவாவினிலக்கணம்—நான்கு கால்களும், கோசமும், துதிக்கையும், வாலுமாகிய எழுறுப்பும் நிலத்திலே தோய்ந்து, காலில் வெண்மையான நகமுடையதாய், வால் நாலுகால் உடம்பு துதிக்கை இரண்டு கொம்பு என்னுமிவற்றுற் சொல்லவல்லதாய், எழுமுழமுயர்ந்து ஒன்பதுமுழ நீண்டு பத்துமுழச்சுற்றுடையதாய், (கசஅ)

முற்பாகமுயர்ந்து பிற்பாகந் தாழ்ந்து அழகியதாய், தறுகண்ணினையும் சூழிசார்ந்த மத்தகத்தினையு முடையதாய், சுளகுபோன்ற செவியினையும் மும்மதத்தையு முடையதாயுள்ள யானை அரசர்க்குரிய அரசுவாவாகும். (மும்மதம்-கன்னமதம், கபோலமதம், பீஜமதம்.) தறுகண்-அஞ்சாமை; சுளகு-முறம். (கசகூ)

அரசர்க்குரிய குதிரையினிலக்கணம்—மகளிர் மனம்போன்ற மனமுடையதாய், வாழைப்பூ மடல்போன்ற செவியுடையதாய், நான்கு கால்களும் முன்புறமும் முதுகும் பிடர்த்தலையும் முகமும் வெண்மையுடையதாய், எண்பத்திரண்டங்குல உயரமுடையதாயுள்ள குதிரை அரசர்க்குரிய குதிரையாம். (கரு௦)

நூறுயிரங் கொண்டது அதியுகம். அதியுகம் நூறுயிரங்கொண்டது பிரமம். பிரமம் நூறுயிரங் கொண்டது கோடி. கோடி பத்துக் கொண்டது அர்ப்புதம். (கருக)

கோடி நூறுகொண்டது கணகம். கணகம் பத்துக்கொண்டது கற்பம். கற்பம் பத்துக்கொண்டது நிகற்பம். நிகற்பம் பத்துக்கொண்டது சங்கம். சங்கம் பத்துக்கொண்டது சமுத்திரம். (கருஉ)

120795